www.padippakam.com

16-31 மார்ச் '92 ரூ. 2.50

'ஜெ'-யின் சித்து வேலைகள்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## பிச்சை எடுக்கும் காங்கிரசு



## ஒரு 'தேசிய' அவமானம்

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் வக்கிரம் போலீசு பாராமுகம்

இராயப்பன்பட்டி - அலோசியஸ் மேல்நிலைப் பள்ளி! மதுரை மாவட்டம் பாளையம் தாலுக்காவிலும், சுற்றுப்புறத்திலுள்ள கேரள மலைப்பகுதியிலும் கட்டுப்பாடு ஒழுக்கத்திற்கு பெயர் பெற்ற கிருத்தவ பள்ளிக்கூடம். இந்த ஒரே நம்பிக்கையில் தான் கேரளா - நெடுங்கண்டத்துக்கு அருகில் கூலி வேலை பார்க்கும் கருப்பையா, தன் மகன் பாஸ்கரனை கடந்த வருடம் இந்தப் பள்ளியில் சேர்த்தார். சமீபத்தில் அவரது நம்பிக்கையில் பேரிடி விழுந்துவிட்டது!

பாஸ்கரன்! இதே நிறுவனத்தின் விடுதியில் தங்கி +2 படிக்கும் 17 வயது மாணவன். கடந்த பள்ளித் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று வந்தான். திடீரென்று ஒரு வாரமாக எதையோ இழந்து விட்டவன் போல விரக்தியாக இருந்திருக்கிறான். பள்ளிப் பருவ இளைஞனுக்குரிய குறும்பு, சந்தோஷம் எதுவுமில்லை. நெருங்கிய நண்பர்களிடம் கூட பேசுவதில்லை! அப்படி என்ன ஆகிவிட்டது? யாருக்கும் காரணம் புரியாத நிலையில் ஒருநாள் 10 அரளி விதைகளை தின்று தற்கொலைக்கு முயற்சித்தான். விசயமறிந்த தலைமையாசிரியர் அருகிலுள்ள ஓமியோபதி டாக்டர் ராஜனை அழைத்து வந்து இரவு 11 மணி தொடங்கி விடியும் வரை போராடி தீவிர சிகிச்சை அளித்தபின் உயிர் பிழைத்து விட்டான்!

நன்றாகப் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவன் திடீரென தற்கொலைக்கு முயற்சித்திருப்பதன் காரணம் என்ன? வழக்கமான காதல் தோல்வியா? வறுமையா? எதுவுமில்லை! இவற்றை விடக் கொடூரமானது, வக்கிரமானது! அமெரிக்க ஏகாதிபத்தியப் பரமபிதாக்களால் படைக்கப்பட்ட ஓரினச் சேர்க்கை (HOMO SEX) தான் காரணம். இதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த பாஸ்கரன் என்ற ஆபாசப் பொறுக்கி, மாணவன் பாஸ்கரனை கட்டாயப்படுத்தியும், 'பரீட்சையில் பெயிலாக்கி விடுவேன்' என்று மிரட்டியும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்தி வந்திருக்கிறான்! தன்னை இழிவான நிலைக்கு ஆளாக்கிய ஒரு அயோக்கியனை எதிர்த்துப் போராட துணிச்சலையோ, வழிமுறைகளையோ அந்த மாணவனுக்கு அவன் படிக்கும் அடிமைக் கல்விமுறை கற்றுத் தரவில்லை! அதனால் மிக எளிதாக தன் உயிரை மாய்த்துக் கொள்ள வழி தேடியிருக்கிறான்!

இவ்வளவு பிரச்சினை முற்றி மாவட்டம் முழுவதும் செய்தி வெளியான பிறகும் கூட சம்மந்தப்பட்ட ஆசிரியர் மீது பள்ளி நிர்வாக ரீதியாகவோ, கிரிமினல் சட்டரீதியாகவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ''இதுவரை புகார் எதுவும் வரவில்லை! வந்தால் உடனே நடவடிக்கை எடுப்பேன்'' என்று திமிராக பத்திரிக்கைக்கு பேட்டி கொடுக்கிறார் சப்-இன்ஸ்பெக்டர் இன்பக்குமார்! பள்ளியின் கௌரவத்தைக் காப்பாற்றவே போலீசில் புகார் கொடுக்கவில்லை என்று சமூகவிரோத வக்காலத்து வாங்குகிறார் தலைமையாசிரியர் அருள்பிரகாசம்!

21ம் நூற்றாண்டை நோக்கி ஓடுகிறோம் என ராஜீவ் கும்பல் போதை மருந்து, டி.வி. வீடியோ, இறக்குமதி ஆபாசப்படம், பியூட்டி பார்லர், இரவு விடுதிகள் என்று வீதிதோறும் விதைத்தது. இன்று இவை முளைத்து வளர்ந்து எய்ட்ஸ், ஓரினச் சேர்க்கை என்று கிளைவிடத் தொடங்கிவிட்டது. ஆபாசக் கலாச்சாரத்தையும், இதன் தாசர்களான தேசத்துரோகக் கும்பலையும் வெட்டி வீழ்த்தாமல் இத்தகைய கொடுமைகளை ஒழிக்க முடியாது!

**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**பாளையம் வட்டம்.**

# தனிப் பயிற்சிமுறை ஆசிரியரை சீரழிக்கும்

*கல்விக்கூடங்கள் கொள்ளைக் கூடாரமாய் மாறிவிட்டன என்பதற்கு விருத்தாசலத்திலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மேலும் ஒரு எடுத்துக்காட்டு. இப்பள்ளியின் தலைமையாசிரியை மல்லிகாதேவி மற்றும் விலங்கியல் ஆசிரியை தமிழ்ச் செல்வியின் அட்டகாசங்கள் அளவிடற்கரியது.*

*இவ்வாண்டு (91-92) நடந்த பள்ளி சேர்க்கையின்போது பெற்றோர் ஆசிரியர் கழக நன்கொடை என்ற பெயரில் இவர் அடித்த கொள்ளை 30 ஆயிரத்தையும் தாண்டும். 400 ரூபாய் பெற்றுக் கொண்டு அதற்குரிய ரசீதின் அடிக்கட்டையில் ரூ.200 என்று எழுதிவிட்டு 200 ரூபாயை சுருட்டிக் கொள்கிறார். இதை பெற்றோர் ஆசிரியர் கழகம் நகல் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தும் நடவடிக்கை ஏதும் இல்லை.*

*விலங்கியல் ஆசிரியை தமிழ்ச் செல்வியோ ரூ.10 பெறுமானமுள்ள நோட்டை 30, 35 ரூபாய் என விற்கிறார். மேலும் நோட்டுத் தருகிறேன் என 30 ரூபாய் வாங்கி நோட்டே தராமலும் ஏப்பம் விடுகிறார். வகுப்பு நேரத்தில் பாடம் நடத்தாமல் வெளியே சென்று சக ஆசிரியையுடன் அரட்டை அடிப்பதே இவரது வாடிக்கை. செய்முறைத் தேர்வில் மதிப்பெண் போடாமல் பெயிலாக்கி விடுவேன் என மிரட்டியே அனைத்து காரியங்களையும் சாதித்துக் கொள்கிறார். மகளிர் பள்ளி ஆய்வாளர் சோதனையின்போது மாணவிகள் இவரைப் பற்றி கொடுத்த புகார் அனைத்தும் உண்மை என நிரூபணமானது. தனக்கு எதிராக சாட்சி சொன்ன மாணவிகளை நடுத்தெருவில் வைத்து அடிக்க சில ரௌடிகளை ஏற்பாடு செய்தும் இருக்கிறார்.*



*தமிழ்ச் செல்வியின் கணவர் மாயவேல், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இயற்பியல் ஆசிரியராக உள்ளார். தனது மனைவியைப் போலவே இவரும் அட்டூழியம் புரிந்து வருகிறார். இவர் வன்னிய சாதியைச் சேர்ந்தவர். பள்ளியின் தலைமை ஆசிரியரோ தாழ்த்தப்பட்டவர். எனவே இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத இவர் சாதிப் பகைமையைத் தூண்டிவிட்டுக் கொண்டுள்ளார். இதுவன்றி டியூசன் என்ற பெயரில் தனது வீட்டு மாடியில் ஒரு வகுப்பறையே நடத்துகிறார். டியூசன் நடத்தாமல் மாணவ - மாணவிகளை தனியாக அரட்டை அடிக்க விட்டுவிட்டு தனது மனைவியுடன் டி.வி. பார்க்கிறார். பாடமும் நடத்தாமல் டியூசன் என்ற பெயரில் பணம் பிடுங்குவதோடு டியூசனுக்கு வராத மாணவர்களையும் மிரட்டி ரூ.300 வசூலிக்கிறார்.*

*இவையெல்லாம் மேலதிகாரிகளின் சோதனை மூலம் நிரூபிக்கப்பட்ட பின்னும் அப்படியே தொடர்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளைத் திறந்துவிட்டு கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் தானாக இவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி நிர்ப்பந்தமான போராட்டங்களை மாணவ - மாணவிகளும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.*

படிப்பகம்

www.padippakam.com

திய
ஜனநாயகம்

ார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

9

-15 மார்ச் '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US$ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

ரா.சண்முகராசு,
ஆசிரியர், புதிய ஜனநாயகம் ,
சாமியார் தோட்டம்,
பூலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# உலகப்பொது எதிரி அமெரிக்கா

அமெரிக்க இராணுவத் தலைமையகம் ''பெண்டகன்'' அந்நாட்டின் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கான யுத்த தந்திரத் திட்டம் ஒன்று தயாரித்துள்ளது. இம்மாதம் அமெரிக்க அதிபர் ஒப்புதல் பெறுவதற்காக அமெரிக்காவின் யுத்த வெறிபிடித்த அதிபர் ஜார்ஜ் புஷ் முன்பு அது வைக்கப் பட்டுள்ளது. அநேகமாக அவரும் அத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அடுத்தடுத்து நடந்த ஆட்சிக் கவிழ்ப்புகளைத் தொடர்ந்து முடிவுக்கு வந்த பனிப்போர்; வளைகுடாவில் பன்னாட்டுப் படைகளுக்குத் தலைமை ஏற்று ஈராக்குக்கு எதிராக நடத்திய பேரழிவுப்போர்- ஆகியவற்றில் பெற்ற வெற்றிகளின் திமிரோடு தயாரிக்கப்பட்டது அமெரிக்காவின் இந்த இராணுவத் திட்டம். இந்த இரகசிய ஆவணத்தை அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் நாளேடு வெளியிட்டுள்ளது.

''அமெரிக்காவின் மேலாதிக்கத்தை எந்த ஒரு தேசமோ, தேசங்களின் கூட்டணியோ எதிர்ப்பதை ஆக்கபூர்வமான நடவடிக்கை அல்லது போதிய அளவு இராணுவ பலத்தைக் கொண்டு முறியடிக்கவேண்டும்; அதன் மூலம் அமெரிக்க மேல்நிலை வல்லரசு மட்டுமே ஆதிக்கம் வகிக்கக் கூடிய நிலையை நிரந்தரமாக்கி விடவேண்டும் - இதுதான் பெண்டகன் அறிக்கையின் பரிந்துரை'' என்கிறது நியூயார்க் டைம்ஸ் நாளேடு.

''நமது தலைமையை முன்னேறிய நாடுகள் எதிர்த்துப் போட்டியிடாதவாறு அல்லது நிலைநாட்டப்பட்டுள்ள அரசியல், பொருளாதார ஒழுங்கு முறையைக் கவிழ்த்துவிட முயலாதவாறு அந்நாடுகளின் நலன்களை நாம் போதிய அளவு கவனித்துக்கொள்ள வேண்டும். ஒரு பெரிய பிராந்திய அல்லது உலகு தழுவிய பாத்திரம் வகிக்க விரும்பும் அளவுக்கு வாய்ப்புடைய போட்டியாளர்களைக்கூட அவ்வாறு செய்வதைத் தடுக்கும் ஏற்பாட்டை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். மேற்கு ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ, முன்னாள் சோவியத் ஒன்றியத்திலோ ஒரு போட்டி மேல்நிலை வல்லரசு உருவாவதற்கு அனுமதிக்கவே கூடாது'' என்கிறது பெண்டகன் ஆவணம்.

''மேலும் அணு ஆயுதப் பரவலை எவ்விதத்திலேனும் தடுத்தாக வேண்டும். குறிப்பாக வடகொரியா, ஈராக், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகள் அணு ஆயுதங்கள் உட்பட பெருந்திரள் அழிவுக்கான ஆயுதங்கள் தயாரிப்பதை இராணுவத் தாக்குதல் நடவடிக்கை எடுத்தாவது தடுத்திட வேண்டும். தெற்கு ஆசியாவின் ஏனைய அரசுகள் மீதும் இந்து மாகடல் பகுதியிலும் இந்தியா மேலாதிக்கம் பெறப் பிரயாசைப்படுவதைத் தடுக்க வேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தில் அணு ஆயுதப் பரவலைத் தடுப்பதற்காக இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே ஒரு 'அணு ஆயுத தடை ஒப்பந்தம்' போட வேண்டும். அவ்விரு நாடுகளின் அணுசக்தித் திறன் - வசதிகளை, ஆலைகளை சர்வதேச அணு சக்தி நிறுவனத்தின் கண்காணிப்பில் வைக்கவேண்டும். தென்மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் ஒரு உறுதியான பாதுகாப்பு நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா - பாகிஸ்தான் இடையே ஓர் ஆக்கபூர்வமான இராணுவ உறவு இருக்க வேண்டியது முக்கியமானதாகும்'' என்கிறது பெண்டகன்.

பெண்டகன் ஆவணத்தில் இருந்து தரப்படும் இந்தக் குறிப்புகளே அமெரிக்காவின் உலகு தழுவிய இராணுவ ஆதிக்க நோக்கங்களை தெளிவுபடுத்தி விடுகின்றன. வேறு விளக்கங்களே தேவையில்லை. ஈராக்குக்கு எதிரான வளைகுடா போரையாவது பன்னாட்டுப் படைகளைத் திரட்டி, ஐ.நா.சபையின் 'ஒப்புதலோடு' நடத்தியது, அமெரிக்கா. ஆனால் இந்தப் புதிய பெண்டகன் திட்டத்தை தானே பாசிச வெறியோடு வகுத்து அமுலாக்க உள்ளது. ஏற்கனவே இதை அமுலாக்கவும் துவங்கிவிட்டது. ஈராக்கின் ஆயுத வசதிகளை அழிப்பதற்காக தனி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட முடிவெடுத்துள்ளது. தென் கொரியாவில் தானே அணு ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கும்போதே, அதன் விவரங்களையும், மேற்பார்வையிடவும் அனுமதியாத போதே, வடகொரியாவை மிரட்டுகிறது. ஈரானுக்கு எதிராக தடை முற்றுகைத் தீர்மானத்தை மட்டுமே ஐ.நா. முன்பு நிறைவேற்றியது. அதைப் பயன்படுத்திக் கொண்டு வளைகுடா பிராந்தியத்தில் கடற்படையை நிறுத்தி சர்வதேச கப்பல் போக்குவரத்தையே மிரட்டி வருகிறது, அமெரிக்கா. இப்போது வடகொரியாவில் இருந்து ஈரானுக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் கப்பலில் ''ஸ்கட்'' ரக ஏவுகணைகளுடன் தளவாடங்களும் இருப்பதாகக் கூறி அக்கப்பல் வளைகுடா பிராந்தியத்துக்குள் நுழையுமானால் சோதனையிடவும் அவசியமானால் தாக்கவும் போவதாக அமெரிக்கா மிரட்டுகிறது. லிபியாவை வம்புக்கிழுத்து அடாவடியாகத் தாக்க முயலுகிறது.

''எக்காரணம் கொண்டும் இந்தியாவின் சுயாதிபத்தியத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்'' என்று நாடாளுமன்றத்தில் நரசிம்மராவ் சவடால் அடித்துக் கொண்டிருந்த அதே சமயம் இந்திய வெளியுறவுச் செயலாளர் அதை புஷ்ஷின் காலடியில் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறார். ''அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தம்'' குறித்து அமெரிக்கா, ருசியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளின் மாநாட்டிற்கு இரகசியமாக ஒப்புக் கொண்டுள்ளார்; இந்துமாக் கடலை அமைதி மண்டலமாக்கவும், டிகோகார்ஷியா தளத்தை அமெரிக்கா காலி செய்யவும் வற்புறுத்தி வந்தது போய் அமெரிக்கக் கடற்படையுடன் இங்கு கூட்டுப் பயிற்சி நடத்த ஒப்பந்தம் முடித்துள்ளார். அமெரிக்க-பாக். இராணுவக் கூட்டு நீடிக்கும்போதே அமெரிக்காவுடன் இராணுவ சரசமாடுவதால் ஏற்படும் தர்மசங்கடமான நிலையில் இந்தியா திணறுகிறது.

இப்படி உலகின் பலநாடுகளை அடிபணியச் செய்வதில், உலகப் போலீசுக்காரனாக அடாவடித்தனம் செய்வதில் தற்காலிகமாக அமெரிக்க மேல்நிலை வல்லரசு வெற்றி பெறலாம். ஆனால் உலகை ஆளப்பிறந்தவர்கள் ஜெர்மானியர்களே, ஆரியர்களே என்று கிளம்பிய இட்லரின் முடிவு என்னவானது? உலகுக்குப் பேரழிவை ஏற்படுத்தியதோடு தானும் அழிந்தான். அதே கதிதான் அமெரிக்கா மேல்நிலை வல்லரசுக்கும் நேரும். ●

படிப்பகம்

www.padippakam.com

# ‘ஜெயா’வின் அரசியல் சித்து வேலைகள்

***கவர்ச்சித் திட்டங்கள், அரசியல் சித்து வேலைகள், அடாவடித் தனங்களின் மூலம் மக்களின் கவனத்தை திசைதிருப்பி, தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வது என்பது பாசிஸ்டுகள் வழக்கமாகப் பின்பற்றும் உத்தி. அதன்படியே, பாசிச எம்.ஜி.ஆரின் பாணியின் தனது அரசியல் சித்து வேலைகளைத் துவக்கியுள்ளார், ஜெயா.***

கடப்பாறையை விழுங்கிவிட்டு கஷாயம் குடித்த கதைதான் பாசிச ஜெயாவின் இன்றைய நிலைமை. அன்றாடம் செய்தித்தாள்களைப் புரட்டினால் எந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ. யாரை அடித்தார் என்பது வானிலை அறிக்கை போல தவறாமல் இடம் பெற்றுவிடுகிறது. அரசு அதிகாரிகளிலிருந்து அப்பாவி பொது மக்கள் வரை எல்லோருமே எம்.எல்.ஏ.க்களின் அட்டகாசத்திலிருந்து தப்ப முடிவதில்லை. பாசிச ஜெயாவும் இவற்றைக் கண்டு கொண்டதாகவும் தெரியவில்லை.

பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களுக்குள்ளாகவே மக்களின் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் சம்பாதித்துக் கொண்டுவிட்டது. ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம் என்று தேர்தலின் போது சவடால் அடித்த ஜெயா ஆட்சியில், விலைவாசிகள் விண்ணை முட்டுகின்றன. விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்கிற ஜெயா கும்பலின் லாவணி மக்களிடம் எடுபடவில்லை. ரேஷன் கடை அரிசி விலையேற்றம், மின் கட்டண உயர்வு, அநியாய பேருந்துக் கட்டண உயர்வு, காலையில் அறிவித்து மாலையில் பால் விலையை உயர்த்திய அக்கிரமம் முதலானவற்றால் உழைக்கும் மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

இவை ஒருபுறமிருக்க, தமிழகமே ரௌடி ராஜ்ஜியமாகிவிட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, வழிப்பறி, கடத்தல், கற்பழிப்புகளும், ரௌடிகளின் அட்டகாசங்களும் பெருகிவிட்டன. சாராயத்தை ஒழித்துவிட்டதாக மார்தட்டிக் கொள்ளும் ஜெயா ஆட்சியில், கள்ளச் சாராயம் பொங்கி வழிந்தோடுகிறது. சேலத்தில் தொடங்கிய கள்ளச் சாராய சாவுகள் இப்போது மயிலாடுதுறை வரை நீண்டுள்ளது. ஆளுங்கட்சி குண்டர்களின் ஆசியோடு சிறு நகரத் திரையரங்குகள் கூட புளூ ஃபிலிம் தியேட்டர்களாகி விட்டன. விபச்சாரம், போதை மருந்து, சூதாட்ட விடுதிகள் பூத்துக் குலுங்கத் தொங்கிவிட்டன.

காவிரி நீர் பிரச்சினையில் காங்கிரசோ சேர்ந்து பாசிச ஜெயா கும்பல் துரோகமிழைத்துவிட்ட பிறகு, இவ்வாண்டு குறுவை சாகுபடிக்கு காவிரியில் தண்ணீருக்கு ஏங்கி தமிழக விவசாயிகள் தவிக்கிறார்கள். கர்நாடக இனவெறி வன்முறை கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் அளிப்பதிலும், பாதுகாப்பு அளிப்பதில் காங்கிரசும் ஜெயா கும்பலும் அறிக்கைகளைத் தவிர வேறொன்றையும் செய்யவில்லை. பின்னிமில், ஸ்டாண்டர்டு மோட்டார் ஆலைகளைத் திறக்க உரிய நடவடிக்கை ஏதுமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையோடு வக்கிரமாக விளையாடி வருகிறது ஜெயா அரசு. அடிப்படைத் தேவைகளைக் கோரி சாதாரண போராட்டம் நடத்தனால் கூட ஜெயா அரசு மிருகத்தனமாக ஒடுக்குகிறது. அண்மையில், தேனி வட்டாரத்தில் குடிநீர் கேட்டு பேருந்து மறியலில் ஈடுபட்ட மக்கள் மீது போலீசார் தடியடி நடத்தி கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்கினர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியல் எதிரிகளை வேட்டையாடும் நோக்கத்தோடு மிகக் கொடிய ‘தடா’ சட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தடா சட்டத்தை ஏவி எதிர்க் கட்சியினரைப் பழிவாங்குவதை எதிர்த்து தி.மு.க. நடத்திய பேரணி மீது பாசிச ஜெயா கும்பல் திட்டமிட்டே கொலைவெறித் தாக்குதலை நடத்தியது.

கடைசியாக, ஆளும் ராணிக்குரிய ஏகபோகத்துடன் மகாமகக் குளத்தில் நீராடச் சென்ற ஜெயா, தனது பாவம் தீர நூற்றுக்கும் மேற்பட்டோரை நரபலி கொடுத்தார். மகாமகச் சாவுகளுக்கு உரிய நிவாரணம், விசாரணை கோரிப் போராடக்கூட எதிர்க் கட்சிகளுக்கும், கட்சி சாராத அமைப்புகளுக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

இத்தகைய மக்கள் விரோத, பார்ப்பன-பாசிச அடக்குமுறை ஆட்சியின் மூலம் ஜெயா கும்பல் மக்களிடமிருந்து மேலும் அன்னியப்பட்டுப் போயுள்ளது. அதன் காகிதப் பூ கவர்ச்சித் திட்டங்களும், கொள்கை அறிவிப்புகளும் வெகு விரைவிலேயே அம்பலப்பட்டு தோல்வியடைந்துவிட்டன. ஆனால் பாசிஸ்டுகள் ஒருபோதும் தங்களது தோல்வியை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அரசியல் சித்து வேலைகள், அடாவடித்தனங்களின் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, தமது அதிகாரத்தைத் தக்கவைத்து கொள்வது அவர்கள் வழக்கமாகப் பின்பற்றும் உத்தி. அதன்படியே, பாசிச எம்.ஜி.ஆரின் பாணியில் தனது அரசியல் சித்து வேலைகளைத் துவக்கியுள்ளார், பாசிச ஜெயா.

கர்நாடக கலவரத்துக்குப் பிறகு காவிரி நீர் பிரச்சினையில் இனிமேல் பேச்சுவார்த்தையே கிடையாது என்று கொக்கரித்த ஜெயா, பின்னர் காங்கிரசின் நிர்பந்தங்களுக்குப் பணிந்து மீண்டும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டு தமிழக உரிமையைத் தாரை வார்த்தார். இந்தத் துரோகம் அம்பலமாவதற்குள், திடீரென மந்திரி சபையில் மாற்றத்தைக் கொண்டு வந்து பரபரப்பூட்டினர். கிராமத் தொழிலமைச்சரான ஆசிப், அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டு கடையநல்லூர் மீரான் புதிய அமைச்

**மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று கொள்ளும் ஜெயாவின் நாடகம்; பாசிச அரசியல் சித்து வேலை.**



படிப்பகம்

www.padippakam.com

ராக்கப்பட்டார். ஆர்.எம்.வீரப்பன் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட பொம்மை மந்திரி ஆக்கப்பட்டார். முன்பு உணவு அமைச்சர் ராஜாராம் நீக்கப்பட்டு, விசுவநாதன் மந்திரியாக்கப்பட்டதைப் போலவே இந்த அவசர அமைச்சரவை மாற்றங்கள் நடந்தது. உடனே 'கிசு கிசு' பத்திரிகைகள் இதையே ஊதிப் பெருக்கி தொடர்ச்சியாக ஒரு மாதத்துக்கு கவிழப் போகும் அடுத்த மந்திரி யார்? என்பதையே அட்டைப்படக் கட்டுரையாக்கி பரபரப்பூட்டின. கடைசியில், திடீர் மந்திரிசபை மாற்றம் எனும் அரசியல் சித்து வேலைகளின் மூலம் ஜெயா எதை சாதிக்க நினைத்தாரோ அதில் வெற்றி பெற்றுவிட்டார். தமிழகத்தின் உயிராதாரமான பிரச்சினையான காவிரி நீர் விவகாரம் மீண்டும் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

'தடா' சட்டத்தை பழிவாங்கப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் பேரணி நடத்தியவுடன், பாசிச ஜெயா அதற்கு எதிராக இலவச கவர்ச்சி திட்டங்களை அறிவித்து அதன் ஒளி வெள்ளத்தில் மக்களின் கண்களை குருடாக்க முற்பட்டார். புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம், பெண்கள் நலனுக்கான புதிய திட்டம்; ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு; முதியோர் பென்சன் ரூ.75 ஆக உயர்வு, நிலமற்ற தொழிலாளர்களுக்கு குளம் வெட்டும் வேலை; அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களின் பெண் குழந்தைகளின் பெயரில் ரூ.2000-க்கு வைப்பு நிதியாக போட்டு 20 ஆண்டுகள் கழித்து, மேற்படிப்பு செலவுக்காக ரூ.10,000 பெற்றுக் கொள்ளும் திட்டம் என அடுக்கடுக்கான கவர்ச்சித் திட்டங்களை வாரி இறைத்தார். அதைத் தொடர்ந்து நாளிதழ்களில் முழுப்பக்க விளம்பரம் கொடுத்து, ''மாதர் நலன் காக்க வந்த மாதரசியே'', ''நடமாடும் தெய்வமே'' என்று ஜெயாவை அண்டிப் பிழைக்கும் கும்ப்ல் துதிபாடியது. வேடிக்கை என்னவென்றால், இத்திட்டங்களை நிறைவேற்ற குறைந்தபட்சம் ரூ.1000 கோடி தேவை. ஆனால் சாராய ஒழிப்புக் கொள்கையால் அரசுக்கு ரூ.320 கோடி இழப்பு ஏற்படுவதாகக் கூறி மத்திய அரசிடம் இத்தொகையை ஒதுக்கக் கோரும் ஜெயா, இத்திட்டங்களை எப்படி நிறைவேற்ற முடியும் என்பதுதான் கேள்வி. இவையெல்லாம் வழக்கமான காகித - கவர்ச்சித் திட்டங்கள் என்று சொல்லத் தேவையில்லை.

மகாமகப் படுகொலை சம்பவத்தை எப்படியாவது மக்கள் மனத்திலிருந்து அகற்றிவிடத் துடித்த ஜெயா, அதற்காக பல ஸ்டண்டுகளை அடித்தார். அதில் ஒன்றுதான் கடந்த 4ந் தேதி முதல் 7-ந் தேதிவரை நடந்த கட்சி நிர்வாகிகள் கூட்டம். இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களின் அடாவடித்தனங்களும் பகற்கொள்ளைகளும் அம்பலத்திற்கு வந்தபோதிலும் ஜெயா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், ''சட்டசபைக் கூட்டத் தொடர் முடிந்ததும் கட்சிக்கும் ஆட்சிக்கும் அவப்பெயர் உண்டாக்கும் எம்.எல்.ஏக்களை களையெடுக்க ஜெயா தீர்மானித்துள்ளார்; கூட்டத்திலேயே சிலரைக் கண்டித்து கோபமாகப் பேசினார்; 10க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள் கழித்துக் கட்டப்படுவார்கள்'' என்றெல்லாம் கிசுகிசு ஏடுகள் ஊகங்களையும் வதந்திகளையும் வெளியிட்டு பரபரப்பூட்டின. அடாவடித்தனம் செய்யும் எம்.எல்.ஏ.க்களைக் கழித்துக் கட்டுவதாக இருந்தால் அப்புறம் ஜெயலலிதா எதிர்க்கட்சி தலைவியாகத்தான் ஆகவேண்டியிருக்கும்!

இந்த சித்து விளையாட்டைத் தொடர்ந்து மக்களை சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுக்கப் போவதாக இன்னொரு ஸ்டண்ட் அடித்தார் ஜெயா. வாரந்தோறும் திங்களன்று மாலை மக்களிடமிருந்து மனுக்களைப் பெறும் நாடகத்தை அரங்கேற்றினார். அதன்பிறகு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் ஜெயாவை சந்தித்து முறையிட காத்துக் கிடப்பதே முக்கிய செய்தியாகிப் போனது. ''ஜெயா மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு இதுவே அத்தாட்சி'' என்று பார்ப்பன தினமலரும், அடிவருடிப் பத்திரிகைகளும் பிரமையூட்டி துதிபாடின. கருப்புப் பூனைகள் புடைசூழ மக்களோடு எந்தவிதத்திலும் தொடர்பின்றி அதிகாரிகளின் ஆலோசனைப்படி மகாராணியைப் போல ஆட்சி நடத்தும் ஜெயாவின் வக்கிரமான சித்து வேலைகளில் இதுவும் ஒன்று.

அடுத்த கட்டமாக, இப்போது மீண்டும் பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டும் அரசியல் சித்துவேலையை ஆரம்பித்துள்ளது ஜெயா கும்பல். ''என்னைக் கொல்ல புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படை தமிழகத்துக்குள் ரகசியமாக ஊடுருவியுள்ளனர். ராஜீவ் கொலை தொடர்பான விசாரணை நடத்திவரும் சிறப்பு புலனாய்வுக் குழு அலுவலக கட்டிடத்தைத் தகர்க்கவும், ராஜீவ் கொலையில் கைதாகியுள்ள முக்கிய புள்ளிகளை மீட்கவும் அவர்கள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர்'' என்று சட்டசபையிலேயே பீதியூட்டினார் ஜெயா. புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகளாகக் காட்டி தடை செய்வது, ஈழ ஆதரவு இயக்கங்களை பிரிவினைவாத அமைப்புகளாகக் கூறி ஒடுக்குவது, அதன் மூலம் பார்ப்பன - பாசிச ஒடுக்குமுறையை நியாயப்படுத்தி தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுப்பது என்ற திட்டத்துடன் ஜெயா கும்பல் கிளம்பியுள்ளது.

● பாலன்.

## ஜெயா-சங்கராச்சாரி ஊடல்!

கூட்டுச் சேர்ந்துள்ள கொள்ளையர்களுக்கிடையே பங்கு பிரிப்பதில் தகராறு வருவதும், ஒருவரையொருவர் காலைவாரி விடுவதும் வாடிக்கையானதுதான். அதுவே ராஜ குருவுக்கும் ராஜகுமாரிக்குமிடையில் நடக்கும்போது விவகாரம் வீதிக்கு வந்து சந்தி சிரிக்கத் தொடங்கி விடுகிறது.

ஆலய பாதுகாப்பு நிதி வசூல் மூலம் கோடிக்கணக்கில் சுருட்டிய ஜெயா, அதன் பிறகு ஆலய பாதுகாப்புக்கென 18 பேர் கொண்ட தனிவாரியம் அமைத்து அதற்கு தன்னையே தலைவராகவும் நியமித்துக் கொண்டார். இந்த வாரியத்தில் தலைமைச் செயலர் வெங்கட்ராமன், அறநிலையத் துறை செயலர், ஆணையர், செங்கோட்டையன், ஆனந்தன் ஆகிய அமைச்சர்கள் மற்றும் சில மடாதிபதிகள், தருமகர்த்தாக்கள் ஆகியோர் உறுப்பினர்கள்.

சுருட்டிய தொகை பற்றி பட்ஜெட் கூட்டத் தொடரில் கேள்வி எழும் என்று பீதியடைந்த ஜெயா, கடந்த 2.3.92 அன்று வாரியக் கமிட்டி கூட்டத்தைக் கூட்டி, இன்று முதல் அதன் பணிகள் துவங்குவதாக அறிவித்தார். வசூலான தொகை 3 கோடியே 51 லட்சம் என்றும் இதில் மகாமகத்துக்காக 46 லட்சம் செலவிடப் பட்டதாகவும் கணக்கு காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வாரியாக ஒரு அறங்காவலர் குழுவை நியமித்தார் ஜெயா. தனக்கு வேண்டப்பட்டவர்களின் பட்டியலை ஜெயாவிடம் கொடுத்து, இக்குழுவில் அவர்களை நியமிக்குமாறு ஜெயேந்திரர் என்றழைக்கப்படும் ஓடுகாலி சங்கராச்சாரி கேட்டிருந்தார். ஆனால் ஜெயாவோ தன்னை அண்டிப் பிழைக்கும் எம்.எல்.ஏ.க்களையும், பெருந் தனவந்தர்களையும் உறுப்பினராக நியமித்துள்ளாரே தவிர, சங்கராச்சாரிக்கு உரிய பங்கு தரவில்லை. காங்கிரசும் எங்களுக்கு பங்கு தரவில்லை என்று சட்டமன்றத்தில் ஒப்பாரி வைத்தது.

பார்ப்பன கும்பலின் சுருட்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் வழிவகை செய்யாததைக் கண்டு எரிச்சலடைந்த சங்கராச்சாரி, ''தேர்தலின் போது சுயேட்சையான வாரியம் அமைப்பதாகக் கூறிய ஜெயா அதை மீறிவிட்டார். முழு அதிகாரத்தையும் தன்னிடமே குவித்துக் கொண்டுள்ளார். 18 பேர் கொண்ட வாரியக் கமிட்டியில் 8 பேர் மட்டுமே அரசு மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.

ஆலய நிர்வாகம் அரசியல் தலையீடின்றி சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். எனவே ஒவ்வொரு கோயிலுக்கும் பக்தர்கள் ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி அமைத்து அரசின் வாரிய நிர்வாகப் பணிகளைக் கண்காணிக்க வேண்டும்'' என்று புலம்பித் தீர்த்துள்ளார். அரண்டுபோன ஜெயா, தன்னிலை விளக்கமளித்து அவரை சமாதானப்படுத்தும் வகையில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆனால் இதையே ஊதிப்பெருக்கி ஜெயா - சங்கராச்சாரி மோதல்; ஜெயாவுக்கு சங்கராச்சாரி எதிர்ப்பு என்று கிசுகிசு பத்திரிகைகள் பரபரப்பூட்டின. ஜெயாவுக்கு ஆதரவாக மகாமகக் கொலைகளுக்கு வக்காலத்து' வாங்கிய சங்கராச்சாரியும், ''இது நம்மவாள் ஆட்சி'' என்று ஜெயா ஆட்சியில் புதுத் தெம்பும் தைரியமும் பெற்றுள்ள பார்ப்பனக் கும்பலும் ஜெயாவை எதிர்ப்பதற்கு அடிப்படையே இல்லை. நடப்பது மோதல் அல்ல; பாகப்பிரிவினையை ஒட்டி பங்காளிக்களுக்கிடையே நடக்கும் ஊடல்!

படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசின் சகுனித்தனம்

*நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்காக மீண்டும் ஆள்பிடிக்கும் தகிடுதத்தங்களில் ராவ் கும்பல் இறங்கியுள்ளது. ஆனால் இந்த 'எண்ணிக்கை விளையாட்டு' நாடாளுமன்ற ஜனநாயகமே கேவலமான கேலிக்கூத்து என்று நிரூபித்து விட்டது.*

நாடாளுமன்ற ஜனநாயகத்தை 'எண்ணிக்கை விளையாட்டு' என்று அதிலேயே கொட்டை போட்ட அரசியல்வாதிகள் சொல்லுவார்கள். அதாவது ஒவ்வொரு கட்சிக்கும், குழுவுக்கும் எவ்வளவு 'எம்.பி.'க்கள் சொந்தமாக இருக்கிறார்கள். எந்தக் கட்சி, எந்தக் குழுவுடன் பேரங்கள், உடன்பாடுகள் செய்வது; எந்த எம்.பி.க்களை என்ன விலை கொடுத்து, என்ன ஆசை காட்டி இழுப்பது; எந்தக் கட்சி, எந்தக் குழுவைப் பிளவுபடுத்துவது; யார், யாரை உருட்டி, மிரட்டிப் பணிய வைப்பது-இப்படிப்பட்ட ஏதாவது அரசியல் தில்லுமுல்லுகள்,தந்திரங்கள் மூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை உருவாக்கி ஆட்சியைப் பிடிப்பது அல்லது கவிழ்ப்பது தான் 'எண்ணிக்கை விளையாட்டு'.

மத்தியில் நரசிம்மராவ் மந்திரிசபை அமைந்த பிறகு இம்மாதம் நடந்த முதலாவது 'எண்ணிக்கை விளையாட்டி'ல் வெற்றி பெற்றுவிட்டது. இந்த பலப்பரிட்சைக்குச் சில நாட்கள் முன்பிருந்தே ஏதோ .சேவல் கட்டிற்கோ, குதிரைப் பந்தயத்திற்கோ ரசிகர்களை உசுப்பி விடுவதைப் போல பத்திரிக்கைகள் எழுதின. நரசிம்மராவ் ஆட்சிக்கு நெருக்கடி; மந்திரிசபை கவிழுமா, தப்புமா என்றெல்லாம் பரபரப்பூட்டினார்கள். ஆளும் கட்சியை ஒரு கை பார்த்துவிடுவோம், ஆட்சி கவிழ்ந்தாலும் தேர்தல் வந்தாலும் பரவாயில்லை என்று சிலிர்த்துக் கொண்டு அணிவகுத்து நின்றன, எதிர்க் கட்சிகள்.

ஆனால் இது வெறும் சவடால்தான். உண்மையிலேயே ஆட்சி கவிழ்ந்து, இன்னொரு பொதுத் தேர்தலை எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் எல்லாக் கட்சிகளுமே கவனமாகவும், பதபதைப்போடும் இருந்தன. ஆகவே சிறுபான்மை ஆதரவு பலம் மட்டும் இருந்தாலும் இந்த எண்ணிக்கை விளையாட்டில் நரசிம்மராவ் மந்திரி சபை பிழைத்துவிட்டது.

இதை மாபெரும் வெற்றியாகச் சித்தரிப்பதற்காகப் பல்வேறு அரசியல் தில்லுமுல்லுகளில் மட்டுமல்ல, ஓட்டுப் போடும் மின்னணு இயந்திரத்திலும் தனது கைவரிசையைக் காட்டியது, காங்கிரசு. அவைக்கு 477 உறுப்பினர்கள் வந்திருந்ததாகவும் அவர்களில் 262 பேர் நரசிம்மராவ் மந்திரி சபையை ஆதரித்ததாகவும் 210 பேரே எதிர்த்து வாக்களித்ததாகவும் கணக்குக் காட்டும்படி செய்தனர். அடுத்த நாள் வாக்குச் சீட்டுக்களை எண்ணியபோது 503 பேர் வந்து 269 பேர் ஆட்சியை ஆதரித்ததாகவும் 231 பேர் எதிர்த்ததாகவும் தெரிந்தது. அதாவது 38 வாக்குகள் அதிகமாகப் பெற்றதையே 52 என்று புளுகியது.

ஆனால் இந்த வெற்றியால் ஆளும் காங்கிரசுக் கும்பல் நிரந்தரமான, நிம்மதியான மகிழ்ச்சி கொள்ளமுடியாது; அது நித்திய கண்டம் பூரண ஆயுசு நிலையில்தான் உள்ளது; நடந்து முடிந்த பலப்பரிட்சையின் முடிவு இதைத்தான் காட்டியது. நாடாளுமன்றத்தின் இப்போதைய எண்ணிக்கை 532. அதில் காங்கிரசின் சொந்த பலம், ஜெயலலிதா கட்சி, -முசிலீம் லீக்-கேரள காங்கிரசு போன்ற கூட்டணிக் கட்சிகளின் பலம், போட்டி சிவசேனா-அஜித் சிங் கட்சி ஆகிய கட்சி மாறிகளின் பலம் தேவே கவுடா போன்ற விலை போன நபர்கள்- இத்தனையும் சேர்த்தாலும் அவையின் எண்ணிக்கையில் இரண்டே உறுப்பினர்களைக் கூடுதலாக பெற்ற பெரும்பான்மை ஆதரவு தான் நரசிம்மராவ் மந்திரி சபைக்கு உள்ளது.

இருந்தும் 38 எம்.பி.க்கள் ஆதரவைக் கூடுதலாகப் பெற்றிருப்பதாகக் காங்கிரசு காட்டியிருக்கிறது. அதற்குக் காரணம் கிரிமினல்-மஃபியா சந்திரசேகர் கும்பலோடு, ஜார்க்கந்து முக்திமோர்ச்சா, தெலுங்கு தேசம், ஜனதா தளம் ஆகியவற்றின் ஒவ்வொரு பிரிவினரையும் அவைக்கு வந்து எதிர்தரப்பை ஆதரிக்காமல் தலை மறைவாகிவிடும்படி சகுனி நரசிம்மராவ் கும்பல் செய்துவிட்டது. இதனால் அதை ஆதரிப்பவர்கள் மிக மிக அதிகமாகவும் எதிர்ப்பவர்கள் குறைவாகவும் இருப்பதாகக் காட்டிக் கொண்டது.

> **பாஸ்கர் ராவ்களை உருவாக்கி கட்சிகளைப் பிளப்பதும், ஆட்சியைக் கவிழ்ப்பதும் - கலைப்பதும், பினாமி ஆட்சிகளை அமைப்பதும், கட்சி மாறிகளை வைத்து தானே ஆட்சியைப் பிடிப்பதும் கழிசடை காங்கிரசின் பரம்பரை உத்தி.**

• • •

பாஸ்கர் ராவ் என்பது நாடு முழுவதும் பிரபலமான பெயர்; எட்டப்பன், ஜெய்சிங், மீர்ஜாபர் போன்ற பெயர். ''பாஸ்கர் ராவ் வேலை'' என்றாலே ''துரோகம்'' என்று 1982 ஆம் ஆண்டில் இருந்து ஏற்பட்டுவிட்டது. அப்போது மிகவும் பெரும்பான்மை பலத்தோடு ஆந்திராவை ஆண்டு வந்தார் என்.டி.ராமராவ். அந்த மந்திரி சபையில் இருந்த பாஸ்கர் ராவ் தலைமையில் ஒரு கும்பலைத் தெலுங்கு தேசம் கட்சியில் இருந்து வெளியே இழுத்து போட்டு, என்.டி.ஆர். ஆட்சியைக் கலைத்துவிட்டு பாஸ்கர் ராவ் தலைமையில் ஒரு பினாமி ஆட்சி அமைத்தது இந்திரா-ராஜீவ் கும்பல். அடுத்த வாரமே காஷ்மீரில் ஃபருக் அப்துல்லா மந்திரி சபையைக் கலைத்து ஜி.எம். ஷா தலைமையில் இன்னொரு பினாமி ஆட்சியை காஷ்மீரில் ஏற்படுத்தியது.

பதவி ஆசை, பணம், மது, விபச்சாரம் ஆகிய பலவற்றையும் வீசி தெலுங்கு தேச கட்சி எம்.எல்.ஏக்களை இழுக்க முயன்றது பினாமி அரசு. பெரும்பான்மையினரான விசுவாச எம்.எல்.ஏ.க்களைக் கடத்திக் கொண்டு பெங்களூருக்கும், டெல்லிக்கும் போய் போராடி, சட்ட சபையிலேயே அடிதடி கலாட்டாக்களுக்கு ஈடுகொடுத்து பாஸ்கர ராவ் ஆட்சியைத் தோற்கடித்து மீண்டும் ஆட்சியைப் பிடித்தார், என்.டி.ராமராவ்.

இப்படிப் பாஸ்கர ராவ்களை உருவாக்கி, கட்சிகளைப் பிளப்பதும், ஆட்சியைக் கவிழ்ப்பதும்-கலைப்பதும், பினாமி ஆட்சிகளை அமைப்பதும், கட்சிமாறிகளை வைத்து தானே ஆட்சியைப் பிடிப்பதும் காங்கிரசின் பாரம்பரியத்தில் ஊறிப்போன அரசியல் திறமை. 1989 நவ. தேர்தல்களில் பெரும்பான்மை பெற முடியாமல் போனதிலிருந்து இப்படிபட்ட அரசியல் அயோக்கியத்தனங்கள் செய்து மீண்டும் ஆட்சியைப் பிடிக்க பலமுறை பாசிச ராஜீவ் முயன்றார். கிரிமினல்-மஃபியா சந்திரசேகர் கும்பலின் பினாமி ஆட்சியை நிறுவிய பிறகு தனது முயற்சியைத் தீவிரப்படுத்தியது. அதுவும் முடியாமல் போய் ஆட்சியைக் கவிழ்த்தது. இன்னும் கேவலமாகத் தோற்றுப் போயிருக்க வேண்டிய காங்கிரசு, ராஜீவ் சாவை வைத்து அனுதாப அலை எழுப்பி சற்று கூடுதலாக எம்.பி.க்களைப் பெற்றது. இருந்தும் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் மீண்டும் ஆள் பிடிக்கும் தகிடு தத்தங்களில் இறங்கியது.

தேர்தல் முடிந்த கையோடு ஜனதா தளத்தைப் பிளவுபடுத்தி அஜித் சிங் கும்பலை இழுக்க முயன்றது. ஆனால் கட்சி தாவல் தடுப்புச் சட்டத்தில் இருந்து தப்பிவிடும் அளவு எம்.பி.க்களை அஜித் சிங் கும்பலால் இழுக்க முடியவில்லை. ஒரு சிலரை மட்டுமே கொண்டுவர முடிந்தது. அவர்க

படிப்பகம்

www.padippakam.com

ளோடும் நடந்த பேரம் முறிந்து போகவே அச்சிறு கும்பல் அந்தரத்தில் தொங்குகிறது.

அடுத்து சிவசேனா மீது குறிவைத்தது காங்கிரசு. மராட்டியத்தில் இந்து வெறி அரசியல் ஆதிக்க ஆதாயம் அடைவதில் சிவசேனாவுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையில் இருந்த மோதலைப் பயன்படுத்திக் கொண்டு அந்த இரு கட்சிகளுக்கும் இடையே இருந்த கூட்டணியை உடைத்தது காங்கிரசு. சிவசேனாவுக்குள்ளேயே அதன் துணைத்தலைவர் பூஜ்பால் ராஜ்க்கும், தலைவர் பால் தாக்கரேவுக்கும் இடையிலான ஆதிக்க மோதலைப் பயன்படுத்தி பூஜ்பால் ராஜ்க்கு மந்திரி பதவி கொடுத்து சிவ சேனாவைப் பிளந்தது. மத்தியிலும் இரண்டு சிவசேனா எம்.பி.களைத் தனக்கு ஆதரவாக இழுத்துக்கொண்டது. பல்வேறு குழுக்களின் கூட்டமைப்பாக உள்ள ஜார்க்கந்த் முக்தி மோர்ச்சாவில் இருந்தும் இரண்டு எம்.பி.களை வளைத்துப் போட்டது, காங்கிரசு.

'உண்ட வீட்டுக்கே ரெண்டகம்' செய்வதுபோல தன்னை ஆதரித்துவந்த தெலுங்கு தேசக் கட்சியையே பிளக்கும் வேலையில் இறங்கி அதிலும் வெற்றிபெற்றது சகுனி-நரசிம்மராவ் கும்பல். கடந்த தேர்தல் முடிவுகளைப் பார்த்ததும் இனி தேசிய முன்னணிக் குதிரையை நம்பி தேர்தல் பந்தயத்தில் வெற்றிபெற முடியாது என்று என்.டி.ராமராவ் முடிவு செய்தார். காங்கிரசு மற்றும் பாரதீய ஜனதா இரண்டோடும் கைகோர்த்துக்கொள்ளத் தீர்மானித்தார். 'நரசிம்மராவ் தெலுங்கு தேச மைந்தன்' என்றுகூறி காங்கிரசு எதிர்ப்பைக் கைவிட்டார். தே.மு.வை கிடப்பிலே போட்டுவிட்டு, ஜனதா தளத்தின் கோரிக்கையை நிராகரித்து விட்டு நரசிம்மராவை எதிர்த்துப் போட்டியிடாது இடைத்தேர்தலில் ஆதரித்தார்.

ஆனால் நரசிம்மராவின் கணக்கு வேறாக இருந்தது. நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதற்காக ஜனதா எம்.பி.க்களை இழுத்தது போல தெலுங்கு தேச எம்.பி.களுக்கும் வலைவீசினார். என்.டி.ஆரால் ஓரங்கட்டப்பட்டிருந்த உபேந்திரா மூலம் அக்கட்சியைப் பிளந்தார். நேரடியாக நரசிம்மராவ் ஆட்சிக்கு வாக்களிக்காவிட்டாலும், அவைக்குப் போகாமல் இருக்குமாறு எட்டு எம்.பி.களுக்கு விலை பேசிவிட்டார்.

இவர்கள் தவிர சந்திரசேகர் - சுப்பிரமணியசாமி அடங்கிய கிரிமினல்-மஃபியா கும்பலின் 5 எம்.பி.கள் அவைக்கு வரவில்லை. உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்பதாக நிதிமந்திரி எழுதிய இரகசிய கடிதத்தை அவையிலே காட்டி ஆவேசமாகப் பேசிய சந்திரசேகர் அதே பிரச்சினையில் வாக்கெடுப்பு நடக்கும்போது, அவைக்கு வராமல் நரசிம்மராவ் ஆட்சியை ஆதரித்தார். அதற்கான காரணமும் கூறவில்லை.

இப்படி எதிர்த்தரப்பில் இருந்து கணிசமான பேரை இழுத்துக் கொண்டதால் நரசிம்மராவ் ஆட்சி பிழைத்தது. ஆனால் இதற்காக நரசிம்மராவ் செய்த சகுனித்தனங்கள் கொஞ்சமல்ல. சிவசேனா எம்.பி.களை கவனித்துக் கொள்ள சரத்பவார்; ஜார்க்கந்த் முக்தி மோர்ச்சா எம்.பிக்களை சரிக்கட்ட



காங்கிரசுக்கு ஆதரவாக கட்சியை உடைத்த தெலுங்குதேச எம்.பி.க்கள்: அரசியல் விபச்சாரம்.

சீதாராம் கேசரி; தெலுங்கு தேச எம்.பி.க்களை இழுப்பதற்கு சிதம்பரம்-ரங்கராஜன் குமாரமங்கலம்; காங்கிரசுக்குள்ளேயே காலைவாரிவிடுவார்கள் என்றஞ்சி ஒவ்வொரு குழுவுக்கும் பலராம் ஜாக்கர், குலாம் நபி ஆசாத் போன்றவர்கள் என்று ஒதுக்கப்பட்டது. பணம், பதவி ஆசை, சாராயம்-விபச்சாரம் உட்பட விருந்து எல்லாம் தடபுடலாகப் பரிமாறப்பட்டன. பழைய பஞ்சாயத்துத் தேர்தல்களில் உறுப்பினர்களைக் கடத்தி அடைத்துவைத்து தேர்தல் நேரத்தில் கொண்டு வருவதுபோல நாடாளுமன்றத்துக்கு எம்.பி.கள் வந்து சேர்ந்தார்கள்.

காங்கிரசுக் கட்சிதான் தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இப்படிப்பட்ட அரசியல் விபச்சாரங்களில் ஈடுபட்டது என்றால் எதிர்க்கட்சிகள் குறிப்பாக அவற்றின் தலைமைகள் காங்கிரசை எண்ணிக்கை விளையாட்டில் தோற்கடிப்பதில் உண்மையான அக்கறையோடு நடந்தனவா? இல்லை.

இந்த ஆட்சி கவிழ்ந்தாலும் பரவாயில்லை, இந்த அரசின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்தே தீருவோம் என்று தேசிய முன்னணி-இடதுசாரி கூட்டணி தலைமைகள் கூறின. இதற்காக அரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு சில திருத்தங்கள் கொண்டு வந்தன. அவற்றோடு வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் குறித்து பாரதீய ஜனதா கொண்டுவந்த இரு திருத்தங்களை ஆதரிப்பது என்று முடிவு செய்தது. இத்திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பில் தோற்றுப் போனால் அரசு கவிழ்ந்துவிடும். பாரதீய ஜனதாவும் பெரும் சவடால் அடித்தது. ஆனால் தேசிய முன்னணி தனது உறுப்பினர்களையே உறுதிப்படுத்தித் திரட்டாமல் பிளவுபட்டன. பாரதீய ஜனதாவுக்கும் காங்கிரசுக்கும் இடையே பொருளாதாரக் கொள்கைகளில் வேறுபாடு எதுவும் கிடையாது; இதைத் தெரிவிக்கும் வகையில் நரசிம்மராவ் அரசைப் புகழ்ந்து பாரதீய ஜனதா தலைவர்கள் பேசி வருகின்றனர். இப்போது ஆட்சியைக் கவிழ்த்து தேர்தலைச் சந்திக்க எந்தக் கட்சிக்கும் விருப்பமில்லை என்பதுதான் உண்மை.

ஆக, எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சியும் நடத்தும் இந்த 'எண்ணிக்கை விளையாட்டு' நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேவலமான கேலிக் கூத்தென்று மீண்டும் நிரூபித்துவிட்டது. எப்படியோ இந்த அரசாவது நிலைத்திருந்தால் போதும் என்றவர்கள் எண்ணுகிறார்கள். நாடும் மக்களும் எக்கேடு கெட்டாலும் ''நிலைத்திருப்பதே'' இப்போதைய நோக்கமாக இருக்கிறது. ஆனால் அற்ப எண்ணிக்கையிலான அதுவும் அரசியல் விபச்சாரிகளான கட்சி மாறிகளின் தயவு என்கிற நூலிழையில் இது தொங்குகிறது. காங்கிரசுக்குள்ளும் சரத்பவர், அர்ஜுன் சிங், சிந்தியா ஆகிய பதவி வெறியர்களுக்கிடையிலான பனிப்போர் தொடர்கிறது. அது பகிரங்கப் போராக வெடிக்கவும் செய்யும்.

## கோவை தோழர்களின் நூதன போராட்டம்

**கோவையில்** மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள், நாட்டை ஐ.எம்.எப்.பிடம் அடகுவைக்கும் காங்கிரசு துரோகிகளை அம்பலப்படுத்தி, சுவரெழுத்து எழுதிய போது கைதானார்கள். ''நாடு மறுஅடகு **வைக்கப்பட்டு விட்டது; !**'' என்றளவிலோடு சுவரெழுத்து வாசகம் நின்றது. வெளியில் வந்ததும் தோழர்கள் மீண்டும் அதே இடத்தில் சுவரெழுத்தை தொடர்ந்தார்கள். இம்முறை **"IMF இட்ட கட்டளைக்கு ஆடுகிறது அ''** என்று எழுதுவதற்குள் போலீசு மீண்டும் கைது செய்தது. 4.3.92 முதல் 7.3.92 வரை சிங்காநல்லூர் போலீசு நிலையத்தில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். பள்ளிக்கூட காம்பௌண்டு சுவரை எழுதி சேதப்படுத்தியதாக நடமாடும் நீதிமன்றத்தில் வழக்கு போட்டது போலீசு. வெளிவந்த தோழர்கள் திருச்சி சாலை - ஒண்டிப்புதூர் முருகவிலாஸ் ஓட்டல் முன்பாக உள்ள அந்த சுவரெழுத்து முழக்கத்தை எப்படியும் எழுதி முடிப்பது என திட்டமிட்டுள்ளனர். **'அ'** என்றளவில் நிற்பதை ''அர**சாங்கம்**'' என்று எழுதி முடிக்க உள்ளனர். நூதன வடிவிலான இப்போராட்டத்தையும், தோழர்களின் உறுதி மனப்பான்மையையும் கண்டு பகுதிமக்கள் வெகுவாக பாராட்டினர்.

படிப்பகம்

www.padippakam.com

## பட்ஜெட்:

# வஞ்சகத் தாக்குதல்

*மன்மோகன்சிங் தயாரித்திருப்பது பட்ஜெட்டே அல்ல; பட்ஜெட்டுக்கு முன்னரே ஏகாதிபத்தியங்களிடம் நாடு மறு அடகு வைக்கப்பட்டு விட்டது.*

"உலக வங்கியின் கடுமையான நிபந்தனைகளுடன் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க் கட்சிகள் பீதியூட்டிய நேரத்தில் நிதி மந்திரி மன்மோகன் சிங் அதைப் பொய்யாக்கிவிட்டார். தற்போதைய பட்ஜெட்டில் பற்றாக்குறையை பெருமளவு குறைத்து விட்டார். கடுமையான வரி விதிப்பு ஏதுமின்றி அனைத்து தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் புதிய பொருளாதாரக் கொள்கைக்குப் பொருத்தமான பட்ஜெட்டைத் தயாரித்துள்ளார். ரஷியாவில் கோர்பச்சேவ் கொண்டு வந்த மாற்றங்களைப் போல மன்மோகன் சிங் இந்திய 'பெரஸ்த்ரோய்கா'வைத் துவக்கியுள்ளார்'' என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களும், அறிஞர்களும் பத்திரிகைகளும் இந்த பட்ஜெட்டை ஆஹாவென புகழ்ந்து தள்ளுகின்றன.

### ஜனரஞ்சக பட்ஜெட்டா? நயவஞ்சகத் தாக்குதலா?

உலக வங்கி அறக்கட்டளையிடம் தனது மகளின் மேற்படிப்புக்கு நிதியுதவி பெறும் மன்மோகன் சிங், உலக வங்கியின் கட்டளையை மீறி ஒரு பட்ஜெட்டை தயாரித்திருக்கிறார் என்றால் அதை நம்புவதற்கு நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்ல. உண்மையில் மன்மோகன் சிங் தயாரித்திருப்பது பட்ஜெட்டே அல்ல. இந்த பட்ஜெட்டுக்கு முன்னரே உலக வங்கியின் கட்டளைகளை ஆட்சியாளர்கள் செயல் படுத்தத் தொடங்கி விட்டனர். நாட்டின் சுயாதிபத்தியம், தற்காப்பு மற்றும் அரசியல்-பொருளாதார நலன்களை ஏற்கனவே ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் மறு அடகு வைத்து விட்டனர். பட்ஜெட்டுக்கு வெளியே, நாடாளுமன்றத்துக்கோ, அமைச்சரவைக்கோ கூடத் தெரியாமல் இத்தகைய அயோக்கியத் தனங்கள் நடக்கின்றன.

ஆண்டுக்கொருமுறை வரி விதிப்பு, கட்டண உயர்வுகளை நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்து பட்ஜெட்டை சமர்ப்பிக்கிறார் நிதி மந்திரி. ஆனால் பட்ஜெட்டுக்கு முன்னும் பின்னுமாக, சட்ட விரோதமாகவே, நாடாளுமன்றத்தில் அறிவிக்காமலேயே பல முறை புதிய வரி விதிப்புகளையும், விலையேற்றத்தையும் அரசு அறிவிக்கிறது. பீறிட்டு எழும் மக்களின் கோபாவேசங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள தேசவிரோத ஆட்சியாளர்கள் இப்புதிய உத்தியை சமீப காலமாகப் பின் பற்றி வருகின்றனர்.

எனவே தற்போதைய பட்ஜெட்டை மட்டும் எடுத்துக் கொண்டு பரிசீலிப்பது அரை வேக்காட்டுத்தனமானதாகவே இருக்கும். பட்ஜெட்டுக்கு முன்பே தொடங்கி விட்ட மறு அடகு வைக்கும் கொள்கைகளையும் பட்ஜெட்டுக்கு பிறகு இதனால் ஏற்படப் போகும் கோரமான விளைவுகளையும் தொகுப்பாக பரிசீலிப்பதுதான் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைத் தரும். உலக வங்கியிடம் கடன் வாங்கி திவாலான நாடுகளின் வரிசையில் இந்தியாவையும் சேர்த்து விடத் துடிக்கும் காங்கிரசு ஆட்சியாளர்கள், இந்த உண்மைகளை உழைக்கும் மக்கள் புரிந்து கொண்டுவிடக் கூடாது என்பதற்காகவே மென்மையான தோற்றம் தரும் பட்ஜெட்டைத் தயாரித்து வஞ்சகத் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். அதற்கேற்ப முதலாளித்துவப் பத்திரிகைகளும் இந்த பட்ஜெட்டை ஆஹாவெனப் பாராட்டி மக்களை பிரமையில் ஆழ்த்துகின்றன.




### உலக வங்கி உத்திரவுப்படி உருவான பட்ஜெட்

உலக வங்கியிடம் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய்க்கு கடன் பெறுவதற்காக, பட்ஜெட்டில் என்னென்ன மாற்றங்கள் கொண்டுவரப்பட உள்ளன என்ற ரகசியங்கள் ஏற்கனவே உலக வங்கிக்கு அறிவிக்கப்பட்டு விட்டது. அதன்படி, கடந்த செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் உலக வங்கியின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு வந்து மேற்பார்வையிட்டனர். அதன் பிறகு நிதியமைச்சர் மன்மோகன்சிங் நவம்பர் 11ந் தேதியன்று ''இந்தியாவின் வர்ச்சிக் கொள்கை'' பற்றிய கடிதத்தை உலக வங்கியின் தலைவரான ப்ரெஸ்டனுக்கு எழுதியுள்ளார். அடுத்த நாளே-அதாவது நவம். 12ந் தேதியன்று உலக வங்கியின் தலைவர் இக்கொள்கைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை விளக்கி 43 பக்க அறிக்கையாக அதற்குப் பதிலளித்துள்ளார்.

மன்மோகன் சிங்கின் கடிதம் கிடைத்ததும் ஒரே நாளில் இந்தியாவின் கொள்கைகளை அலசி ஆராய்ந்து உடனே உலக வங்கியின் தலைவர் பதில் அறிக்கை கொடுக்கிறார் என்றால் நடக்கிற காரியமா இது? எந்தவொரு காங்கிரசு முட்டாளும் கூட இதை நம்ப மாட்டான். ஏற்கனவே கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ள இந்திய நிதி அமைச்சகமும் உலக வங்கியும் நாட்டையும் மக்களையும் ஏய்க்க இப்படியொரு நாடகமாடினர். இந்த அயோக்கியத்தனத்தை ''எக்ஸ்பிரஸ்'' நாளேடு அம்பலப் படுத்தியதும் எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்ட பின்னரே மன்மோகன்சிங் ஒரு கடிதத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஒப்புக் கொண்டார். ஆனால் பிற ஆவணங்களை முன் வைக்காமல் மறைத்துவிட்டார்.

வேடிக்கை என்னவென்றால் உலக வங்கியின் தலைவருக்கு நிதி மந்திரி எழுதிய கடிதம் பற்றி காங்கிரசு எம்.பி.க்களுக்கோ-அமைச்சர்களுக்கோ கூடத் தெரியாது. இந்தியாவில் இணையான அரசாங்கம் நடத்தும் உலக வங்கி உத்திரவிட அதை நிதியமைச்சகம் உடனே நிறைவேற்றுவது தான் நடந்துள்ளது. மன்மோகன் சிங்குக்கு உலக வங்கியின் தலைவர் எழுதிய பதில் கடிதத்தில் 25 கட்டளைகள் குறிப்பிடப் பட்டிருந்தன. இவை பட்ஜெட்டுக்கான கட்டளைகள் அல்ல; ஏற்கனவே உலக வங்கியிடம் கடன் பெற நாம் விவாதித்து வந்த கொள்கைகள்தான் என்று நியாயம் கற்பிக்கிறார் நிதி மந்திரி. இதுவும் ஒருவகையில் உண்மை தான். ஏனெனில் இக்கட்டளைகளில் பாதிக்கு மேற்பட்டவை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டன. மற்றவை இப்போதைய பட்ஜெட்டில் பகுதியளவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளன. எஞ்சியவற்றை பட்ஜெட்டுக்கு வெளியே, நாடாளு மன்றத்துக்குக் கூட தெரிவிக்காமல் செயல்படுத்த உள்ள

படிப்பகம்

www.padippakam.com

னர். இதனால்தான் உலக வங்கி மட்டு மின்றி, மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் இந்தியாவை மறு காலனியாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையையும் மன்மோகன் சிங்கின் பட்ஜெட்டையும் பாராட்டி வரவேற்கின்றன.

### உலகவங்கி உத்திரவு உழைக்கும் மக்கள் பரிதவிப்பு

ரூபாயின் மதிப்பைக் குறைப்பது. அன்னிய முதலீடுகளுக்குத் தாராள அனுமதி, உணவு மற்றும் சேவைத் துறைகளுக்கான மானியங்களை வெட்டுவது, தனியார் மயமாக்கலைத் தீவிரமாக்குவது, அரசுத் துறையை முடமாக்குவது, சிறுவிவசாயிகள் - கைத்தொழிலுக்கான கடன்களை நிறுத்துவது, விவசாயத்தையே புறக்கணிப்பது, ஏகாதிபத்தியங்களிடமிருந்து கொள்ளை விலைக்கு உணவு தானியங்களை இறக்குமதி செய்வது - முதலானவை உலக வங்கி விதித்துள்ள கடுமையான நிபந்தனைகள்.

ஐ.எம்.எப்.-உலகவங்கியின் கட்டளைகளுக்கு கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறி ஆட்டம் போடும் ஆட்சியாளர்கள், அன்னியச் செலாவணி தடுப்புச் சட்டத்தை (FERA) முடக்கி நேரடியாக அன்னிய நிறுவனங்கள் எவ்வித தடையுமின்றி முதலீடு செய்ய உரிமையளித்தனர். இது தவிர 100% அன்னிய முதலீட்டிற்கும் உற்பத்தியானவற்றை நேரடியாக ஏற்றுமதி செய்து கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டன. உலக வங்கியின் உத்திரவுப்படி உரவிலை உயர்த்தப்பட்டது. மானிய விலையில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவது படிப்படியாக குறைக்கப்பட்டது. நலிவடைந்த அரசு ஆலைகள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி அவற்றுக்கான மானியம் குறைக்கப்பட்டது. இந்த ஆலைகளின் பங்குகள் தனியார் முதலாளிகளுக்கு விற்கப்பட்டன. ரூபாய் மதிப்பைக் குறைத்ததன் விளைவாக பணவீக்கம் யானைக் காலாக வீங்கி விலைவாசி தாறுமாறாக ஏறியது. பற்றாக்குறையை ஈடுகட்ட மானியங்களைக் குறைப்பது என்ற பெயரில் ரேஷன் கடை மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு குறைக்கப்பட்டது. அவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. உலக வங்கியின் உத்திரவுப்படி, மக்களின் அன்றாட - அடிப்படைத் தேவைகளுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டதால், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டது; கல்வி-சுகாதாரம்-நல்வாழ்வுத் திட்டங்கள் சுருக்கப்பட்டது. கல்லூரிகளில் கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. ஏற்கனவே தாறுமாறாக ஏறிவிட்ட விலைவாசியால் மக்கள் பரிதவித்துக் கொண்டிருந்தபோது, உரம், சர்க்கரை, பெட்ரோல், ரயில்வே பயண-சரக்குக் கட்டணங்களை உயர்த்தி மக்களைக் கசக்கிப் பிழிந்தது நரசிம்மராவ் அரசு.

### குப்புறத் தள்ளிவிட்டு குழிபறிக்கும் கயவாளிகள்

இத்தனையும் போதாது என்று அடுத்த 8 மாதங்களுக்குள்ளாகவே தற்போதைய பட்ஜெட்டில் புதிதாக 3,006 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டுள்ளது. இது தவிர ரயில்வே சரக்கு-பயணக் கட்டணங்களை அநியாயமாக உயர்த்தியும், புறநகர் பயணிகளின் மாதாந்திர சீசன் டிக்கெட் கட்டணத்தை 50% கூட்டியும் 1366 கோடி ரூபாய்க்கு சட்டபூர்வ வழிப்பறியைச் செய்துள்ளது. கடந்த ஜனவரியில் இரும்பு-எஃகு விலையை ரகசியமாக உயர்த்தியது. இப்படி பாமரமக்களின் தலையில் தாங்க முடியாத பொருளாதாரச் சுமைகளைத் திணித்தும் கூட 5400 கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டிலே பற்றாக்குறை. பட்ஜெட் பற்றாக்குறை பணவீக்கத்திற்கும் விலையேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பது பொருளாதார அரிச்சுவடி. ஆனாலும் அவை கட்டுப்படுத்தப்படும் என்று நம்பச் சொல்கிறார் நிதிமந்திரி.

### மரணப்படுக்கையில் அரசுத்துறை

அரசுத்துறை நிறுவனங்களை 1995க்குள் முடமாக்கி மூடக்கோரும் உலக வங்கியின் கட்டளைப்படி தற்போதைய பட்ஜெட்டில் தொலைதொடர்புத் துறைக்கும் அதன் சார்பான அரசுத் துறை நிறுவனங்களுக்கும் ஒரு பைசா கூட ஒதுக்கப்படவில்லை. இதேபோல இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் எண்ணெய்ச் சுத்திகரிப்பு, குழாய் திட்டங்களுக்கு ஒதுக்கீடு எதுவுமில்லை. இதர அரசுத் துறை நிறுவனங்களுக்கான மானிய ஒதுக்கீடு 668 கோடியிலிருந்து தற்போதைய பட்ஜெட்டில் 444 கோடி ரூபாயாக சுருக்கப்பட்டுவிட்டது. அதே சமயம் அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை முன்னைவிட 150% அதிகமாக தனியாருக்கு தாரை வார்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புறங்கள் புறக்கணிப்பு பட்டினிச் சாவுக்கு வரவேற்பு

கிராமப்புறங்களையும் விவசாயத்தையும் அறவே புறக்கணித்துவிட்டு உணவு தானியங்களுக்கு அமெரிக்காவிடம் கையேந்த வேண்டும் என்பது உலக வங்கியின் நிபந்தனை. அதன்படி தற்போதைய பட்ஜெட்டில் விவசாயத்துக்கான புதிய ஒதுக்கீடுகள் எதுவுமில்லை. விவசாயம் என்பது மாநில அரசின் விவகாரம் என்று வெளிப்படையாக அறிவிக்கவில்லையே தவிர, மற்ற எல்லாமும் நடந்துவிட்டது. கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு 22% குறைக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன திட்ட முதலீடு 23%ம், உணவுக்கான மானியம் 25%ம் குறைந்துவிட்டது. கிராமப்புற

## இந்தியாவின் தலைநகர் ~~டெல்லி~~ வாஷிங்டன்!

உலக வங்கியின் மூலம் இந்தியப் பொருளாதாரத்தை தனது இரும்புப் பிடியில் வைத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம், மிகச் சாதாரண ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரத்தில் கூட தலையிட்டு மிரட்டத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் தற்போது கோதுமைப் பயிர் அறுவடைக்குக் காத்திருக்கும் நிலையில், உலக வங்கியின் நிர்பந்தத்தால் அமெரிக்காவிடமிருந்து கோதுமை இறக்குமதி செய்ய இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அமெரிக்காவின் கோதுமை ஒரு டன்னுக்கு 150 டாலர்; ஆனால் சர்வதேச சந்தையில் கோதுமையின் விலையோ 130 டாலர்; அதைவிட கனடா, அர்ஜென்டைனா முதலான நாடுகள் இன்னும் குறைந்த விலைக்கு விற்கத் தயாராக உள்ளன. ஆனாலும் உலக வங்கியின் கட்டளை காரணமாக அமெரிக்காவிடமிருந்து மட்டுமே கோதுமையை இறக்குமதி செய்ய இந்தியாவுக்கு சுதந்திரம் உள்ளது. இதில் கொடுமை என்னவென்றால், இந்தியா தனது கோதுமையை 95 டாலருக்குத்தான் ஏற்றுமதி செய்கிறது.

அமெரிக்காவிடமிருந்து அதிக விலைக்கு கோதுமை வாங்குவது மட்டுமல்ல, கியூபாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாது என்று இந்தியாவை மிரட்டுகிறது புஷ் அரசு. ஏனெனில் கியூபாவை அமெரிக்கா கருப்புப் பட்டியலில் வைத்துள்ளதாம். அந்த நாட்டுடன் வியாபாரம் செய்தால் இந்தியாவையும் கருப்புப் பட்டியலில் சேர்த்துவிடுவோம்; கோதுமையும் தரமாட்டோம் என்று கொக்கரிக்கிறது புஷ் அரசு. பீதியடைந்த இந்திய உயரதிகாரி தீக்சித், அமெரிக்க விவசாயத் துறை செயலாளரிடம் கியூபாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்ய மாட்டோம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். இந்த விவகாரம் மெதுவாக கசியத் தொடங்கியதும் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பின. முதலில் இவையெல்லாம் பொய் என்று நரசிம்மராவ் அரசு தடாலடியாக மறுத்தது. பின்னர் மேலும் ஆதாரங்கள் வெளியாகி எதிர்க்கட்சிகள் கூச்சல் போடத் தொடங்கியதும் விவசாய அமைச்சர் பலராம் ஜாக்கரால்கூட பதிலளிக்க முடியவில்லை. பாவம்! அவருக்கே தெரியாமல் இத்தனை விவகாரங்களும் நடந்திருக்கும்போது அவரால் எப்படி பதிலளிக்க முடியும்?

ஏற்கனவே "சூப்பர் 301" என்கிற வர்த்தக தடைச் சட்டத்தைக் காட்டி இந்தியாவை மிரட்டிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், இப்போது தனது போர்த்தாக்குதல் பட்டியலில் இந்தியாவையும் சேர்த்து அச்சுறுத்துவதாக செய்திகள் கசிந்துள்ளன. அமெரிக்க ஏற்பாட்டின்படி 5 நாடுகள் கலந்து கொள்ளும் கூட்டத்தில், இந்தியாவும் சேர்ந்து கொண்டு அணு ஆயுதங்களைத் தயாரிக்க மாட்டோம் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு புஷ் அரசு நிர்பந்தித்து வருகிறது. இல்லையெனில் உலக வங்கிக் கடனை ரத்து செய்துவிடுவோம் என்று மிரட்டுகிறது. இந்திய அடிவருடிகள் இதை எதிர்ப்பதாக நாடாளுமன்றத்தில் சவடால் அடித்தாலும், வேறு சாக்குபோக்குகளைக் கூறி சரணடையவே காத்திருக்கிறார்கள். கடைசியில் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதா வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமை இந்தியாவிடம் இல்லை. அது அமெரிக்க வெள்ளை மாளிகையில்தான் தீர்மானிக்கப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், இனி இந்தியாவின் தலைநகரம் டெல்லி அல்ல; வாஷிங்டன்!

படிப்பகம்

www.padippakam.com



ரயில்வே கட்டண உயர்வை எதிர்த்து சென்னை நகர மக்களின் போர்க்குணம்.

வறுமை-பட்டினிச் சாவுகளைத் தடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தைத் தவிர வேறு எந்த திட்டமும் இல்லை. இதற்கும் கடந்த ஆண்டு அளவுக்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டைவிட பணவீக்கமும் விலைவாசியும் அதிகரித்துவிட்ட நிலையில் இந்த ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட மிகக் குறைவானதாகும். இதேபோல் கிராமப்புற கல்வி பற்றியும் பட்ஜெட்டில் எதுவுமில்லை. கல்விக்கான ஒதுக்கீடு 12.5% குறைக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே ஒரிசா, ராஜஸ்தான், திரிபுரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா முதலான மாநிலங்களில் வறுமையும் பட்டினிச் சாவுகளும் நிரந்தரமாகிவிட்டன. இப்போது கிராமப்புறங்களை மேலும் புறக்கணிப்பதன் விளைவாக அவை மேலும் தீவிரமடைந்து இந்தியாவை இன்னுமொரு மொசாம்பிக் நாடாக மாற்றப் போவது நிச்சயமாகிவிட்டது.

மறுபுறம் பற்றாக்குறையை குறைக்கவோ 12% ஆக உயர்ந்துவிட்ட பணவீக்கத்தைத் தடுக்கவோ பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் இல்லை. ரூபாயை வெளிநாட்டு நாணயத்துடன் பகுதியளவுக்கு மாற்றிக் கொள்ளும் திட்டத்தின் விளைவாக ரூபாயின் மதிப்பு மேலும் குறையவே செய்யும். இதன் விளைவாக பணவீக்கமும் பறறாக்குறையும் மேலும் தீவிரமாகி உண்மை ஊதியம் வீழ்ச்சியடைந்து விலைவாசிகள் மேலும் உயரவே செய்யும்.

இவற்றின் விளைவுகள் என்ன? அரசுத்துறை முடக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். புதிய வேலை வாய்ப்புத் திட்டங்களும் பட்ஜெட்டில் இல்லை. பிரதமரே அரசு நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் இன்னும் ஈராண்டுகளுக்கு புதிதாக வேலைவாய்ப்புக்கு இடமில்லை என்று அறிவித்து விட்டார். கிராமப்புறங்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதன் விளைவாக வறுமையும் பட்டினிச்சாவுகளும் மேலம் பெருகவே செய்யும். கடைசியில் வேலையில்லை; வாழ்வுமில்லை; வறுமையும் பட்டினியும்தான் இந்நாட்டு மக்களுக்கு என்று பகிரங்கமாகவே தண்டித்துள்ளது தேசவிரோத காங்கிரசு அரசு.

## தரகு முதலாளிகளுக்கு தாராள சலுகை

அதே சமயம் அன்னிய ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்துக்கும், தரகுப் பெருமுதலாளிகளின் கொள்ளைச் சுரண்டலுக்கும் இந்த பட்ஜெட் மேலும் பல சலுகைகளை வாரியிறைத்துள்ளது. உற்பத்தி சார்ந்த அசையா சொத்துக்களுக்கும் எஸ்டேட்டுகளுக்கு வரியில்லை, காப்பீட்டு மூலதனங்களுக்கு வரியில்லை, கூட்டுப்பங்கு நிறுவனங்களின் பங்குதாரர்கள் மீது விதிக்கப்படும் இரட்டை வரி ரத்து, பெருந்தொழில் நிறுவனங்களுக்கு புதிதாக வரி கிடையாது, மற்றவர்களுக்கு 3 அடுக்கு கொண்ட வரிச் சலுகை, அன்னிய மூலதனம் தாராளமாக நுழையும் வகையில் சுங்கத் தீர்வை குறைப்பு, தங்கத்தை கடத்திவர சட்டபூர்வ அனுமதி என அடுக்கடுக்கான சலுகைகளை நிதிமந்திரி வாரி வழங்கியுள்ளார்.

## இராணுவத்துக்கோ பெருந்தீனி ராஜ்ஜியத்திலோ பட்டினி

கடந்த ஆண்டைவிட பற்றாக்குறையைக் குறைத்துவிட்டதாக பாசாங்கு செய்துகொண்டே, மிக அதிகமாக ராணுவச் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது காங்கிரசு அரசு. மொத்த பட்ஜெட்டில் 13%-ஐ ராணுவத்துக்கு ஒதுக்கி கடந்த ஆண்டைவிட மேலும் 1100 கோடி ரூபாயை விரயமாக்குகிறது.

> **விவசாயத்தையும் கிராமப் புறங்களையும் தொடர்ந்து புறக்கணிப்பதன் விளைவாக வறுமையும் பட்டினிச் சாவுகளும் மேலும் தீவிரமடைந்து, இந்தியாவை இன்னுமொரு மொசாம்பிக் நாடாக மாறப்போவது நிச்சயமாகி விட்டது.**

இதுதவிர வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே பட்ஜெட்டில் ஏறத்தாழ கால் பங்கு போய் விடுகிறது. இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடனோ 1.65 லட்சம் கோடி உலகின் மிகப் பெரிய கடனாளி நாடுகளான பிரேசில், மெக்சிகோவை அடுத்து மூன்றாவது இடத்தில் இந்தியா இருக்கிறது. மறுபுறம் உள்நாட்டுக் கடனோ 3.5 லட்சம் கோடி. (ரூபாயின் மதிப்பு குறைந்த பிறகு இதன் உண்மை மதிப்பு எவ்வளவு என்று ரிசர்வ் வங்கியாலே மதிப்பிட முடியவில்லை). இதுவும் போதாதென்று ஐ.எம்.எப்-உலக வங்கியிடம் மேலும் கடன் வாங்க அலைகிறது இந்திய அரசு.) இப்படி ஆண்டுக்காண்டு பெருகும் கடனும் வட்டியும் சேர்ந்து நாட்டை திவாலாக்கப் போவது மட்டும் நிச்சயம்.

## ஓட்டுக் கட்சிகள் மண் குதிரைகள்

நாட்டை அடகு வைக்கும் இப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தும் எதிர்க் கட்சிகளிடம் இதற்கு மாற்றான கொள்கையோ திட்டமோ கிடையாது. இன்னும் சொல்லப் போனால் தமது ஆட்சிக் காலத்தில் இதே கொள்கையைத்தான் அவர்கள் செயல்படுத்தினர். இப்போதைய காங்கிரசு அரசு அதை மேலும் தீவிரமாக்கியிருக்கிறது என்பது தான் வித்தியாசம்.

ஒரு ஜனநாயக அமைப்பில் ஒரு சிறுபான்மை அரசு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைபூர்வ முடிவுகள் எடுக்க அதிகாரம் கிடையாது என்று எதிர்க் கட்சிகள் இதுவரை கூச்சலிட்டு வந்தனர். ஆனால் இப்போதோ, ஆட்சி கவிழ்ந்தால் நெருக்கடி ஏற்படும்; இன்னுமொரு தேர்தலை நாடு தாங்காது என்பதையே பொதுவிதியாக்கி ஆளுங்கும்பலுக்கு சம்பிரதாயமான எதிர்ப்பு தெரிவித்துவிட்டு முடங்கிக் கொள்கின்றனர். தற்போது பட்ஜெட் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகள் வெட்டுத் தீர்மானம் கொண்டுவந்து எதிர்ப்பு காட்டிய போதிலும், நரசிம்மராவ் ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல என்றே அறிவித்தன. இத்தகைய சந்தர்ப்பவாத ஓட்டுக் கட்சிகளை உழைக்கும் மக்கள் இனியும் நம்ப முடியாது.

ஓட்டுக் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்துவிட்ட உழைக்கும் மக்கள், ரயில்வே கட்டண உயர்வுக்கு எதிராக தன்னெழுச்சியாகத் திரண்டு சென்னையிலும் பம்பாயிலும் போர்க்குணத்துடன் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகைய தன்னெழுச்சியான போராட்டங்கள் புரட்சிகர அரசியல் தலைமையின்கீழ் அணி திரட்டப்பட வேண்டும். விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்தை தேவிரோத - மக்கள் விரோத சிறுபான்மை காங்கிரசுக்கும் அதன் எஜமானர்களான உலகவங்கி - அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான இரண்டாவது சுதந்திரப் போராக முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# உலக வங்கி-ஐ.எம்.எஃப் உத்திரவு

# நாசமாக்கப்படும் விவசாயம்

**அன்பார்ந்த விவசாயப் பெருங்குடி மக்களே,**

நம்மை எல்லாம் கூட்டம் கூட்டமாக கொன்றொழிக்கும் மாபெரும் சதித் திட்டத்தை இன்றைய ஆட்சியாளர்கள் பின்னிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன் போன்ற வல்லரசு நாடுகளுடைய பகாசுர கம்பெனிகளின் மரணப் பிடிக்குள் இந்திய விவசாய உற்பத்தியை மாட்ட வைக்கும் மாபெரும் திட்டம் தயாராகி வருகின்றது.

**நாட்டைப் பாலைவனமாக்கும் நாசகாரத் திட்டம்**

இதன் விளைவாக, இந்திய விவசாய நிலங்களில் ஒரு பகுதி எத்தியோப்பியா போல் பாலைவனமாகும்; இன்னொரு பகுதி சதுப்பு நிலமாகும்; அல்லது உப்பு படிந்து பாழாகும். நல்ல விளைநிலமெல்லாம், தண்ணீரெல்லாம் விஷமாகப் போகிறது; அரிசி, கோதுமை, பருப்பு, இறைச்சி, எண்ணெய் வித்துக்கள் போன்ற அடிப்படை தேவைப் பொருட்களின் வினியோகம், வியாபாரம் எல்லாம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் உலக சந்தையின் கிடுக்கிப்பிடியில் சிக்கும்; விலைகளும், வினியோகமும் அவைகளின் நலன்களுக்கேற்பவே தீர்மானிக்கப்படும்; கோடிக் கணக்கான விவசாயிக் குடும்பங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், பட்டினிச் சாவிற்கும் தள்ளப்படுவார்கள்.

என்ன ரக விதைகளை விதைப்பது, எந்தமாதிரி பயிர் செய்வது, என்ன ரக கோழி, பால் மாடுகளை வளர்ப்பது, பால் பொருட்கள், முட்டை போன்றவற்றை எவ்வளவு உற்பத்தி செய்வது, என்ன விலைக்கு விற்பது ஆகிய அனைத்தையும் ஏகாதிபத்தியவாதிகள் தான் நிர்ணயம் செய்வார்கள். மொத்தத்தில் ஒரு காலனிய நாட்டு விவசாயத்தைப் போன்ற நிலைமைக்கு இந்தியா தள்ளப்படும்; கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு, ஏன் பணக்கார விவசாயிகளுக்கும் பேரழிவை கொண்டு வரப்போகின்ற அதே வேளையில், ஏகாதிபத்தியங்கள், அவர்களின் தரகர்களான டாட்டா, பிர்லா போன்ற பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோருக்கு ஆதாயத்தையும், அதிகாரத்தையும் அதிகரிக்கின்ற ஒரு வஞ்சகத் திட்டம் வந்து கொண்டிருக்கிறது.

உலக வங்கியால் உத்திரவிடப்பட்டு நரசிம்மராவ் அரசால் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார கொள்கைகளின் விளைவாக என்ன மாதிரியான கொடுமையான பொருளாதார சுரண்டலுக்கு நாம் ஆளாக்கப்படுகிறோம் என்பதை அறிவோம். விலைவாசிகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன; திட்டமிட்டு தொழிலாளர்கள் வேலை பிடுங்கப்பட்டு வெளியே அனுப்பப் படுகிறார்கள்; சுகாதாரம், கல்வி, சாலை வசதிகள் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வெட்டப்படுகின்றன; அதே சமயத்தில் ஏகாதிபத்திய கம்பெனிகளும் தரகுப் பெருமுதலாளிகளும் கொள்ளையடிக்க பலவகை வசதிகளும் சலுகைகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதைத்தான் புரட்சிகரமான பொருளாதார சீர்திருத்தங்கள் என்று காங்கிரஸ் - அ.தி.மு.க. கட்சியினரும் அவர்களது தாசர்களும், அடிவருடி பத்திரிகைகளும் வானொலி, வானொளியும் புகழ்ந்து பேசி வருகின்றன. இந்தப் 'புரட்சிகரமான பொருளாதார சீர்திருத்தங்களின்' ஒரு பகுதியாகத் தான் இப்போது விவசாயத் துறையில் இவர்களின் வேட்டைப் பார்வையும் இரத்தம் சொட்டும் பற்களும் கொலைக் கரங்களும் திரும்பியிருக்கின்றன.

**பசுமைப் புரட்சியா?**
**வறுமைப் புரட்சியா?**

இப்படித்தான் ஒரு 25 ஆண்டுகளுக்கு முன்னர் ''பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி'' என்று கூவிக் கொண்டு இவர்கள் வந்தனர்; பசுமைப் புரட்சியினால் விளைச்சல் ஓகோவென்று பெருகும் என்றும் விவசாயிகளின் வாழ்க்கையில் வசந்தம் வருமென்றும் வாய்ப்பந்தல் போட்டனர். வசந்தம் வந்தது; ஆனால் அது உரம், பூச்சி மருந்து, டிராக்டர் போன்ற எந்திரங்களைத் தயாரித்து விற்ற ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களின் கூட்டாளிகளான தரகுப் பெருமுதலாளிகளுக்கும் அரசாங்க சலுகைகளை அப்படியே அள்ளிப் பருகிய நிலப்பிரபுக்களுக்கும்தான்! அவர்களின் கொள்ளை லாபம் ஓகோவென்று பெருகியது.

> **வல்லரசு நாடுகளுடைய பகாசுர கம்பெனிகளின் மரணப் பிடிக்குள் இந்திய விவசாயத்தை மாட்ட வைக்கும் மாபெரும் சதித்திட்டம் தயாராகி வருகிறது. இதன் விளைவாக இந்தியா பாலைவனமாகும்.**

ஆனால் பாடுபட்டு உழைத்த கூலி விவசாயிகளின் உண்மையான கூலி குறைந்தது. அவர்கள் மேலும் ஓட்டாண்டியானார்கள்; சிறு விவசாயிகள் நிலத்தை இழந்து கூலி விவசாயிகளானார்கள்; நடுத்தர விவசாயி முட்டுவலி செலவிற்கு வாங்கிய கடனைக்கட்ட ஒரு பகுதி நிலத்தை விற்று சிறு விவசாயி ஆனான்; பணக்கார விவசாயிகள் கூட விவசாயத்தால் ஆதாயம் இல்லை என்று புலம்பினர்; பசுமைப் புரட்சி ஏற்படுத்திய புரட்சி இதுதான்!

பசுமைப் புரட்சியினால் புகுத்தப்பட்ட பூச்சி மருந்துகள் பலவும் மனிதனுக்கும் பயிர்களுக்கும் நிலத்திற்கும் ஆடு மாடுகளுக்கும் தீங்கு விளைவிக்கிறது என்பதால் மேலைநாடுகளில் தடை செய்யப்பட்டவையாகும்! ஆனால் அவையோ இங்கு தாராளமாக அனுமதிக்கப்பட்டன; இதன் விளைவாக, நாம் உண்ணும் உணவு, பழங்கள், காய்கறிகள், இறைச்சி, ஏன் தாய்ப்பாலில் கூட அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் நச்சுப் பொருள் கலந்துவிட்டது. ரசாயன உரங்களால் தண்ணீரும் நிலமும் மேலும் மேலும் விஷமாகி வருகின்றது. பூச்சி மருந்துகளால் பூச்சிகள் ஒழியவில்லை; மாறாக, புதுப்புது பூச்சிகள், நோய்கள் பெருகி விட்டன; என்ன மருந்து அடித்தாலும் அவை சாவதில்லை என்ற நிலை உருவாகி விட்டது.

இதனால், ஆந்திர மாநிலத்தில் பருத்தி விவசாயிகள் போண்டியாகி பலர் தற்கொலை செய்து கொள்ளுமளவிற்கு நிலைமை பாரதூரமாக வளர்ந்துவிட்டது! விளைச்சல்களுக்கு இடையில் நிலத்தை ஆறப்போடாமல் தொடர்ந்து பயிர் செய்ததாலும், முறையான வடிகால் அமைப்பை அரசு ஏற்படுத்தாததாலும் நல்ல நன்செய் நிலங்கள் சதுப்பாக மாறிவருகின்றன; மேல் மட்டத்தில் உப்பு படிந்து பயிர்கள் கருகுகின்றன.

பசுமைப் புரட்சிக்கு தேவையான உரங்கள், பூச்சி மருந்துகள், டிராக்டர்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய கோடிக்கணக்கான ரூபாய் அன்னிய செலாவணி பயன்படுத்தப்பட்டது; இவ்வாறு செலவு செய்யப்பட்ட பணத்தின் மதிப்பு ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 20 இலட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்வதற்கு சமமாக இருந்தது. மொத்தத்தில், இது பசுமைப் புரட்சிக்கு முன் இறக்குமதி செய்த கோதுமையின் அளவை விட 50% அதிகமாகும். இவ்வாறு பசுமைப் புரட்சியின் முக்கிய நோக்கமான சுயசார்பே கிழிந்து போனது.

படிப்பகம்

www.padippakam.com

**விவசாயத்தை சூதாட்டமாக்கிய பசுமைப் புரட்சி**

இத்தனைக்கும் பசுமைப் புரட்சியினால் உற்பத்தி விகிதமும் அதிகரித்து விடவில்லை; 1950ம் ஆண்டிலிருந்து 1965ம் ஆண்டு வரையிலான 15 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக விவசாய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 3.2% இருந்தது. 1968ல் தான் பசுமைப் புரட்சி புகுத்தப்பட்டது. 1968ம் ஆண்டிலிருந்து 1978 வரை 10 ஆண்டுகளில் விவசாய உற்பத்தியின் வளர்ச்சி விகிதமோ ஆண்டு ஒன்றிற்கு 2.5% மட்டுமே இருந்தது. மேலும் 1949-50ம் ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்தியின் அளவு 5.4 கோடி டன்னாக இருந்தது; 1964-65ம் ஆண்டில் அதாவது 15 ஆண்டுகளில் உற்பத்தி 8.9 கோடி டன்னிற்கு உயர்ந்தது. அதாவது மொத்த உற்பத்தி 65% அதிகரித்தது. பசுமைப் புரட்சி புகுத்தப்பட்ட ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்தியின் அளவு 9.5 கோடி டன்னாக இருந்தது; அதிலிருந்து 15 ஆண்டுகள் கழித்து, அதாவது, 1983-84ம் ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்தியின் அளவு 15.1 கோடி டன்னாக மட்டுமே உயர்ந்தது; அதாவது, வளர்ச்சி விகிதம் 57% மட்டுமே!



எல்லாவற்றிற்கும் மேல், பசுமைப் புரட்சி இந்தியா முழுமைக்கும் வரவில்லை; பஞ்சாபின் ஒரு பகுதி, ஆந்திராவின் ஒரு பகுதி, தமிழ்நாட்டில் ஒரு பகுதி என்று திட்டு திட்டாக அதன் வளர்ச்சி உள்ளது; அதுமட்டுமல்ல; பசுமைப் புரட்சி என்பது கோதுமையில் மட்டும்தான் ஏற்பட்டது; பசுமைப் புரட்சியால் மொத்த உணவு தானிய உற்பத்தியில் கோதுமையின் பங்கு அதிகரித்தது; அதே வேளையில், அரிசி, பருப்பு போன்றவைகளின் பங்கு குறைந்தது. நமது நாட்டின் பிரதான பயிர் நெல்லாக இருந்தும் இதன் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை; காரணம் பசுமைப் புரட்சி. தொழில் நுட்பங்கள், தளவாடங்கள் எல்லாம் மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலிருந்து அவைகளின் ஆதாயத்திற்காக இங்கே இறக்குமதி செய்யப்பட்டவையாகும். அங்கே கோதுமை உற்பத்திதான் பிரதானம் என்பதால், அதற்காக உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்களும் சாகுபடி முறைகளும் தான் இங்கே அப்படியே பயன்படுத்தப்பட்டு கோதுமை விளைச்சல் மட்டும் அதிகரித்தது.

நமது நாடு பழம்பெரும் விவசாய நாடு; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறோம். நமது நாட்டு மண்ணிற்கும் தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற விதை ரகங்களும் சாகுபடி முறைகளும் உருவாக்கப்பட்டு இருந்தன. ஆயிரக்கணக்கான ஆண்டு அனுபவத்தால், உழைப்பால் புடம்போடப்பட்டு இவை உருவாக்கப்பட்டன; இயற்கையில் கிடைத்த உரங்களே பயன்படுத்தப்பட்டன. அப்போதெல்லாம் எப்போதாவது ஒரு தடவை, எங்கோ தான் பூச்சிகள், நோய்களின் தாக்குதல் இருந்தது! மொத்தத்தில் நமது விவசாயம் ஆரோக்கியமாக, திடகாத்திரமாக இருந்தது. ஆனால், உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு, அமோக விளைச்சல், அமோக லாபம் என்று ஆசை காட்டப்பட்டு புகுத்தப்பட்ட பசுமைப் புரட்சி நமது விவசாயத்தையே நோஞ்சானாக்கி தீராத நோயாளியுமாக்கி விட்டது. இன்று பழைய ரகங்கள் சுத்தமாக இல்லை; கூலி கொடுத்து புழுவைப் பிடித்து மருந்து டப்பாவில் போட்டு கொல்ல வேண்டிய நிலைமை; விலை என்ன ஆகுமோ என்ற தவிப்பு; மொத்தத்தில், விவசாயம் ஒரு சூதாட்டமாகி விட்டது; பசுமைப் புரட்சி செய்ததெல்லாம் இதுதான்!

> ***பசுமைப்புரட்சியினால் ரணமாக்கப்பட்ட இந்திய விவசாயிகளின் பச்சைப் புண்ணைக் கீறி உப்புப் போட்டு தேய்க்கும் வேலையில்தான் இன்று நரசிம்மராவ் அரசு இறங்கியுள்ளது.***

ஆனால், அந்தோ! பசுமைப் புரட்சியினால் ரணமாக்கப்பட்ட இந்திய விவசாயிகளின் பச்சைப் புண்ணைக் கீறி உப்பு போட்டு தேய்க்கும் வேலையில் தான் இன்று நரசிம்மராவ் அரசு இறங்கியுள்ளது; இல்லை, அதில் சித்திரவதை செய்து மெல்லக் கொல்லும் விஷத்தை தடவி விடும் வேலையில் இறங்கியுள்ளது. பசுமைப் புரட்சியைப் போலவே, இப்போதும் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய எஜமானர்களின் உத்திரவிற்கு ஏற்பவே, அவர்கள் மற்றும் அவர்களது இந்திய அடிவருடிகளான தரகுப் பெரு முதலாளிகள் -நிலப்பிரபுக்களின் நலன்களுக்கு சேவை செய்யவே விவசாயத் துறையில் 'பொருளாதாரப் புரட்சியை'க் கொண்டுவர திட்டமிட்டு உள்ளது. டீசல் விலையை ஏற்றியது, உரத்திற்கு மானியத்தைக் குறைத்தது, இலவச மின்சாரத்தை ரத்து செய்ததோடு குறிப்பிட்ட தொகைக்கு குறைவாக மின்கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற முடிவுகள் இதன் முன்னோடி தான்; இவைகளை விடவும் பெரிய அபாயம் இனிமேல் தான் வர உள்ளது!

**விவசாயிகளைப் போண்டியாக்க ஏகாதிபத்தியங்களின் சதி**

சர்வதேச அளவில் வர்த்தகம் நடைபெறுவது நமக்குத் தெரியும். ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பாக, எந்த மாதிரி வரி விதித்துக் கொள்வது, எவ்வளவு வரிகள் விதிப்பது, என்ன மாதிரி வர்த்தக நெறிமுறைகளைக் கையாளுவது என்பது தொடர்பாக உருவாக்கப்பட்டதுதான் வர்த்தகம், காப்பு வரிகள் பற்றிய பொது உடன்பாடு (GATT -காட்) (வ.வ.பொ.ஒ) ஆகும். இந்த ஒப்பந்தத்தை, ஆரம்பத்தில் இந்தியா உட்பட 23 நாடுகளே போட்டிருந்தன. இப்போது மொத்தம் 108 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள பல சுற்று பேச்சு வார்த்தைகளை இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் நடத்தியுள்ளன. கடந்த 1986ம் ஆண்டு நடந்த உருகுவே சுற்று பேச்சு வார்த்தையின் போது, உலக வர்த்தகம் பற்றி பிரச்சினைகள் ஆராயப்பட்டன. சில பிரச்சினைகளில் ஒருமித்த முடிவு எடுக்க முடியாததால், 1990க்குள் முடிய வேண்டிய பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதுவே உருகுவே சுற்று பேச்சு வார்த்தைகள் என்று அழைக்கப்படுகின்றது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துவதால், இங்கேயும் அவைதான் அனைத்தையும் தீர்மானிக்கின்றன. நம்மைப் போன்ற பின்தங்கிய, வளரும் விவசாய நாடுகளான காலனிய, அரைக் காலனிய, நவீன காலனிய நாடுகளைக் கொள்ளையடிப்பதில் யாருக்கு எவ்வளவு பங்கு என்பதை இவை இங்கே தீர்மானித்துக் கொள்கின்றன.

உருகுவே சுற்று பேச்சு வார்த்தைகளில் ஏழு புதிய இனங்கள் (areas) புகுத்தப்பட்டுள்ளன. அவை 1) விவசாயம், 2) சேவைத் துறைகள், 3) அறிவுத்துறை சொத்துடமை உரிமைகள், 4) முதலீட்டு நடவடிக்கைகள், 5) ஜவுளி, 6) சந்தையைப் பெருக்குவது, 7) பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு முடிவான நடவடிக்கைகளை எடுப்பது. உரு

படிப்பகம்

www.padippakam.com

குவே சுற்று பேச்சு வார்த்தைகளில் விவசாயத் துறையும் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அமெரிக்காதான் நிர்ப்பந்தித்து விவாதத்திற்குக் கொண்டு வந்தது. இதற்கு ஒரு முக்கியமான காரணம் உள்ளது. இதுவரை, உலக அளவில்; விவசாயப் பொருட்களின் சந்தையில் பெருமளவு பகுதியை அமெரிக்க வல்லரசு தனது ஆதிக்கத்தில் வைத்திருந்தது. இதற்குப் போட்டியாக, இப்போது ஐரோப்பிய பொது சமூக நாடுகள் (EEC) வந்துள்ளன. தனது தலைமை ஆதிக்கத்திற்கு இவ்வாறு ஆபத்து வந்ததும் அமெரிக்கா தனது கொள்ளை லாப நலன்களைப் பாதுகாக்க வ.வ.பொ.ஒ. பேச்சு வார்த்தைகளில் விவசாய விளைபொருள் தொடர்பாகவும் புதிதாக விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமென்று அடாவடி செய்து வருகின்றது.

அதன் மூலம் நம்மைப் போன்ற வளரும் நாடுகளின் விவசாயத்தை முற்றாகக் கட்டுப்படுத்தவும் சர்வதேச விவசாய விளைபொருள் சந்தையை பிற ஏகாதிபத்தியங்களுடன் பங்கு போட்டுக் கொள்ளவும் அமெரிக்கா முயல்கிறது. நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் தகவல்களை தமது ஏகபோக ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வதன் மூலம் இதைச் சாதிக்க முயல்கின்றன. இதன் மூலம் நம்நாடு போன்ற வளரும் விவசாய நாடுகளை மீண்டும் காலனியாக்க அமெரிக்காவும் பிற வல்லரசுகளும் வெறி பிடித்து அலைகின்றன. தனது விருப்பப்படி விவசாய விளைபொருள் வர்த்தகம் தொடர்பாக புதிய சட்டதிட்டங்களை உருவாக்க எதிர்ப்பு தெரிவிக்கும் நாடுகளை 'சிறப்பு 301' என்ற வர்த்தக ஆயுதத்தைக் காட்டி அமெரிக்கா மிரட்டி வருகின்றது. (சிறப்பு 301 என்ற அமெரிக்க சட்டப்படி, அமெரிக்காவின் வர்த்தக தொழில் நலன்களுக்கு எதிராக செயல்படும் நாடுகளை தனிமைப்படுத்தி, அவைகளுக்கு எதிராக சர்வதேச சந்தையிலும் பிற பொருளாதார அரங்குகளிலும் நிதி அரங்குகளிலும் அமெரிக்கா செயல்படும்; மேலும் அந்த நாட்டுடன் நடக்கும் வர்த்தகத்திலும் கடுமையான நிபந்தனைகளை விதிக்கும்; இதன் மூலம் எதிர்ப்பு தெரிவிக்கும் நாடுகளை பணிய வைக்கும்).

**டங்கல் திட்டம்:**
**சுயசார்புக்கு சுருக்குக் கயிறு**

வ.வ.பொ.ஒ.- வின் தலைவர் (டைரக்டர் ஜெனரல்) ஆர்தர் டங்கல் என்பவர். இவர் 440 பக்கங்கள் கொண்ட ஒரு நகல் ஒப்பந்தத்தை 1991 டிசம்பரில் வெளியிட்டார். இது 'டங்கல் முன்மொழிதல்கள்' என்றழைக்கப்படுகின்றது. அந்த முன்மொழிதல்கள் முழுவதும் அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வல்லரசுகளின் சுரண்டல், ஆதிக்க நலன்களைக் குறிக்கோளாக கொண்டே முன் வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச வர்த்தகம் பற்றிய முடிவுகள் மட்டுமல்ல, நம் போன்ற வளரும் நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகளும் அவற்றின் இலக்காக வைக்கப்பட்டுள்ளன.

நமக்கு மிகவும் பாதகத்தையும் நாசத்தையும் உண்டுபண்ணுகின்ற இரண்டு திட்டங்கள் அவைகளில் உள்ளன. ஒன்று, நமது நாட்டு உரிமைப்பதிவு சட்டத்தை அவர்களின் சுரண்டல் நலன்களுக்கு தகுந்தவாறு மாற்றுவது; இரண்டு, நமது நாட்டு விவசாய சந்தையில் ஏகாதிபத்திய நாடுகள் தங்கு தடையின்றி புகுந்து ஆதிக்கம் செலுத்த, அவர்கள் விருப்பத்திற்கு ஆட்டிப்படைக்க அனுமதிப்பது.



> **கூலி விவசாயிகள் ஓட்டாண்டிகளானார்கள்; சிறு விவசாயிகள் நிலத்தை இழந்தார்கள்; நடுத்தர விவசாயிகள் கடனாளியானார்கள். பசுமைப் புரட்சியின் சாதனை இதுதான்.**

இந்திய உரிமைப்பதிவு (பேடண்ட்) சட்டங்களின்படி, உணவுப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள், மருந்துகள் ஆகியவைகளில் செய்யப்படுகின்ற பொருள்களுக்கு, பொருளின் அடிப்படையில் உரிமைப் பதிவு கொடுக்கப்படுவதில்லை. செய்முறைக்குத்தான், தயாரிப்பு முறைக்குத்தான் உரிமைப்பதிவு (பேடண்ட் உரிமை) கொடுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பொருளை முதன்முதலில் தயாரிப்பவர்களுக்கு அந்தப் பொருள் தொடர்பான தயாரிப்பு உரிமையைத் தருவது உரிமைப்பதிவு சட்டமாகும். இந்திய சட்டப்படி அதிகபட்சம் ஏழு ஆண்டுகளுக்குத்தான் பேடண்ட் உரிமை கொடுக்கப்படுகின்றது.

இது தங்களது கம்பெனிகளுக்கு தீங்கு விளைவிக்கின்றது என்று அமெரிக்கா கூக்குரலிட்டு வருகின்றது. சர்வதேச கம்பெனிகள் இந்தியாவில் முதலீடு செய்ய, வர்த்தகம் செய்ய இந்திய உரிமைப் பதிவு சட்டங்கள் தடையாக உள்ளன; எனவே அவைகளை அகற்றுங்கள் என்று உலக வங்கி, ஐ.எம்.எஃப். ஆகிய சர்வதேச கந்துவட்டிக்காரர்கள் இந்திய அரசிடம் ஆணையிட்டு வருகிறார்கள். செய்யும் முறைக்கு அல்ல; செய்யப்படும் பொருளுக்கே பேடண்ட் உரிமை தரப்பட வேண்டும்; அதுவும் 20 வருடத்திற்கு என்று ஆணையிட்டு வருகின்றன.

ஒருவர் உரிமைப்பதிவு செய்த செய்முறையை மற்றவர் காப்பி அடித்து செய்யக்கூடாது என்பது பொது விதியாகும். அப்படி ஒருவர் மீறி செய்தால், அவர் மீது வழக்கு போடப்படும். அவர் காப்பி அடித்தார் என்று உரிமைப் பதிவு செய்திருப்பவர் நிரூபித்து விட்டால், காப்பி அடித்தவருக்கு தண்டனை உண்டு. ஆனால், உலக வங்கியும், ஐ.எம்.எஃப்பும் கோருகின்ற மாற்றம் என்னவென்றால், 'தடா' சட்டம் போல, தான் காப்பியடித்துச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டவர் நிரூபிக்க வேண்டும் என்பதாகும்.


டங்கல் முன்மொழிதல்களும் இவைகளைத்தான் முன்வைத்துள்ளன. வெளிநாட்டு நிறுவனம் ஒன்று, ஒரு குறிப்பிட்ட பொருளை, குறிப்பிட்ட ஒரு முறையில் தயாரித்து சந்தைக்குக் கொண்டு வரும்போது, அந்தப் பொருளை வேறு ஒரு முறையைப் பயன்படுத்தி இந்திய நிறுவனம் தயாரித்தாலும், மேற்படி வெளிநாட்டு நிறுவனத்தின் முறையைப் பயன்படுத்தியே அந்தப் பொருளை இந்திய நிறுவனம் தயாரித்ததாகக் கருதப்படும். இதற்காக அந்த இந்திய நிறுவனம் அந்த வெளிநாட்டு நிறுவனத்திற்கு உரிய சன்மானத்தை (ராயல்டியை) தர வேண்டும். அல்லது தண்டனையை ஏற்க வேண்டும். இந்த உரிமையை அனுபவிப்பதற்கு காலக்கெடு 10 ஆண்டுகள் ஆகும். அதாவது, 10 ஆண்டுகள் கழித்தே புதியவர்கள் உரிமை கோரி மனு செய்ய முடியும்.

மேலும், உற்பத்திப் பொருட்களுக்கு மட்டுமல்ல; தாவரங்களுக்கும், பயிர்களுக்கும், விலங்குகளுக்கும் (அதாவது, ஆடு மாடு, பன்றி, குதிரைகளுக்கும்) இந்த மாதிரியான பேடண்ட் சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று டங்கல் முன்மொழிதல்கள் குறிப்பிடுகிறது. அவை என்ன என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

மத்திய அமெரிக்க நாடான ஹெய்தியில் தொடரும் உள்நாட்டுப் போர் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஹெய்தியில் இன்னமும் அமைதி திரும்பாத நிலையில், இம்மக்களை மீண்டும் மரண வாயிலுக்கு விரட்டுகிறது புஷ் அரசு. காரணம், இவர்கள் ஏழை நாட்டைச் சேர்ந்த கருப்பு நிறமுடைய அகதிகள். அவர்கள் அமெரிக்காவில் இருப்பது வெள்ளை நிற வெறி பிடித்த புஷ் அரசின் கண்களை உறுத்துகிறது. எனவே அமெரிக்காவில் அகதிகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு இம்மக்களைத் துரத்துகிறது. மனித உரிமை, சமத்துவம், நாகரீகம் பற்றி வாய்கிழியப் பேசும் அமெரிக்க கோமான்களின் யோக்கியதை இதுதான்!

பின் விளைவுகளைப் பற்றி கொஞ்சமும் அக்கறையின்றி ''நார் பிளாண்ட் - ஆர்'' (Norplant - R) எனப்படும் கருத்தடைச் சாதனம் அண்மைக் காலமாக இந்தியத் தாய்மார்கள் மீது திணிக்கப்பட்டு வருகிறது. சிறிய மாத்திரை வடிவிலான இச்சாதனத்தை தாய்மார்களின் அக்குள் பகுதியில் அறுவை சிகிச்சை மூலம் பொருத்திவிட்டால் அது உற்பத்தி செய்யும் ஹார்மோன்கள் மூலம் ஐந்தாண்டுகளுக்கு கருத்தரிப்பு நடக்காது என அதிகாரிகள் கூறுகின்றனர். உ.பி., ராஜஸ்தான் மாநிலங்களில் இப்புதிய கருத்தடைச் சாதனத்தால் ஆயிரக்கணக்கான தாய்மார்களுக்கு வாந்தி, மயக்கம், உடல் அரிப்பு, மாதவிடாய் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் தவறான சில ஆதாரங்களைக் காட்டி, இக்கொடிய கருத்தடை சாதனத்தை பெண்ணினத்தின் மீது ஆதிக்க வெறியுடன் திணித்து வருகிறது. கொலைகார இந்திய அரசு. உலக அளவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய நாடுகளுள் ஒன்றாக இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டதற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா?

தமிழக அரசு கல்விக்காக ஆண்டுதோறும் ரூ.1200 கோடி ஒதுக்கீடு செய்கிறது. இதில் ஆரம்பக் கல்விக்காக ரூ.480 கோடி மட்டுமே தரப்படுகிறது. இந்த 480 கோடியில் 70% தொகை ஆசிரியர்களின் ஊதியமாகப் போய்விடுகிறது. 20% தொகை சத்துணவுத் திட்டத்துக்கு செலவிடப்படுகிறது. எஞ்சிய 10% தொகை — அதாவது 4.8 கோடி ரூபாய்தான் ஆரம்பக் கல்விக்காக செலவிடப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 30,000 ஆரம்பப் பள்ளிகளில் 3 லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். உண்மையில் 6 லட்சம் ஆசிரியர்கள் தேவை. ஆனாலும் நிதியில்லை என்று புதிய ஆசிரியர்களை நியமிக்க மறுக்கிறது அரசு. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் கி.பி.2000ல் தமிழ்நாடு தற்குறிகளின் நாடாகிவிடும் என்று அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தரே குற்றம் சாட்டியுள்ளார். பாசிச ஜெயலலிதாவின் உருவப் படத்தை பச்சைக்குத்திக் கொள்ளும் காட்டுமிராண்டிகளே தமிழக அரசின் மந்திரிகளாக உள்ளபோது ஆட்சியாளர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

''என் மகளை யார் திருமணம் செய்து கொள்வார்கள்?'' என்று வேதனையோடு புலம்பினார் அந்தத் தாய். அவரது 22 வயதான மகள் கூன் விழுந்த முதுகுடன் தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தார். ஆந்திராவின் நலகொண்டா வட்டாரத்திலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்படி நடைபிணமாகி விட்டார்கள். அப்பகுதிவாழ் மக்களின் பற்கள் பழுப்பேறி விகாரமாகிவிட்டது. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டதைப் போல பல குழந்தைகளின் கை-கால்கள் வளைந்து முடங்கி விட்டன. இப்பகுதியில் கிடைக்கும் குடிநீரே அவர்களுக்கு எமனாக மாறிவிட்டது. குடிநீரில் புளோரசிஸ் எனப்படும் புளோரைடு விகிதம் அளவுக்கு மீறி அதிகரித்ததன் கோர விளைவுகள்தான் இவை. சாதாரணமாக 1 முதல் 1.5 பங்கு அளவுக்கு இருக்கவேண்டிய புளோரைடு விகிதம் நலகொண்டா, பிரகாசம், குண்டூர் மாவட்டங்களில் 8 முதல் 10 பங்கு அளவுக்கு உள்ளது. 1932ஆம் ஆண்டிலேயே இது கண்டறியப்பட்ட போதிலும் இன்றுவரை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாகார்ஜுன சாகர் அணையிலிருந்து பாதுகாப்பான குடிநீர் தரும் திட்டம் இன்னமும் காகிதத் திட்டமாகவே உள்ளது. தலைமுறை தலைமுறையாக இந்நச்சு நீரைக் குடித்து, இளமையிலேயே முடமாகி 30 வயதுக்குள் பெரும்பாலோர் மரணமடைவது இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. 40 ஆண்டு காலமாக கயவாளி காங்கிரசு ஆட்சியாளர்கள் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறைக்கு இன்னுமொரு சான்று இது.

ஆறுவயதான அலெக்சாந்தர்; புளோரைடு மிகுந்த குடிநீரின் கோரத் தாக்குதலுக்கு ஆளான ஏழைச் சிறுவன்.



அமெரிக்காவின் நவகாலனிய நாடான பிலிப்பைன்சில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு ராணுவ சர்வாதிகாரி மார்க்கோசுக்கு எதிராகப் பொங்கி எழுந்த மக்களின் போராட்டத் தலைமையைக் கைப்பற்றிய ஏகாதிபத்திய அடிவருடியான அகினோ அம்மையார், அடுத்து நடந்த தேர்தலில் வெற்றி பெற்று அதிபரானார். ஏகாதிபத்தியங்கள் அவரை மாபெரும் வீராங்கனையாகச் சித்தரித்தன. ஆனால் இப்போது பிலிப்பைன்சில் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் போட்டியிடக்கூட முன்வராமல் செல்வாக்கிழந்து கிடக்கிறார் அகினோ. அகினோ மீது வெறுப்படைந்துள்ள மக்கள் இன்று கவர்ச்சிவாத அரசியலின் பின்னே அணிவகுத்து நிற்கின்றனர். முன்னாள் சினிமா நடிகராக இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ள ஜோசப் எஸ்ட்ராடா என்பவர் இப்போது அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார். அவருக்குத்தான் செல்வாக்கு அதிகமாக உள்ளதென்று பத்திரிகைகள் கூறுகின்றன. ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமை இல்லாவிட்டால், அது சீரழிந்து கவர்ச்சி வாதத்துக்கும் பாசிசத்துக்கும் வழியமைத்துக் கொடுக்கும் என்பதை பிலிப்பைன்ஸ் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

காஷ்மீரை நோக்கி ''ஏக்தா'' யாத்திரை நடத்தி 'தேசிய ஒருமைப்பாட்டை' நிலைநாட்டி விட்டதாக இந்துவெறி பாரதீய ஜனதா கட்சியினர் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் ஜம்மு-



படிப்பகம்

www.padippakam.com

காஷ்மீர் மாநில பாரதீய ஜனதா கட்சிக்குள் புகைச்சல் கிளம்பியுள்ளது. மாநில கட்சித் தலைவரான கஜுரியா தனது பதவியைத் துறந்துவிட்டு, அகில இந்தியத் தலைவரான ஜோஷிக்கு காட்டமான கடிதமும் எழுதியுள் ளார். அதில், "ஏக்தா யாத்திரையின் எதிர் விளைவாக பிரிவினைவாதிகளின் செல் வாக்கு மேலும் அதிகரித்துவிட்டது. காஷ் மீர் பிரச்சினையைத் தீர்ப்பதில் பாரதீய ஜன தாவுக்கு ஆற்றலோ அக்கறையோ கிடை யாது. தனது குறுகிய ஆதாயத்துக்காக பார தீய ஜனதா நடத்திய இந்த விபரீத யாத்தி ரையை இங்குள்ள இந்துக்களே எதிர்க்கின்ற னர். மாநிலத்தில் கட்சி மக்களிமிருந்து முற் றாக தனிமைப்பட்டுவிட்டது" எனக் குறிப் பிட்டுள்ளார். அவரைத் தொடர்ந்து கணிச மான அளவுக்கு உள்ளூர் தலைவர்களும் அணிகளும் கட்சியிலிருந்து விலகியுள்ள னர்.



ஐந்தாண்டுகளாக மூடிக் கிடந்த ஆலையைக் கைப்பற்றி, இயந்திரங்களைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள்; முன்னுதாரணமிக்க போராட்டம்.

அவர்கள் இந்தியாவிலிருந்து அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாக ஜெர் மனிக்கு ஓடிவந்த சீக்கிய இளைஞர்கள். ஜெர்மனியில் தொடரும் இனவெறியர்க் ளின் தாக்குதலுக்கு அஞ்சியும், பன்றித் தொழுவத்தைப் போன்ற அகதி முகாமின் நரக வாழ்க்கையிலிருந்து விடுபடவும் அவர்கள் அமெரிக்காவுக்குத் தப்பியோட முயன்றனர். பீட்டர் உஸ்னி என்ற ஜெர்மா னிய கிரிமினல் பேர்வழி கப்பல் மூலம் ரகசி யமாக நியூயார்க்கில் கரை சேர்ப்பதாகக் கூறி ஒவ்வொருவரிடமும் ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாயைச் சுருட்டிக் கொண்டான். திட் டமிட்டபடி பிப்ரவரி 20ஆம் தேதியன்று சோல்டாவ் நகர அகதி முகாமிலிருந்து சரக் குக் கப்பல் மூலம் நியூயார்க்குச் செல்ல ஏற் பாடு செய்யப்பட்டது. இந்த விவகாரம் வெளியே தெரியாமலிருக்க 12 மீட்டர் நீள-அகலமும் 2.5 மீட்டர் உயரமும் கொண்ட ஒரு மரப்பெட்டியில் ஏறத்தாழ 100 சீக்கியர் கள் அடைக்கப்பட்டு துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். தற்செயலாக சந்தேகத்தின் பேரில் அப்பெட்டியை போலீ சார் உடைத்துப் பார்த்த போதுதான் உண்மை வெளியே தெரிந்தது. காற்று புக முடியாத நிலையில் ஆடு-மாடுகளைப் போல பெட்டியில் அடைக்கப்பட்ட அவர்க ளில் பலர் மூச்சுத் திணறி மயங்கிக் கிடந்த னர். போலீசார் சோதனையிடாதிருந்தால் நியூயார்க் செல்வதற்குள் அவர்கள் அனை வரும் பிணமாகியிருப்பார்கள் என்ற அதிர்ச் சியூட்டும் செய்தியை ஜெர்மானியப் பத்தி ரிக்கைகள் பரபரப்பாக வெளியிட்டன. மேலை நாடானாலும் ஏழை நாடானாலும் அகதிகளின் வாழ்க்கை சோகத்திலும் துயர மானது என்பதை இச்சம்பவம் மீண்டும் உணர்த்தியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாக ஆலை மூடிக் கிடந்தால், அதில் பணியாற்றிய 3,000 தொழிலாளர்கள் எவ்வளவு காலம் தான் பொறுத்திருப்பார்கள்? அரசியல்வாதிக ளும், அதிகாரிகளும், முதலாளிகளும் ஆலையைத் திறப்பதில் தொடர்ந்து அக் கறை காட்டாதபோது, பட்டினியால் பரித விக்கும் தொழிலாளர்கள் எவ்வளவு காலம் பொறுத்திருப்பார்கள்? பந்த் கிரினி காம்கார் சங்கர்ஷ் சமிதி எனும் முற்போக்கான தொழிற்சங்கத்தில் திரண்டிருந்த அத்தொழி லாளர்கள் கடந்த பிப்ரவரி 21ம் தேதியன்று பெரும்படையாகத் திரண்டு பூட்டை உடைத்து ஆலையினுள் நுழைந்தனர். இனி ஆலையை தாங்களே இயக்கி நிர்வகிக்கப் போவதாகவும் அறிவித்தனர். பம்பாயின் பைகுல்லாவிலுள்ள நியூ கிரேட் ஈஸ்டர்ன் மில்ஸ் எனும் ஜவுளி ஆலையில்தான் இந்த வீரம் செறிந்த போராட்டம் நடந்தது. ஆலையை ஏற்று நடத்த அதன் முதலாளி கனோரியா முன்வராத நிலையில், தொழிற் சங்கத்தின் முன்முயற்சியால் வங்கிக் கட னும், மாநகராட்சியிடமிருந்து மின்சாரமும் பெற்று ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இந்த ஆலை இப்போது இயங்கத் தொடங்கியுள் ளது. முதலாளி என்பது வெறும் முண்டம்; அரசு எந்திரம் வெறும் சதைப் பிண்டம் என் பதைத் தங்களது வீரம்செறிந்த போராட்டத் தின் மூலம் பம்பாய் தொழிலாளர்கள் மீண் டும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

"ஏழை எளியவர்களின் ஆட்சி, ஊழலற்ற ஆட்சி மேற்கு வங்கத்தில் இருக்கி றது" என்பது 'மார்க்சிஸ்டு'களின் கோஷம். ஆனால், உண்மையோ தலைகீழ் என்பதற்கு ஆதாரம் இது. மே.வங்கத்தில் ரபீந்திரா சரோவர் எனுமிடத்தில் 33 ஏக்கர் பரப்பள வில் 'சிஸ்சு டீர்த்' எனும் கேளிக்கைப் பூங் காவை அமைத்து வருகிறது 'மார்க்சிஸ்டு' அரசு. மாநிலத்தில் எவ்வளவோ அடிப்ப டைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக் கும்போது நடுத்தர - மேட்டுக்குடி பிள்ளைக ளுக்கு மட்டுமே பயன்படும் வண்ணம் பல மாடி கட்டிடங்களுக்கிடையியே கட்டப்ப டும் இப்பூங்கா தேவையற்றது என அனைத்து கட்சியினரும் எதிர்க்கின்றனர். அந்த இடத்தில் மேம்பாலம் ஒன்று கட்டப்ப டவுள்ளது; அதுதான் மக்களுக்கு தேவை; பூங்கா தேவையில்லையென 'மார்க்சிஸ்டு' களின் கூட்டணி ஆட்சியிலுள்ள 'பார்வர்டு பிளாக் கட்சி' மற்றும் 'புரட்சிகர சோசலிச கட்சி'யைச் சேர்ந்தவர்களே எதிர்க்கிறார்கள்.

இப்பூங்காவிற்குரிய கட்டுமானப் பனியை 'டோடி - சாமாரியா குரூப்' கம் பெனி தன்னிடம் ஒப்படைக்கக் கோரி 50 பக்க செய்முறை அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருந்தது. அதில் 40 பக்கங்கள் வரை லாப - நட்ட கணக்கு இல்லாமல் உள் ளதைச் சுட்டிக்காட்டி கல்கத்தா மேம்பாட்டு குழுவின் சிறப்பு அதிகாரி எதிர்ப்பு தெரி வித்து மாநில தலைமைச் செயலருக்கு எழு தினார். உடன் இவரை மாற்றல் (Transfer) செய்துவிட்டது 'மார்க்சிஸ்டு' அரசு. டோடி குரூப் கம்பெனியுடன் செய்து கொண்ட ரக சிய ஒப்பந்தத்தில் தில்லுமுல்லு நடந்துள் ளது என்ற குற்றச்சாட்டையும் கூட சட்டை செய்யாமல் பூங்காவை அமைப்பதிலேயே குறியாய் இருக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். எதிர்ப்புகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அடிக்கல் நடுவிழாவையும் நடத்திவிட்டார் முதல்வர் ஜோதிபாசு!

வரதட்சிணை கொலைகளிலும், கள்ளச் சாராய சாவிலும் முதலிடம் வகித்து தலைநகரமாகத் திகழும் டெல்லி இப்போது கற்பழிப்புக் குற்றங்களின் தலைநகரமாக வளர்ந்துள்ளது. 1980-ல் 5023 ஆக இருந்த கற்பழிப்புக் குற்றங்கள் பத்தாண்டுகளில் 100% அதிகரித்து 10,068 ஆக முன்னேறி யுள்ளது. 1990-ல் பெண்கள் மீதான பாலி யல் வன்முறைகள் 362 ஆக பதிவாகியிருந் தது. 1991-ல் அது 391 ஆக உயர்ந்துள்ளது. இதுதவிர திருட்டு, கொள்ளை, கொலைக ளும் '90 ஐ விட '91-ல் 40% அதிகரித்து விட்டதாக போலீசார் கூறுகின்றனர். கடந்த ஈராண்டுகளில் பம்பாயை விட டெல்லியில் அதிக அளவில் குற்றங்கள் பெருகி வருவ தாக அவர்கள் ஆதாரங்களைக் காட்டுகின்ற னர். டெல்லி - இந்தியாவின் தலைநகர் மட் டுமல்ல; மக்கள் விரோதிகளின் ஆட்சியில் அது குற்றத் தலைநகரமாக முன்னேறிவிட் டது.

படிப்பகம்

www.padippakam.com




● *நாடு மீண்டும் காலனியாகிறது என்ற கட்டுரையில் உலக வங்கியின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக ஆட்சியாளர்கள் இருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். அதனால் மட்டும் ஒரு நாடு காலனி ஆகிவிடுமா? மீண்டும் கடன் வாங்குவதற்கான ஒரே காரணத்திற்காக ஆட்சியாளர்களால் அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகிறது. நிபந்தனை விதிக்க மட்டுமே உலக வங்கிக்கு உரிமை உண்டு. அதை நடைமுறைப்படுத்துவதோ, படுத்தாததோ இந்திய ஆட்சியாளர்கள் கையில். உதாரணம்- பாங்காங் உலக வங்கி இயக்குனர்கள் கூட்டத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள்: ஏற்றுக்கொண்டு அறிவிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் இந்திய நிதி மந்திரி. அதை ஏற்காமல் விலக்கவும் அவருக்கு உரிமை உண்டு. அது உங்களுக்கும் தெரியும். உலக வங்கி தருவதைவிட அதிகமாக யாரேனும் கடன் தருவதாயிருந்தால் அவர்கள் சொல்வதையே செய்வார்கள் இந்திய ஆட்சியாளர்கள். மறுக்க முடியுமா உங்களால்? அப்படி இருக்க இந்தியா காலனியாகவோ, நவீன காலனியாகவோ எப்படி ஆக முடியும்? ஆக, ஏய்ப்பது உங்களால் ஓடுகாலிகள் என்று அழைக்கப்படுபவர்கள் அல்ல. நீங்கள்தான் ஏய்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.*

*-சண்முகம், பள்ளிபாளையம்.*

★ இந்த விவகாரத்தில் தொடர்ந்து அம்பலப்பட்டுவரும் நரசிம்மராவ், மன்மோகன் சிங், சிதம்பரம் வகையறாக்கள் திரு. சண்முகத்தையும் அவரது அரசியல் தலைவர்களான கேடயம்-மனஓசை ஓடுகாலிகளையும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்- அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதற்காக. ஆனால் இவர்களும் சேர்ந்துகூட உண்மைகளை மறைத்துவிட முடியாது.

ஐயா, ஒரு குடும்பம் நொடித்துப்போய் பொருளாதார சிக்கலில் மாட்டிக் கொண்டு வட்டிக் கடைக்காரனிடம் கடன் கேட்டுப் போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். கடனுக்கு ஈடாக ஏதாவது அடகு வைக்க வேண்டும் என்று அவன் கோரலாம். இவ்வளவு வட்டிவிகிதம், இவ்வளவு தவணை, இவ்வளவு காலக்கெடு என்றும் கூட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கடன் வாங்கினால் அது அக்குடும்பத்தின் சுதந்திரம், சுயமரியாதையைப் பாதிப்பதாகாது. அக்குடும்பம் என்ன தொழில் செய்கிறது, அதன் வருமானம் என்ன, கடனைத் திருப்பிச் செலுத்த இயலுமா என்பது போன்றவற்றைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வதும், ஆலோசனைகள் கூறுவதும் கூட குடும்பப் பொருளாதார விவகாரம்; ஆனாலும் கடன்காரன் தலையிடுவதாகாது.

ஆனால் அக் குடும்பத்தினர் யார் யாருடன் என்ன உறவு வைத்துக்கொள்ளவேண்டும், மகள்களை யார் யாருக்கு மணமுடித்துத் தரவேண்டும், மகன்கள் என்ன வேலை செய்ய வேண்டும் என்பது போன்றவற்றோடு வேண்டும் போது கடன் பெறும் குடும்பத்துக்குள்ளே புகுந்து, அங்கேயே தங்குவதற்கு அதிகாரமளித்துவிட்டு கடன் வாங்கினால் அது குடும்பத்தையே அடகு வைப்பது தான். அப்படிப்பட்ட நிபந்தனைகளோடுதான் உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய அமைப்புகளிடம் இந்தியா அடகு வைக்கப்படுகிறது.

மீண்டும் கடன் வாங்குவதற்கான ஒரே காரணத்திற்காக உலக வங்கியின் நிபந்தனைகளை ஆட்சியாளர்கள் நிறைவேற்றுவதாக வாசகர் எழுதுகிறார். அது சரியல்ல. அப்படி மீண்டும் கடன் தருவதாக ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் எதுவும் வாக்குறுதி அளிக்கவில்லை. இப்போது தரும் ஒரு ''அற்ப''த் தொகைக்கே இந்த நாட்டை அடகு வைத்திட அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள். உலக வங்கி தருவதைவிட அதிகமாக யாரேனும் கடன் தருவதாயிருந்தால் அவர்கள் சொல்வதையே இந்திய ஆட்சியாளர்கள் செய்வார்கள் என்பதை நாம் எப்போது, எங்கே மறுத்தோம்; இந்திய ஆட்சியாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தரகு வர்க்கங்களின் குணமே அத்தகையதுதான்; அவர்கள் தமது சுய நலன்களுக்காக எப்படிப்பட்ட தேச துரோகத்திலும் ஈடுபடக்கூடியவர்கள் என்பதை நாம் ஏன் மறுக்கவேண்டும்; அது தானே நமது நிலைப்பாடு. ஆனால் இந்திய ஆட்சியாளர்கள் அந்த நிபந்தனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் வாசகர் குறிப்பிடுவதைப்போல கடன்பெறும் தொகையின் அளவைப் பொறுத்ததல்ல; நிபந்தனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் கூட அவர்களது சுயவிருப்பத்தின் அடிப்படையிலானதல்ல; அதற்கான சுதந்திரமும் அவர்களுக்குக் கிடையாது. அத்தகு சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களும் அல்ல. ஏனெனில் ஏகாதிபத்தியங்கள் தமது நிபந்தனைகளை ஏற்க வைப்பதற்காக பொருளாதார, வர்த்தக, நிதி நிர்பந்தங்கள் மட்டுமல்ல; அரசியல், இராணுவ, அரசு,தந்திர ரீதியிலான நிர்பந்தங்களையும் தருகின்றன.

பாங்காங் உலக வங்கி இயக்குனர்கள் கூட்ட நிபந்தனைகளை இந்திய ஆட்சியாளர்கள் ஏற்கவில்லை என்று வாசகர் எழுதுகிறார். இதுவும் சரியல்ல. பத்திரிகையாளர்களிடமும், பாராளுமன்றத்திலும், கருத்தரங்கங்களிலும் மந்திரிகளும் அதிகாரிகளும் பேசுவது ஒன்று; சம்பந்தப்பட்ட அமைச்சகக் கோப்புகளில் எழுதுவது அதற்கு நேரெதிரான வேறொன்று; உண்மையில் இவர்கள் இரட்டை நாக்குப் பேர்வழிகளாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பது ஆதாரங்களுடன் வெளிவந்துள்ளது. உலக வங்கி உத்திரவுகள் என்னென்ன, அவற்றில் எது எதை எந்த அளவு இந்திய ஆட்சியாளர்கள் நிறைவேற்றியுள்ளார்கள், உலக வங்கியும் ஐ.எம்.எஃப்-பும் எள் என்று சொல்லும் முன்னரே இவர்கள் எண்ணெயாக நிற்கிறார்கள் என்பதற்கெல்லாம் விவரங்கள் வெளி வந்துள்ளன.

மேலும் ஏகாதிபத்தியங்கள் விதிக்கும் நிபந்தனைகள் பொருளாதார ரீதியிலானவை மட்டுமல்ல. அரசியல், இராணுவம், அரசு தந்திரம் போன்ற அனைத்துத் துறைகளிலுமானது என்பதும் நிரூபிக்க முடியும். நிபந்தனைகள் விதிப்பதோடு அவற்றை நிறைவேற்றுவதை கட்டங் கட்டமாக நேரடியாகவே ஏகாதிபத்திய அதிகாரிகள் மேற்பார்வையிடுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய ஆட்சியாளர்கள் நாட்டை மறு அடகு வைக்குமாறு நிபந்தனைகளை ஏற்கவில்லை என்றால் சம்பந்தப்பட்ட ஒப்பந்த ஆவணங்களை பகிரங்கமாகப் பாராளுமன்றத்தில் வைத்து விவாதிக்கலாமே; அதை மறுப்பதோடு ஏன் மறைத்து வைத்து இரகசிய பேரங்கள் நடத்துகின்றனர்.

ஏகாதிபத்திய மேல் நிலை வல்லரசுகள், தமது உலக மேலாதிக்க கட்டுமான இயந்திரத்தின் ஒரு வாலாக, ஒரு அங்கமாக இந்தியாவின் அரசியல், பொருளாதார, இராணுவ, அரசு தந்திர, பண்பாட்டு அமைப்பை மாற்றுகிறார்கள். அவசியமாகும் போது நேரடி இராணுவ ஆக்கிரமிப்பிலும் ஈடுபடுவார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் நேரடி, மறைமுக அதிகாரம்-மேற்பார்வையின் கீழ் இந்திய அரசு அமைப்பு கொண்டுவரப்படுகிறது. இதை இந்திய முதலாளித்துவப் பத்திரிகைகளில் நடக்கும் வாத-பிரதி வாதங்களில் இருந்தே அறியமுடியும். ''இந்தியா மீண்டும் காலனியாகிறது'' என்று பொதுத் துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன; ''ஆக்கிரமிக்காமலே காலனியாகிறது''; ''இந்திய சுயாதிபத்தியம் வரி-வர்த்தகப் பொது ஒப்பந்த அமைப்பிடம் (GATT) அடகு வைக்கப்படுகிறது''; ''GATT என்பது நாடுகளைக் கடந்த வல்லரசு'' போன்ற பல ஆதாரபூர்வ ஆய்வுகள் வருகின்றன. இந்திய ஆளும் வர்க்கத் துரோகிகளும் அவர்களுக்கு வக்காலத்து வாங்குபவர்களும் மட்டுமே இதை மறுக்கின்றனர்.

● *காவிரி நீர் பிரச்சினையில் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையைக் கொள்ளவேண்டும் என்றும், கர்நாடகா-தமிழக நலன்கள் பாதிக்கப்படாத வகையில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தக் கோரியும் 31.8.91.-ல்*

படிப்பகம்

*ரமக்குடியில் நடந்த முற்போக்கு இளைஞர் அணியின் (ஆர்.ஒய். ல்.) இராமநாதபுரம் மாவட்ட மாநாடு தீர்மானம் போட்டுள்ளது. இதேபோல் நிலைப்பாடு கொண்டுள்ள பு.ஜ.-வும் பிற அமைப்புக ரும் கூட்டாக (காவிரி நீர் பிச்சினையில்) செயல்படலாமா?*

*-பழனி, பரமக்குடி.*

★அந்த மாநாடு நடந்த கையோடு கேட்கப்பட்ட கேள்வி இது. இடையே சில காரணங்களினால் பு.ஜ. முறையாக வெளிவர வில்லை. வந்தவற்றிலும் இடமின்மை காரணமாக கேள்வி-பதில் பகுதி குறைவாகவே இடம் பெற்றிருந்தது. எனவே தாமதமாக பதிலளிக்கிறோம். ஆனால் அதற்குள்ளாகவே முற்போக்கு இளை ஞர் அணியின் நிலைப்பாடு மாறிவிட்டது. சமீபத்திய நிலைப்பாட் டின்படி, நடுவர் மன்றத் தீர்ப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்கி றார்கள். நடுவர் மன்றத்தை அமைத்ததே எதேச்சதிகாரமானது என் றும் அதன் இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு காவிரிப் பிரச்சினையை மைய அரசு மேலும் சிக்கலாக்கியது என்றும் இப் போது முற்போக்கு இளைஞர் அணி கூறுகிறது. காவிரியில் நன்றாக மழை பெய்து இடைக்காலத் தீர்ப்பில் உள்ள 205 டி.எம்.சி-யை விட அதிகமாகவே தமிழ் நாட்டிற்கு கிடைத்து விட்டதால் அதை அரசித ழில் வெளியிட வேண்டிய உடனடித் தேவை இல்லாத நிலையிலும் கன்னட மக்கள் எதிர்த்த போதிலும் 'மைனாரிட்டி' அரசு தன்னைக் காத்துக் கொள்ளவும், இரு தேசிய இனங்களை பிரித்தாளவும் அரசி தழில் வெளியிட்டது என்கிறது. கர்நாடகாவில் நடந்த பந்த் மைய அரசின் சர்வாதிகாரச் செயலுக்கும், பங்காரப்பா அரசுக்கும் எதி ரான கன்னட மக்களின் தேசிய எழுச்சி என்றும் அதை குறுந்தேசிய இன வெறியர்கள், குண்டர்கள், போலீசை வைத்து தமிழ் மக்களுக்கு எதிராக மைய, மாநில அரசுகள் திசை திருப்பிவிட்டன என்றும் மு.இ.அ. கூறுகிறது. 1966 ஹெல்சிங்கி சர்வதேச நதிநீர் பங்கீடு விதியின்படி தமிழ்நாடு 54.85%; கர்நாடகா 45.15% என்கிற விகிதத் தில் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தீர்ப்புச் சொல்லுகிறது.

இந்த விவகாரத்தில் நடந்தவைகளை வசதியாக மறைத்து விட்டு வளமான கற்பனைக் கதைகளை மு.இ.அ. கூறுகிறது. பிரிட் டிஷ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட காவிரி நீர் ஒப்பந்தம் கர்நாடக மக்களுக்கு அநீதி இழைப்பதாகக் கருதினால் அதை மாற்றி புதிய உடன்பாடு காண்பதற்காக முயலவும், போராடவும் செய்வது நியா யமானது. ஆனால் அவ்வாறு செய்யாது மைய அரசின் மறைமுக ஆதரவோடு, ஒருதலைப்பட்சமாகக் காவிரியின் கிளை ஆறுகளில் புதுப் புது அணைக் கட்டுகளைக் கட்டி பல லட்சம் ஏக்கர் நிலத்தைப் புதிதாக பாசனத்துக்குக் கொண்டு வந்தது கர்நாடகம். இதனாலும் காவிரியின் நீர்வரத்துக் குறைந்ததாலும் தமிழ்நாட்டு விவசாயம் கடும் பாதிப்புக்குள்ளானது. கடந்த இருபது ஆண்டுகளில் வெள் ளம் பெருகிய போது அனைகளைத் திறந்து விட்டு தமிழ் மக்கள் அதன் பாதிப்புகளை ஏற்கச் செய்யும் அதே சமயம் நீர் வரத்தில் பற்றாக்குறை ஏற்படும் போது மட்டும் நியாயமான அளவு பங்கீடு செய்து கொள்ள மறுத்து வருகிறது.

25 ஆண்டுகளாக காங்கிரசு ஆட்சியைத் தேர்ந்தெடுக்காததால் தமிழ் நாட்டை மைய அரசு பழிவாங்குகிறது; புறக்கணிக்கிறது. இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. எல்லா சிறிய தேசிய இனங்களையும் மைய அரசு ஒடுக்கினாலும் மாற்றுக் கட்சிகள் ஆளும் மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்து வதை மறுக்கமுடியாது. பல ஆண்டுகளாக நடந்த பேச்சு வார்த்தைக ளினால் உடன்பாடு காண முடியாமல் இழுத்தடிக்கப்பட்டது. ஓட் டுக் கட்சி ஆட்சியாளர்களால் பேச்சு வார்த்தையின் மூலம் ஒரு போதும் தீர்வு காணவும் முடியாது; தீர்வு காண முடியாமல் தள்ளிப் போடப்படும் ஒவ்வொரு சமயமும் அது தமிழ்நாட்டுக்குத்தான் பாதகமானதாக உள்ளது. கர்நாடகத்துக்கு அது சாதகமாக உள்ளது; அதைத்தான் கர்நாடகம் சாதிக்க விரும்புகிறது. ஆகவே பேச்சு வார்த்தைகள் பலனற்றுப் போன நிலையில்தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அது எதேச்சதிகாரமானது அல்ல. இருக்கும் அரசியல் அமைப்புக்குள் குறைந்த பட்சம் நியாயம் கிடைப்பதற்கும் பிரச்சினைக்கு ஓரளவு பாரபட்சமற்ற தீர்வு காண்பதற்கும் அது தான் ஒரே வழி. இரு தேசிய இனங்களுக்கிடையே பிரச்சினை ஏற்படும் போது நியாயமான தீர்வு காண்பதே சரியானது; பொதுவான நல்லி ணக்கம் பேசி சமரச முயற்சிகளில் ஈடுபடுவது சரியான தீர்வாகாது; இப்படிப்பட்ட தீர்வைச் சொல்லும் மு.இ.அணியுடன் நாம் எப்படிக் கூட்டு நடவடிக்கைகளுக்குப் போக முடியும்.


*பலரது பாடல்களையும் கேட்டுவிட்டீர்கள்...*
*இதோ...*
*உங்களது பாடல்களை இசைக்கிறோம். கேளுங்கள்!*




மக்கள் கலை இலக்கியக் கழக வெளியீடு

- *பார்ப்பன ஆதிக்கத்திற்கெதிராக எச்சரிக்கை!*
- *துதிபாடும் மந்திரிகளுக்கு ஒரு சூடு!*
- *இந்து மதவெறிக்கு ஒரு சாட்டையடி!*
- *விலைவாசிக் கொடுமை தாளாத வேதனைக் குரல்!*
- *'தடா'வின் கோர நடனத்திற்கு எதிராகப் போர்முழக்கம்!*
- *காவிரியின் துயரம்*

*அனைத்தும் பாடல்களாக... கேலியும், குமுறலும், சோகமும், கோபமும் கொப்பளிக்கும் பாடல்களைக் கொண்ட ஒலிப்பேழையாக...*

பேழை விலை :ரூ.30/-பதிவுத் தபால் செலவு:ரூ.10/-

*பணம் அனுப்ப வேண்டிய முகவரி:*
*ஆர்.சீனிவாசன், 45, செங்குன்றம் சாலை,*
*வில்லிவாக்கம், சென்னை-600 049.*

www.padippakam.com



# செத்தும் அழியாக்கறை

*ராஜீவ் காந்திக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது என்று போபர்ஸ் நிறுவனத்தின் முக்கிய புள்ளியே இப்போது வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் இந்தக் கொள்ளைக்கும் அதை மூடிமறைக்கும் மோசடிகளுக்கும் இன்றைய அரசியல் அமைப்பே உடந்தையாகவும் அடிப்படையாகவும் இருக்கிறது.*

பாசிச ராஜீவ் சாவுடன் சேர்த்து போபர்ஸ் பீரங்கி பேரக் கொள்ளைக்கான ஆதாரங்களையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டதாக காங்கிரசுக் கயவாளிகள் கனவு காணும் நேரத்தில் மீண்டும் போபர்ஸ் பூதம் கிளம்பி அவர்களை பீதியூட்டுகிறது.

1987 ஏப்ரல் மாதம் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக சுவீடன் வானொலி முதன்முதலாக அம்பலப்படுத்திய பிறகு. "இந்து" இணையாசிரியர் என்.ராம் மற்றும் "இந்து"வின் ஐரோப்பா நிருபரான சித்ரா சுப்ரமணியம் ஆகியோரின் விடாப்பிடியான ஆய்வு முயற்சியினால் லஞ்ச ஊழல் பற்றியும் அதை மூடிமறைக்க நடந்த சதிகளைப் பற்றியும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணங்கள் வெளிவந்தன. இதற்கிடையே ராஜீவ் கும்பல் செய்த தில்லுமுல்லுகள், மூடிமறைக்கும் முயற்சிகளை "இந்தியன் எக்ஸ்பிரஸ்" அம்பலப்படுத்தியது. போபர்ஸ் பீரங்கியைத் தெரிவு செய்வதில் நடந்த மோசடிகளை தளபதி மாயாதாசும், முன்னாள் தலைமைத் தளபதி சுந்தர்ஜியும் அம்பலப்படுத்தியதை 'இந்தியா டுடே' ஏடு வெளியிட்டது.

இவை அனைத்தையும் காலில் போட்டு மிதித்தும், அரசின் சட்டம், நீதித்துறை, உளவுத்துறை ஆகியவற்றைக் கேடாகப் பயன்படுத்தி உண்மைகளை மூடிமறைத்தும், எதிர்த்தரப்பினரை பிளாக்மெயில் செய்து உருட்டி மிரட்டியும் மொத்த அரசியல் அமைப்பு முறையையே கிரிமினல் மயமாக்கியும் ஆட்டம் போட்டது பாசிச ராஜீவ் கும்பல். "இதோடு விட்டது சனியன்!" என்று சகலவித சடங்குகளும் நடத்தி ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு காங்கிரசு பெருச்சாளிகள் அகமகிழ்ந்திருக்கும் வேளையில் மீண்டும் போபர்ஸ் பூதம் வெளியே வந்துவிட்டது. இப்போது போபர்ஸ் நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகளில் ஒருவரே ராஜீவ்காந்திக்கு லஞ்சம் கொடுக்கப் பட்டுள்ளது என்று பேட்டியளித்துள்ளார்.

**போபர்ஸ் கொள்ளையில் புதிய திருப்புமுனை**

டேஜென்ஸ் நய்டர் (Dagens Nyheter) என்பது ஸ்வீடன் நாட்டின் பிரபலமான, மக்களின் மதிப்பைப் பெற்ற நாளேடு. அதன் புலனாய்வுச் செய்தியாளரான ஆண்டர்சன் ஸ்காண்டிநேவிய தீபகற்பத்தில் பிரபலமானவர். போபர்ஸ் ஊழலைப் பற்றி கடந்த சில ஆண்டுகளாக புலனாய்வுக் கட்டுரைகளை எழுதிவரும் இவர், இதுபற்றி ஒரு புத்தகமும் வெளியிட்டுள்ளார். போபர்ஸ் ஊழலில் இடைத்தரகனாக இந்துஜாக்கள் சம்பந்தப்பட்டிருப்பதை உலகிற்கு முதன்முதலாக அம்பலப்படுத்தியது இந்நாளேடும், ஆண்டர்சனின் புலனாய்வுக் கட்டுரையும்தான்.

கடந்த பிப்ரவரி 17ம் தேதியன்று, போபர்ஸ் ஊழலில் மிகப் பெரிய திருப்புமுனையாக, பரபரப்பான செய்திக் கட்டுரையை ஆண்டர்சன் வெளியிட்டார். *"இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இன்னும் சில உயர்மட்ட அரசியல் தலைவர்களுக்கும் கமிஷன் தரப்பட்டது"* என்று போபர்ஸ் நிறுவனத்தின் உயர்மட்ட முக்கிய புள்ளி ஒருவர் அளித்த வாக்குமூலத்துடன் அந்தக் கட்டுரை வெளிவந்தது. சில நிர்பந்தங்கள் காரணமாக, அந்த முக்கிய புள்ளி தனது பெயரை வெளியிட விரும்பவில்லை. இருப்பினும் சில முக்கியமான உண்மைகளை அவர் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்

அவை:

- ராஜீவ் காந்திக்கும் சில உயர்மட்ட அரசியல் தலைவர்களுக்கும் கமிஷன் தரப்பட்டது. பிரிட்டனைச் சேர்ந்த போபர்ஸ் நிறுவனத்தின் 'இடைத்தரகனான வின்சாடாவின் ஏ.இ.சர்வீசஸ் மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கமிஷன் கொடுக்கப்பட்டது. இந்தியாவுடனான பேரத்தில் இடைத்தரகனாக செயல்பட்டது ஏ.இ. சர்வீசஸ்தான். அவர்கள் இல்லாமல் இந்தியாவிடமிருந்து நாங்கள் ஆர்டர் பெற்றிருக்கவே முடியாது.
- போபர்ஸ் பேரத்திலும், கமிஷன் பட்டுவாடாவிலும் ராஜீவின் உறவினரும் அப்போதைய மத்திய மந்திரியுமான அருண் நேரு முக்கிய பங்கு வகித்தார். ராஜீவ் சார்பாக அவர்தான் பேரம் நடத்தினார். போபர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனரான மார்டின் அர்ட்போவை 1985ல் அவர் பலமுறை சந்தித்துப் பேசினார். ஆர்டரைப் பெற இறுதிச் சுற்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமானால் இந்தியாவின் கொள்கை முடிவு எடுக்கும் தலைவருக்கு (ராஜீவுக்கு) கமிஷன் தரப்பட வேண்டும் என அவர் நிர்பந்தித்தார்.
- ராஜீவ் காந்திக்கு தரப்பட்ட கமிஷனை நேரடியாக அவர் பெயரிலான வங்கிக் கணக்கில் சேருவதற்கு அர்ட்போ உத்திரவாதம் அளித்தார். இதன்படி, ஏ.இ. சர்வீசஸ் மூலம் முதல் தவணை கமிஷன் தொகை ஜூரிச்சில் உள்ள "நார்ட் பினான்ஸ்" வங்கியின் ரகசிய கணக்கில் சேர்க்கப்பட்டது. போபர்ஸ் ஊழல் பற்றிய செய்திகள் கசியத் தொடங்கியதும் இடைத்தரகர்கள் அத்தொகையை பனாமாவிலுள்ள ரகசிய வங்கிக் கணக்குக்கு மாற்றிவிட்டனர்.

— மேற்கண்ட வாக்குமூலத்துடன், எந்தெந்த வழிகளில் கமிஷன் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது, ஊழல் அம்பலமானதும் நடந்த சதிகள் முதலானவற்றை விளக்கி தொடர்ச்சியாக மூன்று நாட்களில் 'டேஜென்ஸ் நய்டர்' செய்திக் கட்டுரை வெளியிட்டது. அதன் பிறகு, போபர்ஸ் ஊழலைப் பற்றிய புலனாய்வுக் கட்டுரைகளை எழுதிவரும் சித்ரா சுப்ரமணியம் இதை உறுதிப்படுத்தி எக்ஸ்பிரஸ் நாளேட்டில் அடுத்த நாளே செய்தி வெளியிட்டார். "ஃபிரண்ட்லைன்" ஆசிரியரான என்.ராம், ஆண்டர்சனுடன் தொலைபேசி மூலம் பேட்டி கண்டு, இச்செய்தியை உறுதிப்படுத்தி தனது இதழில் வெளியிட்டார்.

**ஊழலை உறுதிப்படுத்தும் உண்மைகள்**

போபர்ஸ் நிறுவனத்தின் உயர்மட்ட முக்கிய புள்ளி அளித்த வாக்குமூலம் பின்வரும் உண்மைகளை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

**"ராஜீவ் காந்திக்கு போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ்சம் தரப்பட்டது" என்கிற தலைப்புடன் ஸ்வீடனின் டேஜென்ஸ் நய்டர் நாளேட்டில் வெளியான செய்தி; புகையும் உண்மைகள்.**



• DAGENS NYHETER — Måndagen den 17 februari 1992 A 5

## 'Bofors gav Gandhi mutor'

Direktör hävdar att det var nödvändigt att smörja indiska toppolitiker

படிப்பகம்

www.padippakam.com

● ஆயுத தளவாடங்களுக்கான இந்திய ராணுவ பொது இயக்குனரிடமிருந்து சிபாரிசு செய்யப்பட்ட பிரெஞ்சு அல்லது ஆஸ்திரிய பீரங்கியை வாங்காமல், தரக்குறைவான போபர்ஸ் பீரங்கி வாங்கப்பட்டுள்ளது. இதற்காக ராணுவ உயர் அதிகாரிகளுக்கு பதவியும் லஞ்சமும் கொடுத்து அவசரமாக சிபாரிசு பெறப்பட்டுள்ளது.

● போபர்ஸ் கம்பெனியின் இந்தியத் தரகன் வின்சாடாவுக்கு 3.25% லஞ்சமும் ராஜீவின் பினாமிகள் மற்றும் பிற தரகர்களுக்கு 10.75% லஞ்சமும், ஆக 2100 கோடி ரூபாய் பேரத்தில் இப்படி 14% லஞ்சமாக மூன்று கம்பெனிகளின் பெயரில் ஐந்து பாதைகள் - போலி நிறுவனங்களின் மூலம் சுவிஸ் வங்கியில் போடுவதாக ஏற்பாடாகியது. இந்த ஊழல் அம்பலமான 1987 ஏப்ரல் மாதத்துக்குள் 64 கோடி ரூபாய் லஞ்சப் பணம் கைமாறி விட்டது.

● லஞ்ச ஊழல் அம்பலமானதும் போபர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் அர்ட்போ, தரகு முதலாளிகளான வின்சாடா, இந்துஜா, முன்னாள் இந்திய ராணுவத் துறை செயலாளர் பாட்நகர், சி.பி.ஐ. இயக்குனர் மோகன் காத்ரே முதலான ராஜீவின் பினாமிகளும் எடுபிடிகளும் நெருக்கடியை சமாளிக்க பல்வேறு சதிகளையும் தில்லுமுல்லுகளையும் செய்தனர். ராஜீவின் பினாமிகளின் கம்பெனிகளான மொரஸ்கோ - பிட்கோ- சங்கிம் ஆகிய வற்றை மூடி மறைத்து மொய்னியோ என்ற போலிக் கம்பெனியை உருவாக்கி பொய்யான ஆவணங்களைத் தயாரித்தனர்.

● எல்லாவற்றுக்கும் மேலாக, ஊழலை மூடி மறைக்க ராணுவ மற்றும் நிதி இலாகா அதிகாரிகளையும், சி.பி.ஐ. மற்றும் நாடாளுமன்ற கூட்டுக் கமிட்டி போன்ற நிறுவனங்களையும் ராஜீவ் கும்பல் கேடாகப் பயன்படுத்தியுள்ளது. குற்றவாளிகளைத் தப்புவிக்கவும், ஊழலை அம்பலப்படுத்துவோரை மிரட்டவும் அரசு எந்திரத்தையும் நீதித்துறையையும் ஏவி மொத்த அரசியல் அமைப்பையே கிரிமினல் மயமாக்கியுள்ளது.

— கடந்த ஐந்தாண்டுகளில் இந்த உண்மைகள் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டும் கூட ராஜீவ் கும்பல் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது சி.பி.ஐ. கண்டறிந்த உண்மைகளைக் கூட அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரசேகர் கும்பலும், நரசிம்மராவ் கும்பலும் நீர்த்துப் போகச் செய்துவிட்டன.

வி.பி.சிங் ஆட்சியின் போது, லஞ்சம் கொடுக்கப்பட்ட 6 சுவிஸ் வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டன. இவற்றின் உரிமையாளர் யார், என்னென்ன தேதிகளில் எவ்வளவு பணம் செலுத்தப்பட்டது என்கிற விபரம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவற்றை சுவிஸ் நாட்டு போலீசு மூலமாக கண்டறிய சி.பி.ஐ. முயலவேண்டும். இதற்காக சுவிஸ் போலீசுக்கு சி.பி.ஐ. கொடுக்கின்ற வேண்டுகோள் கடிதத்தின் (Letter Rogatory) அடிப்படையில் சம்பந்தப்பட்ட வங்கி அமைந்துள்ள மாநிலத்தின் நீதிமன்றத்தில் சுவிஸ் போலீசு மனுதாக்கல் செய்யவேண்டும். அதன் பிறகு வங்கி ஆவணங்களை நீதிபதி பரிசீலித்து, முறைகேடுகள் நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்குமாறு போலீசிடம் கோருவார். இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கவும் மேல்முறையீடு செய்யவும் அந்த ரகசிய கணக்காளருக்கு உரிமை உண்டு.



முடக்கப்பட்ட 6 கணக்குகளில் ஒன்று ஜூரிச்சிலும் மற்றவை ஜெனிவாவிலும் உள்ளன. இவற்றில் ஜூரிச் உயர்நீதி மன்றம் ஆவணங்களை ஒப்படைக்குமாறு உத்திரவிட்டுவிட்டது. ஆனால், ஜெனிவா நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பு சரியில்லை; புகைப்பட நகல் தெளிவாக இல்லை என்று கூறி மற்ற 5 கணக்குகளுக்கான மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இது வி.பி.சிங் ஆட்சி கவிழும்போது இருந்த நிலைமை.

இதைக் காரணமாகக் காட்டி சி.பி.ஐ. பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையே தவறானது; அதன் விசாரணையை ரத்து செய்ய வேண்டும்; சுவிஸ் கோர்ட்டிலேயே தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்று கூறி ராஜீவ் கும்பல் தனது பினாமியான சௌத்திரி என்ற வக்கீல் மூலம் டெல்லி உயர்நீதி மன்றத்தில் "பொதுநலன்" வழக்கொன்றைத் தொடுத்தது. இதற்கிடையே ராஜீவ் கும்பலின் தயவில் சந்திரசேகர் ஆட்சி அமைந்ததும் அதுவரை போபர்ஸ் ஊழல் புகார்களை விசாரித்து வந்த அதிகாரிகளும், அரசு உயர் வக்கீலும் பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டனர். சர்வதேச ஆயுதபேரத் தரகர்களின் கூட்டாளியான சுப்பிரமணியசாமி சட்ட அமைச்சராகவும், ராஜீவ் கும்பலின் விசுவாசியான துளசி என்பவர் அரசு உயர் வக்கீலாகவும் நியமிக்கப்பட்டனர்.

> ● *ராஜீவ் காந்திக்கும் சில உயர்மட்ட அரசியல் தலைவர்களுக்கும் லஞ்சம் தரப்பட்டது.*
>
> ● *ராஜீவ் சார்பாக அவரது உறவினரும் அப்போதைய மத்திய மந்திரியுமான அருண் நேரு பேரம் நடத்தினார்.*
>
> ● *ராஜீவுக்குத் தரப்பட்ட கமிஷனை அவர் பெயரிலான ரகசிய வங்கிக் கணக்கில் சேர்க்க உத்திரவாதம் அளிக்கப்பட்டது.*
>
> — போபர்ஸ் நிறுவனத்தின் முக்கிய புள்ளி அளித்த வாக்குமூலம்

**ஊழலுக்கு உடந்தையாக விலை போன நீதித்துறை**

அதன் பிறகு, இப் 'பொதுநலன்' வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி சாவ்லாவும், அரசு உயர் வக்கீல் துளசியும் போபர்ஸ் கொள்ளையர்களைக் காப்பாற்றும் கீழ்த்தரமான முயற்சியில் இறங்கி, இந்திய நீதித்துறை வரலாற்றிலேயே இதுவரை காணாத புதிய கேலிக்கூத்துக்களை அரங்கேற்றினர். சி.பி.ஐ.யின் இணை இயக்குனரான மாதவனும் அவரது குழுவும் மிகவும் சிரமப்பட்டு சேகரித்த தகவல் அனைத்தும் பொய்யானது; போபர்ஸ் ஊழல் பற்றி வழக்கு பதிவு செய்ததே தவறு என்று சகட்டுமேனிக்கு சாடினார் நீதிபதி சாவ்லா. "சி.பி.ஐ. என்பது விசாரணைக்கு நியமிக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பு அல்ல; அதன் செயல்பாடுகள் சந்தேகமாக உள்ளன. புலன் விசாரணையில் அன்னிய சக்திகளின் தலையீடு உள்ளன. எனவே போபர்ஸ் தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஏன் ரத்து செய்யக் கூடாது?" என்று கேட்டு மத்திய அரசுக்கும் சி.பி.ஐ.க்கும் விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்ப உத்திரவிட்டார்.

இதன் மூலம், இந்தியக் கோர்ட்டிலேயே புலன் விசாரணையை நம்பவில்லை; அதற்கெதிராக அரசு உயர் வக்கீலே குற்றம் சாட்டுகிறார்; நீதிபதியே புலனாய்வை சந்தேகிக்கிறார் என்று கூறி சுவிஸ் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்ய ராஜீவ் கும்பல் முயற்சித்தது. ஆனால் ராஜீவின் எடுபிடியான நீதிபதி சாவ்லாவின் அடாவடித்தனத்தை எதிர்த்தரப்பு வக்கீல்களும் பத்திரிகைகளும் கடுமையாக விமர்சித்த பிறகு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரங்கனாத் மிஸ்ரா தலைமையிலான நீதிபதிகள் குழு சாவ்லாவின் உத்திரவை ரத்து செய்தது.

அதன் பிறகு சந்திரசேகர் அரசு கவிழ்ந்து பொதுத் தேர்தல் வந்தது. குண்டு வெடிப்பில் ராஜீவ் பலியானார்; நரசிம்மராவ் தலைமையில் காங்கிரசின் சிறுபான்மை ஆட்சி அமைந்த பிறகு, போபர்ஸ் ஊழல் விவகாரத்தை அது குழிதோண்டி புதைத்துவிட்டது. உச்சநீதி மன்றம் சாவ்லாவின் உத்திரவை ரத்து செய்ததே தவிர, புலனாய்வின் 'முறைகேடு'களாக சாவ்லா குற்றம் சாட்டியதைப் பற்றி எதுவும் கூறவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இடைத்தரகர்களில் ஒருவரான வின்சாடா, சி.பி.ஐ.யின் முதல் தகவல் அறிக்கையையே எதிர்த்து டெல்லி உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். கொள்ளையர்களுக்கு ஆதரவாக டெல்லி

படிப்பகம்

www.padippakam.com

# சாதிக்கலவரத்தைத் தூண்டும் சமூக விரோதிகள்

திருச்சி - அரியமங்கலம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட கூலி ஏழை விவசாயிகளே பெரும்பான்மையாக வசிக்கின்றனர். பெருமளவு வாழை பயிரிடப்படும் இக்கிராமத்தின் சுற்று வட்டாரங்கள் கள்ளச் சாராயத்தின் கோட்டையாக இருந்து வருகிறது. பணக்கார மேல்சாதியினர் துணையோடு இந்தக் கள்ளச்சாராய கும்பல்தான் கிராமத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இக்கும்பலின் பல்வேறு தொல்லைகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு அமைப்பாக ஒருங்கிணையும் அவசியத்தை உணர்ந்தனர். தாழ்த்தப்பட்டவர்களில் ஆலைத் தொழிலாளர்கள் சிலரின் முன் முயற்சியால் சில மாதங்களுக்கு முன்பு அம்பேத்கார் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். இப்படி தாழ்த்தப்பட்டவர்கள் ஒற்றுமையாக இருந்து செயல்படுவதைக் கண்டு பொறுக்காத மேல்சாதியினர், தாழ்த்தப் பட்டவர்களுக்குள் மோதலை உருவாக்கத் திட்டமிட்டனர். இதற்கு செயல்வடிவம் கொடுப்பவர் அரியமங்கலம் புறநகர் போலீசு நிலையத்தின் எஸ்.ஐ. அம்பிகாபதி.

தாழ்த்தப் பட்டவர்களில் கள்ளச்சாராய வியாபாரியாக இருக்கும் சிலரை பிடித்துச் சென்று, ''அம்பேத்கார் சங்கத்தினர் உங்கள் மீது புகார் கொடுத்ததனால் தான் கைது செய்தோம்'' என்று கூறி அவர்களிடையே பகையை வளர்க்க எஸ்.ஐ. அம்பிகாபதி செய்த முயற்சி தோல்வியுற்றது. மேலும் மூத்துராஜா எனும் மேல்சாதியைச் சேர்ந்த ரவி என்பவரை பலர் முன்னிலையில் அடித்து அவரது வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிளையும் அவரையும் இழுத்துச் சென்று, மோட்டார் சைக்கிளில் கள்ளச்சாராயம் கடத்தியதாக பொய் வழக்குப் போட்டார் எஸ்.ஐ. அம்பிகாபதி. அப்பொழுது ரவியிடம் அம்பேத்கார் சங்கத்தினர்தான் நீ சாராயம் காய்ச்சுவதாக புகார் அனுப்பினார்கள் என்று கூறி சாதி வெறியூட்டினார். இருசாதியினரிடமும் பகையை வளர்த்து மோதலை உருவாக்கி அதன் மூலம் தாழ்த்தப் பட்டவர்களை - அம்பேத்கார் சங்கத்தை ஒடுக்குவது; இவர்களின் ஒற்றுமையை சீர்குலைப்பது என திட்டமிட்டு செயல்படுகிறார் அம்பிகாபதி.



தீபாவளிக்கு பட்டாசு இலவசமாகத் தரவில்லை என்பதற்காக கணேசன் என்பவர் மீது விஷச்சாராயம் விற்றதாக வழக்குப் போட்டார். கள்ளச்சாராய வியாபாரிகளிடம் ஆயிரக்கணக்கில் மாமூல் பெறும் இவரது கொட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அம்பேத்கார் சங்கத்தினரும், தாழ்த்தப்பட்ட மக்களும் எஸ்.ஐ.யின் கொட்டத்தை எதிர்க்க துணியாது மனத்திற்குள்ளேயே குமுறிக் கொண்டுள்ளனர். போலீசு பற்றி இம்மக்கள் கொண்டிருந்த மாயையையும், அச்சத்தையும் தவிர்த்து அக்கிரமத்திற்கு எதிராக சாதிவேறுபாடின்றி ஒற்றுமையாக போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திருச்சி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (RSYF)யினர் பிரச்சாரம் செய்தனர். எஸ்.ஐ.அம்பிகாபதியை கைது செய்யக் கோரியும், உள்ளூர் ஆதிக்க கும்பலின் - சாராய ரௌடிகளின் கொட்டத்தை அடக்கவும் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளனர்.

தகவல்: RSYF,திருச்சி.

உயர்நீதி மன்றமும் இந்த மனுவை வெட்கமின்றி ஏற்றுக் கொண்டது.

**கிரிமினல் ராவ் அரசின் கீழ்த் தரமான தில்லுமுல்லுகள்**

சிரமப்பட்டு சி.பி.ஐ. சேகரித்த தகவல்களையும், மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதையுமே கேள்விக்குள்ளாக்கும் இம்மனுவை நரசிம்மராவ் அரசு ரத்து செய்யக் கோரவில்லை. அரசு வக்கீல் மூலம் எதிர் மனுப் போட்டு வாதிடவோ, அல்லது உச்ச நீதி மன்றத்தின் மூலம் தலையிட்டு கொள்ளையர்களின் மனுவை ரத்து செய்யவோ இன்றுவரை முயற்சிக்கவில்லை. தொழில் நுட்ப காரணங்களைக் காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்த ஜெனிவா கோர்ட்டிடம் மறு முறையீடு செய்து வழக்கைத் தொடரவும் ஏற்பாடு செய்யவில்லை. கடந்த ஜூன் மாதத்தில் காங்கிரசு ஆட்சி அமைந்த பிறகு எந்த சி.பி.ஐ. அதிகாரியும் சுவிஸ் நாட்டுக்கு அனுப்பப்படவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, போபர்ஸ் ஊழல் தொடர்பாக புலன் விசாரணை செய்து வந்த சி.பி.ஐ யின் இணை இயக்குனரான மாதவன் கடந்த அக்டோபர் மாதத்தில் அப்பொறுப்பிலிருந்து விரட்டப்பட்டார். அவருக்குப் பதிலாக அரசு அதிகாரியான (சி.பி.ஐ. அல்ல) சர்மா நியமிக்கப்பட்டார் சர்மாவின் மனைவி இந்திரா குடும்பத்தின் அடுப்பங்கரைத் தோழியாவார். சர்வதேச போதை மருந்து மாஃபியா கும்பலுடன் சேர்ந்து, வி.பி.சிங்கின் மகனுக்கு செயிண்ட் கிட்டீஸ் தீவிலுள்ள வங்கியில் ரகசிய கணக்கு உள்ளதாக பொய்யான ஆவணங்களைத் தயாரித்தவர்தான் இந்த சர்மா.

இன்னொரு கொடுமை என்னவென்றால், சுவீடன் நாட்டுச் சட்டப்படி, லஞ்சம் கொடுப்பவர் - வாங்குபவருக்கு எதிரான வழக்குகளில் நடவடிக்கை எடுக்க 5 ஆண்டுகள்தான் கால வரம்பாகும். இதன்படி, மார்ச் '92 உடன் போபர்ஸ் ஊழல் விவகாரத்துக்கு 5 ஆண்டுகள் நிறைவடைந்து விடுகிறது. அதன் பிறகு இந்த வழக்கை விசாரிக்க வேண்டிய அவசியமோ, குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க வேண்டிய அவசியமோ கிடையாது. இதனால் கொள்ளையர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு சுதந்திரமாகத் திரிகின்றனர்.

சுவீடன் நாட்டு பத்திரிகையில் இப்போது பரபரப்பாக செய்தி வெளியான பிறகு, வழக்கம் போலவே இந்திய எதிர்க்கட்சிகள் சடங்குத்தனமான எதிர்ப்பு தெரிவித்து விட்டு, சி.பி.ஐ. விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரியுள்ளன. இத்தனை நாளும் பெருச்சாளி அருண்நேருவை தங்கள் அணியில் வைத்துக் கொண்டு ஊழல் எதிர்ப்பு கூச்சல் போட்ட எதிர்க்கட்சிகள், இப்போது விவகாரம் அம்பலமானதும் விழிபிதுங்கி நிற்கின்றன. வங்கி மோசடி ஊழலில் சிக்கிய ராஜீவ் சேத்தியா வழக்கை விசாரிக்க பிரிட்டனுக்குச் சென்ற சி.பி.ஐ. அதிகாரி மல்ஹோத்ராவை அங்கிருந்து சுவீடனுக்கும், சுவிட்சர்லாந்துக்கும் சுற்றுப் பயணமாக அனுப்பி வைத்து, போபர்ஸ் ஊழலை அக்கறையுடன் கவனித்து வருவதாக நாடகமாடுகிறது நரசிம்மராவ் அரசு.

இவையனைத்தும் எதைக் காட்டுகின்றன? பாசிச ராஜீவின் போபர்ஸ் கொள்ளை மட்டுமல்ல; அவற்றைவிட முக்கியமாக இத்தகைய லஞ்ச ஊழல்-கொள்ளைக்கும் அவற்றை மூடிமறைக்கும் தில்லுமுல்லுகளுக்கும் இன்றைய அரசியல் அமைப்பு முழுவதுமே உடந்தையாகவும் அடிப்படையாகவும் உள்ளது. இன்றைய அரசியல் அமைப்பு முறையே விபச்சார - கிரிமினல் தன்மையுடையது. பாசிச ராஜீவ் போன்ற மக்கள் விரோத - தேசவிரோத கொள்ளையர்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்டது. குற்றங்கள் அம்பலமாகி நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் இக்கும்பல் ஆட்சியில் நீடிக்கவும் இதுவே காரணம். நாடாளுமன்ற 'ஜனநாயக' எல்லைக்குள் சட்டபூர்வ வழிகளின் மூலம் இம்மக்கள் விரோத அரசியல் அமைப்பை சீர்திருத்தி மாற்றியமைத்து விட முடியாது. இக்கேடுகெட்ட அரசியல் அமைப்பைத் தூக்கியெறிந்துவிட்டு ஒரு புரட்சியின் மூலம் தங்களுக்கான அரசை உழைக்கும் மக்கள் நிறுவிக் கொள்ளாத வரை லஞ்ச ஊழல் கொள்ளையையோ, கொள்ளையர்களையோ ஒழித்துவிட முடியாது என்பதையே போபர்ஸ் ஊழல் விவகாரம் மீண்டும் நிரூபிக்கிறது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# ஆய்வு ஆய்வுக்காகவா?

*குட்டி முதலாளித்துவ சுயவிளம்பர-புகழ் தேடிகள் அண்மையில் திருச்சியில் நடத்திய 'எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்' என்ற ஆய்வரங்கத்தைப் பற்றிய விமர்சனத் தொகுப்பு.*

கடந்த சனவரி 12, 13 தேதிகளில் திருச்சி - அருண் ஹோட்டலில் ''எண்பதுகளில் அரசியலும், பொருளாதாரமும்'' என்ற தலைப்பில் ஒரு ஆய்வரங்கம் நடந்தது. இதை நிகழ் (ஞானி) மனுசங்க (உஞ்சைராசன்), நிறப்பிரிகை (அ.மார்க்ஸ்), தகழி ஆகிய பத்திரிக்கைகளும் மக்கள் கல்வி இயக்கம் (பா.கல்யாணி), தமிழ் இன விடுதலைக் கழகம் (தி.இராமதாசு), தமிழ்த் தேசிய மனித உரிமைக் கழகம் (அரங்க குணசேகரன்), தமிழ்நாடு இளைஞர் பேரவை, திலீபன் மன்றம், முற்போக்கு இளைஞர் அணி முதலான அமைப்புகளும் குழுக்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. ''மாற்றங்கள் நிறைந்த ஒருகால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது அடுத்த கட்ட செயற்பாடுகள் சரியாக அமைய இந்த மாற்றங்கள் குறித்த ஒரு தெளிவான கணிப்பு தேவை. அந்தத் திசையில் ஒரு சிறிய பங்களிப்பே இம்முயற்சி'' என்று பிரசுரத்தில் அறிவித்திருந்தனர். ஆய்வரங்கத்தில் பேசிய அ.மார்க்ஸ், ''கோட்பாடு பற்றி முதல் ஆய்வரங்கம் தமிழகத்தில் நடக்கிறது. சிறுபத்திரிக்கைகள், சிறு அமைப்புகள் ஒன்றிணைந்துள்ளது. புதிய பண்பாட்டை உருவாக்கும் அமைப்புகள் இவை. முரண்பாடுகள் பற்றி முடிவில்லை என்றாலும் ஒரு முயற்சி என்ற அளவில் வெற்றி தான்'' என்றும் அறிவித்தார்.

கோட்பாடு பற்றிய ஆய்வு, முரண்பாட்டை விவாதித்து ஒற்றுமையை சாதிப்பது, செயல்பாட்டிற்கான முதல்படி... இவை எல்லாம் புளித்துப்போன ஒன்று. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே இத்தகைய கூப்பாடு ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஞானி, எஸ்.வி.இராசதுரை போன்றவர்கள் படிகள், பரிமாணம் பத்திரிக்கைகள் வாயிலாக இதே கூப்பாடை போட்டனர். ஒருமுறை சென்னையில் ஞானி, நா.பார்த்தசாரதி, சிவசங்கரி முதலானோர் கலந்து கொண்ட ''இலக்கு'' என்ற ஆய்வரங்கமும், இதே முயற்சியை மேற்கொண்டது. இன்று புதிய வரவாக பா.கல்யாணி, அ.மார்க்ஸ் போன்றவர்களுடன் ஞானியும் சேர்ந்து கொண்டு அதையே தொடர்கின்றனர். பழைய கள்ளுதான்; மொந்தையைத்தான் மாற்றிக் கொள்கின்றனர். குழப்பவாதிகள், கலைப்புவாதிகள், ட்ராட்ஸ்கிய வாதிகள், தன்னார்வ குழுவினர் உள்ளடங்கிய ஒரு சில தனிநபர்களைச் சுற்றி அவர்களது அபிமானிகளும், விசுவாசிகளும், ஆர்வலர்களுமாக நூறுபேர் வரை திரண்டுள்ளனர். இவர்களையே அடிப்படையாகக் கொண்டு இப்படி ஆய்வரங்கம் நடத்தி சுயவிளம்பர - புகழ் தேடுவதே அச்சில தனிநபர்களின் வேலை.

ஒவ்வொரு ஆய்வரங்கத்திலும் ''இதோ ஆய்வு களத்தில் குதித்து விட்டோம்; இனி கோட்பாடு முடிவுகள் படபட வென எடுத்து தள்ளி விடுவோம். இதுவே செயல்பாட்டிற்கான - வெற்றிக்கான முதல்படி'' என்ற கூப்பாடுதான் பெரிதாக இருக்கும். ஆனால் பாவம்; முதல் படியிலேயே வழுக்கி விழுந்து விடுவார்கள்! இரண்டாவது படியை யாரும் தொட்டதில்லை. இதுவன்றி ஒவ்வொரு 'முதல்படி'யிலும் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், வர்க்கப் போராட்டம், சாதியப் பிரச்சினை, தேசிய இனச் சிக்கல், கட்சிக் கட்டுப்பாடு...'' என்பதையே ஆய்வுக்கென ஒரு நீண்ட பட்டியலிடுவார்கள். இவற்றில் ஒன்றில் கூட இவர்கள் முடிவு கண்டதில்லை. எந்த ஒரு பிரச்சினையிலும் ஒத்த கருத்துக்கு வரமுடியாதது மட்டுமல்ல; ஆய்வைகூட ஒருங்கிணைந்து நடத்துவதில்லை. உதாரணத்திற்கு சாதியப் பிரச்சினை குறித்து இதுபோன்ற 'அறிவுஜீவி'களால் ஏறக்குறைய 25 ஆண்டுகளாக பல்வேறு ஆய்வு தொடர்கிறது. இவர்கள் தங்களது ஆய்வு சிந்துபாத் கதையாக தொடர்வதைப் பற்றித்தான் ஆய்வு செய்ய மறுக்கிறார்கள்!

மாற்றங்கள் நிறைந்த காலகட்டத்தில் மாற்றங்களைப் பற்றி ஆய்வு செய்யவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் ஆய்வு என்பது முடிவெடுத்து மாற்றங்களை நிகழ்த்துவதற்காக அல்லது துரிதப்படுத்துவதற்காக இருக்கவேண்டும். அதாவது வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய ஆய்வு வர்க்கப் போராட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரியதாக இருக்கவேண்டும். ஆனால் மக்கள் நலனிலிருந்து அப்பாற்பட்டு நின்று செயல்படும் ''கலை கலைக்காகவே'' கோஷ்டியைப் போலவே இவர்கள் ''ஆய்வு ஆய்வுக்காக'' என்று செயல்படுகிறார்கள். இதுவும் மார்க்சிய விரோத போக்கே.

ஐக்கியம், கூட்டு நடவடிக்கைப் பற்றி ஒரு வரையறையும் - சில அடிப்படை தேவைகளையும் நாம் முன்வைத்து சுட்டிக் காட்டிய போதெல்லாம் பரிகசித்தார்கள். இதன் அவசியத்தை 'மாற்றங்கள் நிறைந்த கால கட்டமே' மீண்டும் மீண்டும் இவர்களுக்கு உணர்த்தி வருகிறது. ஆயினும் புதிய பு[illegible]மணல்வீடுகள் கட்டி மகிழ்கிறார்கள்.



இப்புதிய மணல் வீட்டிலும் இவர்கள் சாதித்தது என்ன என்று பார்ப்போம்.

ஆய்வரங்கத்தின் **திருஷ்டி** பொட்டாக முன்னாள் அமைச்சரும் எம்.பி.யுமான ஜார்ஜ் பெர்னாண்டசை சிறப்புரையாற்ற ஏற்பாடு செய்திருந்தார்கள். இதை பா.கல்யாணி பேசும்போது 'நேர்மையாக' ஒப்புக் கொண்டார். ''ஜார்ஜ் பெர்னாண்டசு வரவில்லையென்றால் புலி ஆதரவு மாநாடு என கைதாகியிருப்போம். எனவே ஒரு பர்சனாலிட்டி (தனிச் சிறப்பான ஆளுமை) தேவைப்படுகிறது'' என்றார். இவர் பாட்டாளி மக்கள் கட்சி ராமதாசோடு இதே காரணத்திற்காகத்தான் கூட்டு செயல்பாடு என தொங்கிக் கொண்டிருக்கிறார் என்பதும் உண்மை.

மேலும் பா.கல்யாணி பேசுகையில், ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் உண்மையில் பாட்டாளிகளுக்கு ஜனநாயகம் உள்ளதா? பல்வேறு தேசிய இனங்கள் உள்ள ஒரு நாடு தொடர்ந்து ஒரே நாடாக இருக்க முடியுமா?'' என்றெல்லாம் ஆய்வு செய்யவேண்டும் என்றார். சமுதாயத்தில் வர்க்க ரீதியாக சிந்திப்பதைவிட சாதிரீதியான சிந்தனைதான் மேலோங்கியிருக்கிறது என்று தமது கண்டுபிடிப்பைச் சுட்டிக்காட்டினார்! இறுதியாக ''நிறைய பேசிக் கொண்டே செயல்படாமல் போயிருக்கிறோம்; செயல்பட வேண்டும்'' என்றார். தான் மக்கள் கல்வி இயக்கம் அமைத்து தனிவகுப்பு ஒழிப்பு மாநாடு எல்லாம் நடத்தியதிலிருந்து இப்படி சக தோழர்களைப் பார்த்து ''பேசிக் கொண்டிருக்காதீர்கள், செயல்படுங்கள்'' என்கிறார், பா.கல்யாணி.

அ.மார்க்ஸ் பேசும்போதோ, ''புரட்சிகர இயக்கங்களாகத் தோன்றி அதிகார அமைப்புகளாக மாறியவற்றைப் பற்றி சிந்திக்க வேண்டும்... அமைப்பாக இருந்து கொண்டே ஒரு மையமற்ற அமைப்பாக உருவாக்க வேண்டும்... செயல்பாடுகள் மூலமே அதிகார அமைப்புகளாக மாறிவிடாமல் தடுக்க வேண்டும்... நிறைய படிப்பது - சிந்திப்பது - விவாதிப்பது என்பது தவறு எனும் பொய்மையை தடுக்க வேண்டும்'' என்று கூறினார். பா.கல்யாணி, அ.மார்க்ஸ் இருவரது கருத்தும் எதிரும் புதிருமாக வந்து நிற்கிறது. இப்பிரச்சினையை விவாதித்து தீர்த்துக் கொள்ளப் போகிறார்களா, அல்லது பா.கல்யாணி செயல்பட்டு புரட்சிகர இயக்கங்கள் அதிகார அமைப்புகளாக மாறாது என நிரூபிக்கப் போகிறாரா? நமக்குத் தெரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# ஜெயாவின் கொடுமை-'தடா'வில் மாணவர்

'தடா'வில் கைதாகி கடலூர் சிறையி லுள்ள முற்போக்கு இளைஞர் அணி (RYL)யின் தோழர் பாபு என்பவர் +2 படிக்கும் மாணவர். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவரை 6.11.91 அன்று இரவு கைதுசெய்து 'தடா'வில் போட்டது, போலீசு. 11.3.92 அன்று +2 விற்கான பொதுத்தேர்வு தொடங்க இருந்ததால் அத்தேர்வு எழுத அனுமதி கோரி 18.2.92 அன்று சிறப்பு நீதிமன்ற நீதிபதிக்கு மனு அனுப்பினார் தோழர் பாபு. நீதிமன்றம் இம்மனு மீது உடனடி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 5.3.92 அன்று தோழர் பாபு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது மீண்டும் ஒரு மனு கொடுத்தார். போலீசு காவலுடன் தேர்வு எழுத அன்று அனுமதி கொடுக்கப்பட்டாலும் தாமதத்தால் இதற்கிடையில் நடந்த ஒரு செய்முறை தேர்வில் தோழர் பங்கேற்க முடியாமல் போனது. இதுவல்லாமல் தேர்வு எழுதச் சென்றபோது கைவிலங்கிட்டும் துப்பாக்கி ஏந்திய காவலுடன் அழைத்துச் சென்று தோழரை அவமானப்படுத்திய தோடு மக்கள்-மாணவர் மத்தியிலும் பீதியை கிளப்பியது. ஆனால், மக்களும் மாணவர்களும் முன்பின் தெரியாதவர்கள் கூட துணிச்சலாக தோழரை நேரில் அணுகி விசாரித்து கொடிய 'தடா' சட்டத்தையும் 'அதை நிரபராதிகள் மீது வேண்டுமென்றே ஏவும் 'ஜெ' அரசு பற்றியும் தெரிந்து கொண்டு திட்டித் தீர்த்தனர். பலர் தோழருக்கு டீ, ரொட்டி, குளிர்பானங்கள் வாங்கிக் கொடுத்து நம்பிக்கையூட்டினர். போலீசு-அரசின் அடக்குமுறை பீதியூட்டலையும் மீறி மக்களின் ஆதரவு புரட்சியாளர்களுக்கு உண்டு என்பதையே இச்சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

— தகவல்: ம.க.இ.க., கடலூர்.

ஞானி எந்திர கதியில் ''பெருந்தொழிலும் சோசலிசமும் ஒத்துப் போகாது, கனரக தொழிலும் சோசலிசமும் ஒத்துப் போகாது; பெரும் மைய அரசும் சோசலிசமும் ஒத்துப் போகாது: பெரும் நகரமும் சோசலிசமும் ஒத்துப் போகாது'' என மந்திரம் ஓதி ரசிய வீழ்ச்சியை இதிலிருந்து தான் ஆய்வு செய்ய வேண்டும் என்றார். சந்தைப் பொருளாதாரம் தனியார் மயமாதலை ஆதரித்தும் பேசி தன்னை நன்றாகவே இனம் காட்டிக் கொண்டார்.

கேரளப் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த வேணு பேசுகையில் ரசிய வீழ்ச்சிக்கும், சோசலிச பாசிசத்திற்கும் தோற்றுவாயை ஆய்வு செய்கிறேன் என கம்யூனிசத் தலைவர்களை சரமாரியாகச் சாடினார். ஆய்வரங்கத்தில் மார்க்சிய விரோத முறையில் கீழ்த்தரமாகவும் அருவெறுக்கத்தக்க வகையிலும் பேசியவர் இவர்தான். வக்கிரமாக வசைமாரி பொழிந்துவிட்டு இவரும் இறுதியாகப் பார்த்தால், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், தேசிய இனச் சிக்கல், சாதியப் பிரச்சினை, ஆண்-பெண் உறவு, சுற்றுச்சூழல் முதலியவற்றைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்று முடித்தார். மேலும் இவர் ''நான் இப்போது சி.ஆர்.சி. பொதுச் செயலாளர் இல்லை; நான் கூறும் கருத்துக்கள் நான் சார்ந்திருக்கும் கேரளப் பொதுவுடைமைக் கட்சியின் கருத்தும் அல்ல; எனது சொந்தக் கருத்துக்கள்'' என்ற முன்னுரையோடு பேச்சை தொடங்கினார். சீன மாணவர் கிளர்ச்சியை மக்களின் ஜனநாயக போராட்டம் என ஆதரித்தார். இப்படி அனைத்து வகையிலும் தம்மோடு ஒத்துப் போவதைக் கண்டு பூரிப்படைந்து அ.மார்க்ஸ் பேசும்போது ''வேணு போன்றவர்கள் நம்மோடு இணைந்துள்ளது பெருமையளிக்கிறது'' என்றார்.

திருச்சியைச் சேர்ந்த ராஜன் குறை என்பவரும் மார்க்சிய விரோதி என வேணுவைப் போலவே இனங்காட்டிக் கொண்டார். அரங்க குணசேகரனது பேச்சு முழுக்கவும் சாதியக் கண்ணோட்டத்திலேயே சாடுவதாக அமைந்திருந்தது. மேலும் பொதுவுடமை இயக்கத் தலைமைகளே பார்ப்பனத் தலைமைகள் என்றும் ''புதிய ஜனநாயகம்'' அம்பேத்கார் ஒரு சீர்திருத்தவாதி என்று எழுதியதால் பலர் புரட்சிகர இயக்கத்திலிருந்து விலகி விட்டதாகவும் அவதூறு செய்தார். 'நுண் அரசியல் செயல்பாடுகள்' என்ற தலைப்பில் பேசிய நாகார்ஜுனன் ''அறிவது என்பது என்ன? அறிதல் முறைக்கும் நிகழ்வுகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?'' என்பதை மையமாக வைத்து இஷ்டத்திற்கு குழப்பினார். 'தனிமனித உளவியலின் மீதான அரசியலின் தாக்கங்கள்' என்ற தலைப்பில் பேசிய பிரேம் என்பவரும் பித்தம் பிடித்தவராய் உளறினார். ''இன்று பொருள் முதல்வாதமும் கிடையாது; கருத்து முதல்வாதமும் கிடையாது. ஒரு குழப்பமான விஞ்ஞான உலகத்தில் நாம் வாழ்கிறோம்'' என்பதும் ''அளவு மாற்றம் பண்பு மாற்றமடைய வேண்டும்; முதலாளித்துவ சமுதாயம் தோன்றியபோது முதலாளிகள் 20 சதவிகிதத்தினரே; முதலாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்காத போதே முதலாளித்துவ சமுதாயம் என்று மார்க்ஸ் எப்படி கூறினார்? எனவே இயங்கியல் பொருள் முதல்வாதம் பொய்த்துப் போய்விட்டது'' என்பதும் இவரது உளறல்.

மக்கள் கல்வி இயக்கம் - பேராசிரியர்கள் ஒரு பிரிவாகவும், தலித்கள் - அவர்களது ஆதரவாளர்கள் ஒரு பிரிவாகவும், தன்னார்வ குழுவினர் 'ஸ்டோன்வாஸ்' கும்பல்கள் ஒரு பிரிவாகவும் ஆக மூன்று வகையினர் ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டதைப் பார்க்க முடிந்தது. பலர் சுற்றுலாவிற்கு வந்திருப்பது போல பொழுதுபோக்கவும், அரட்டையடிக்கவும் செய்தனர். தன்னார்வக் குழுவைச் சேர்ந்த சில இளைஞர்களும், யுவதிகளும் நடந்துகொண்ட முறை அவர்களது வரைமுறையற்ற கலாச்சார சீரழிவுக்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டவர்கள் தங்கள் கருத்தை தெரிவிக்க இடையீடுகள் - வாய்ப்பு இருந்தது. இதில் காரைக்குடியிலிருந்து வந்திருந்த மக்கள் கல்வி இயக்கத்தைச் சேர்ந்தவர் கூறிய கருத்து, ஒட்டுமொத்த இந்த ஆய்வரங்கம் அவர்களது அணிகளுக்கே என்ன பயனை அளித்தது என்பதற்கு போதுமான ஆதாரமாய் உள்ளது. ''ரசிய - ஐரோப்பிய நிலைமையால் வேதனைக்குள்ளாகி ஏதாவது புதிய நம்பிக்கையூட்டும் கருத்துக்கள், வழிகாட்டுதல்கள் கிடைக்கும் என எதிர்பார்த்து இந்த ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டேன். நாகார்ஜுனன், பிரேம் ஆகியோரது கருத்துக்களும் வேணுவின் பேச்சும் இதை குழப்பங்களாக்கி அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படி குழப்புவது வேதனைக்குரியது'' என்றார்.

மொத்தத்தில் சில புதிய இடதுகள் தங்களின் கலைப்புவாத அரசியலுக்கு ஆள்சேர்க்கும் வேலையாகவும், தங்களது புரட்சியின் ஆதங்கத்தைச் சொரிந்து கொள்வதற்காகவுமே இந்த ஆய்வரங்கம் என்றால் மிகையாகாது. இதையும் பயன்படுத்தலாம் என்று பங்கேற்ற முற்போக்கு இளைஞர் அணியின் நிலை பரிதாபத்திற்குரியதானது. அத்தோடு மார்க்சிய ஆசான்களின் மீது வேணு போன்றவர்கள் அவதூறு செய்ததைக் கண்டித்துப் பேசவோ, விளக்கமளிக்கவோ முயலாமல் இருந்தது இவர்களின் சந்தர்ப்பவாதத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளது.

www.padippakam.com

# மன்னை மாணவர் போராட்டம் வெற்றி! அடக்குமுறை நீடிப்பு.

மன்னார்குடி அரசு கல்லூரி மாணவர்கள், விடுதி ஒன்று வேண்டி கடந்த தி.மு.க. ஆட்சியிலிருந்து போராடி வந்தனர். சுமார் ஒன்றரை வருடத்திற்குப் பிறகே அரசு விடுதி கட்டித் தருவதாக ஒத்துக் கொண்டுள்ளது. விடுதிக்காக தொடர்ந்து உறுதியாக சமரசமின்றி போராடிய மாணவர்கள், தங்கள் வெற்றி விழாவை 14-2-92 அன்று நடத்தினர்.

முன்பு, பந்தலடி கீழ்புறத்தில் போராட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாணவர் தோழர் க.ரவி என்பவர் தலைமையிலேயே இவ்வெற்றி விழாவையும் ஏற்பாடு செய்தனர். அழைப்பின் பேரில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF) யின் சார்பாக தோழர் மன்னை நன்னன் விழாவில் கலந்து கொண்டு பேசினார். போராட்டத்தின் போது மாணவர்கள் அனுபவித்த கொடுமையையும், ஓட்டுப் பொறுக்கிகளின் சந்தர்ப்பவாதத்தையும், அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளையும் நினைவுகூர்ந்து விட்டு, பெற்ற விடுதியை தக்க வைத்துக் கொள்ள அலட்சியமாக இருந்துவிடாமல் தொடர்ந்து போராட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறி தோழர் உரை நிகழ்த்தினார்.

தோழருக்குப் பின் பேசிய வழக்கறிஞர் சிவ.இராசேந்திரன் (திலீபன் மன்றம்), போலீசின் காட்டுமிராண்டித் தனங்களை அம்பலப்படுத்தி, போலீசு என்பது அழித்தொழிக்கப்பட வேண்டிய ரவுடிக்கூட்டம் என்பதையும் அவற்றிற்கு ஓட்டுப் பொறுக்கிகளின் நேரடி-மறைமுக ஆதரவையும் எடுத்துக் கூறினார். பேராசிரியர் அ.மார்க்சும், மக்கள் கல்வி இயக்கத்தைச் சேர்ந்த தோழர் இராசேந்திரனும், போலி கம்யூனிஸ்டுக் கட்சி (சி.பி.ஐ)யைச் சேர்ந்த நாகைத் தொகுதியின் முன்னாள் எம்.பி. செல்வராசும் பேசினர். எம்.பி. செல்வராசு பேசும்போது தனது பிழைப்புவாத புத்தியை பளிச்சென அடையாளங் காட்டிக் கொண்டார். இவரது பேச்சின் சாரம்:

"இந்த மேடையில் பேசிய சிலரின் பேச்சினால் காவல்துறை அதிகாரிகளின் மனம் புண்பட்டிருக்குமானால் அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். காவல்துறை மக்களுக்கு மிகவும் தேவையான சேவை செய்யக்கூடிய அமைப்பு. எனவே அதை எதிர்ப்பவர்கள் யாராயினும் தேசத் துரோகிகளே. நாட்டையும், இந்திய அரசியல் சட்டத்தையும் நாம் மதித்துப் போற்றி கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மேலும் அதிகாரிகளின் தயவினாலும் அரசின் கருணையினாலுமே விடுதி கிடைத்துள்ளது. எனவே இனிமேல் எதற்கும் போராடத் தேவையில்லை. போராடினால் அடிபட்டுத்தான் சாகவேண்டும். நாம் சாகப் பிறந்தவர்கள் அல்ல; 100 வயதுக்கு மேல் வாழப் பிறந்தவர்கள். எனவே சமரசத்தோடு வாழ கற்றுக் கொள்ளுங்கள்."

இதே செல்வராசு, அன்று போர்க்குணத்துடன் மாணவர்கள் போராடிய பொழுது அவர்களை மழுங்கடிக்கும் வகையில் போராட்டத்தை கைவிடுமாறு கேட்டு, சமரசம் பேச ஏற்பாடு செய்வதாக வந்து கெஞ்சினார்; இன்றும் பிசகாமல், ஆளும் வர்க்கத்தின் பிரச்சார ஊதுகுழல்களே வியக்கும்வண்ணம் பேசினார். ஆனால் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் அணுகுமுறையை நேரடி அனுபவம் மூலம் உணர்ந்திருந்த மாணவர்களிடையே எம்.பி.யின் பிரச்சாரம் எடுபடவில்லை.

கல்லூரி முதல்வர் இராச மாணிக்கமோ, மாணவர்களின் போராட்ட காலத்தில் மாணவர்களை மிரட்டியும் பல திரைமறைவு சதிவேலைகள் மூலமும் மாணவர்களின் போர்க்குணத்தையும் உறுதிப்பாட்டையும் குலைக்க முயற்சித்தார். இன்று மாணவர்களின் வெற்றியைக் கண்டும் பொறுக்க முடியாமல், மாணவர்களை 'கவனிக்க' வேண்டிய பொறுப்பை போலீசிடம் ஒப்படைத்து விட்டார். முதல்வரின் பக்கத் துணையோடு போலீசு, மாணவர்களை கண்ட இடங்களிலெல்லாம் தாக்குவதற்கு ஏகபோக அங்கீகாரம் பெற்று வெறியாட்டம் போடுகிறது. இதனைக் கண்டித்து மாணவர்கள் ஒருநாள் வகுப்பை புறக்கணித்து - வேலைநிறுத்தம் செய்தனர். போலீசின் நடவடிக்கையை முற்றிலும் நிறுத்தக் கோரி மாணவர்கள் தொடர்ந்து போராடுகின்றனர். இதற்கு ஆதரவாக புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி பிரச்சாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

**தகவல்: புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மன்னார்குடி.**

## விலை ஏற்றம்! பெண்கள் கொதிப்பு!

விலைவாசி ஏற்றத்தால் மக்களின் வாழ்வு சூன்யமாகி வருகிறது. விலையேற்றத்தைக் கண்டு மக்கள் முணுமுணுத்த காலமெல்லாம் போய் ஆர்ப்பாட்டம், மறியல், ரயில் எரிப்பு என போராடவும் தொடங்கிவிட்டார்கள். இந்நிலையில் குறிப்பாக பெண்களின் கோபாவேசத்தை வெளிப்படுத்தும் வண்ணமாகவும், "விலைவாசியால் வாழ்க்கையே வீதிக்கு வருகிறது; இன்னும் பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடப்பதா? இல்லை; போராட வீதிக்கு வந்துவிட்டோம்" என அறிவிக்கும் முகமாகவும் திருச்சியில் விலைவாசி எதிர்ப்பு பெண்கள் போராட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. 25-2-92 அன்று இக்குழு சார்பாக திருச்சி தெப்பக்குளம் தபால் அலுவலகத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 18 பேர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் சகோதரி வாணி சிறப்புரையாற்றினார். பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் கூடி ஆதரவளித்தனர்.

**தகவல்: விலைவாசி எதிர்ப்பு பெண்கள் போராட்டக்குழு, திருச்சி.**


## வரலாற்று திருப்புமுனை - ஆங்கிலம்

## THE HISTORIC TURNING-POINT

**(A LIBERATION ANTHOLOGY)** (ஒரு தொகுப்பாய்வு)

*— மகத்தான நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து உருவான "விடுதலை" (LIBERATION) இதழில் நவம்பர் 1967 முதல் 1972 வரை வெளியான முக்கியமான ஆவணங்கள், புரட்சியாளர்களின் கட்டுரைகள், தோழமைக் கட்சிகளின் விமர்சனக் குறிப்புகள், போராட்ட அனுபவத் தொகுப்பு அறிக்கைகள், தலையங்கக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூல்.*

*— புதிய தலைமுறையினரான இளம் தோழர்களுக்கு 25 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைத் தொகுத்தளிக்கும் பெட்டகம்.*

தோழர் சுனிதிகுமார் கோஷ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொகுக்கப்பட்ட இந்நூல் இரண்டு தொகுதிகளாக வெளிவர உள்ளது. முதல் தொகுதி மே மாதத்திலும், இரண்டாவது தொகுதி நவம்பரிலும் வெளிவரும்.

முன் வெளியீட்டு விலையாக ஒவ்வொரு தொகுதியும் ரூ.70/-க்கு கிடைக்கும். முதல் தொகுதிக்கான தொகை ஏப்ரல் 30க்குள்ளும், இரண்டாவது தொகுதிக்கான தொகை செப்டம்பர் 30க்குள்ளும் செலுத்தப்பட வேண்டும்.

நூல் வேண்டுவோர் ஒவ்வொரு தொகுதிக்கும் அஞ்சல் செலவுக்கு ரூ.12 சேர்த்து பின்வரும் முகவரிக்கு அனுப்புக.

**S.K. GHOSH**
**10, Raja Raj Krishna Street,**
**Flat 8,**
**CALCUTTA - 700 006.**


படிப்பகம்

... சென்னை - 600 015.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344






# இதுதான் இன்றைய இந்தியா

இது பெயருக்குத்தான் அரசினர் உயர்நிலைப்பள்ளி. இதை நிர்மாணித்ததிலிருந்து நிர்வகிப்பது வரை உழைக்கும் மக்களே! காஞ்சிபுரம்-குன்னான் குளத்தூரில் உள்ள இப்பள்ளி,சுற்றுவட்டார கிராமவாசிகளிடையே 23000 ரூபாய் வசூல் செய்து கட்டப்பட்டது. பள்ளிக்கு வேண்டிய எழுது பொருட்கள் கூட மீண்டும் மக்களிடையே 600 ரூபாய் வசூலித்து வாங்கப்பட்டதே!

படாலம் முதல் வேடந்தாங்கல் வரையுள்ள பத்து கிராமங்களின் மக்களுக்கு உயர்நிலைப்பள்ளி இல்லாததால் 90 சதவிகிதத்தினர் தங்கள் பிள்ளைகளை 5-வது, 8-வதோடு நிறுத்தி விடுவார்கள். கிராமவாசிகளில் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட கூலி ஏழை விவசாயிகள். இவர்களால் தங்களது 200 ரூபாய் மாத வருமானத்தில் பிள்ளைகளை பேருந்துக்கு காசு கொடுத்து தொலைதூர பள்ளிக்கு அனுப்பமுடிவதில்லை. எனவே பத்து கிராமத்திற்கு மையமான குன்னான் குளத்தூரில் உயர்நிலைப் பள்ளி வேண்டி அரசுக்கு மனு போட்டனர். பல ஆண்டுகளாகியும் எவ்வித நடவடிக்கையுமில்லாததால் தங்கள் முயற்சியிலேயே பள்ளியைக் கட்டி முடித்தனர். ஆயினும் அரசு கண்டுகொள்ளவே இல்லை. உயர்நிலைப் பள்ளிக்கு உரிய மேல்நிலை ஆசிரியர்களே இன்னும் இப்பள்ளிக்கு அரசால் நியமிக்கப்படவில்லை. 400 மாணாக்கர்களை இரண்டே ஆசிரியர்கள் கவனிப்பதால் தமிழைத் தவிர வேறு பாடங்களை இவர்களால் நடத்த முடியவில்லை. கணக்கு, அறிவியல், புவியியல் என்றாலே இம்மாணவர்களுக்கு என்னவென்றே தெரியாது! இன்னும் இப்பள்ளிக்கு ஆசிரியர்கள் வேண்டி இக்கிராம மக்கள் போராடி வருகிறார்கள்.



இது காஞ்சி காமகோடி பீடம் புதுப்பித்துக் கட்டுவதற்குரிய வரைபடம். ஏற்கனவே உள்ள காஞ்சி பீடத்தின் பல கட்டிடங்களை தரைமட்டமாக்கி விட்டு 8000 சதுர மீட்டர் பரப்பளவில் 5 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்க திட்டமிட்டுள்ளார்கள். இதை பிர்லா குடும்பத்தின் இந்துஸ்தான் அறக்கட்டளை கட்டித் தருகிறது. 9-2-92 அன்று இதற்கான அடிக்கல்லையும் நாட்டிவிட்டார்கள். புதிய திட்டத்தில் மூன்று ஆச்சாரியார்களையும் 1000 பொது மக்கள் வரை தரிசிக்கும் அளவிற்கு பெரிய அறைகள், பஜனை அறைகள், தங்கும் அறைகள் என வசதிகளும் நவீன வடிவமைப்புகளும் உண்டு. இத்தோடு தேவபாட சாலை ஒன்றும் கட்டியமைக்கிறார்கள். சங்கராச்சாரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சமஸ்கிருத (தேவ பாடை) பல்கலைகழகம் ஒன்றும் நிறுவபோகிறார்கள்.

ஊதாரிக் கும்பல் மடத்திற்கும் தேவ பாடை மொழிக்கும் பல கோடிகளை கொட்டியழிக்கிறார்கள், ஒருபுறம்! உழைக்கும் மக்கள் அடிப்படை தேவைகளுக்காக போராடியும், ஏன் தாமே முன்கை எடுத்தும்கூட விடிவில்லை. மறுபுறம்! உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை தொடர்ந்து புறக்கணிக்கும் பொறுப்பற்ற அரசும், ஊதாரி கும்பலும் நிலைக்கும் வரை அவலங்கள் தொடரத்தானே செய்யும்? இதை மாற்றுவது எப்போது?

padippakam